janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

நிறுவனர்: ப. ஜீவானந்தம்

மலர் 85 | 2023 ஜனவரி 15 - ஜனவரி 21 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 41




பணிகள் தொடரட்டும் — ப 02



இது தமிழ்நாடு! ஏன் இந்தக் கூப்பாடு? — ப 03



பொதுவுடைமைக் கொள்கையை திசை எட்டும் சேர்த்த இலக்கியப் பேராசான் ஜீவா நினைவு நாள் ஜனவரி – 18



# தமிழ்நாட்டு மக்களிடம் ஆளுநர் ரவி மன்னிப்புக் கேட்க வேண்டும்

## இரா.முத்தரசன் வலியுறுத்தல்

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில தலைமையகமான சென்னை பாலன் இல்லத்தில், மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது, நாடு விடுதலை பெற்று 75 ஆண்டுகளில், இந்தியாவில் உள்ள மாநிலங்களின் சட்டப் பேரவைகளிலும், யூனியன் பிரதேசங்களிலும் எந்தவொரு ஆளுநரும் மேற்கொள்ளாத நடவடிக்கையை ஆளுநர் ஆர்.என்.ரவி செய்துள்ளார்.**



குறிப்பாக ஆளுநர் உரை என்று சொல்லப்படும் இந்தப் புத்தகத்தில் உள்ள தமிழ்நாடு, திராவிட மாடல், தந்தை பெரியார், டாக்டர் அம்பேத்கர், பெருந்தலைவர் காமராஜர், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர், சமத்துவம், பெண்ணுரிமை, அமைதிப் பூங்காவாக தமிழகம் திகழ்கிறது ஆகிய வார்த்தைகளை தவிர்த்துவிட்டு ஆளுநர் ரவி படித்துள்ளார். இவ்வாறு அவர் செயல்பட்டது அரசியல் அமைப்பு சட்டத்திற்கு விரோதமானது. இந்தச் செயலில் வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் ஈடுபட்டிருக்கிறார்.

ஒன்றிய அரசின் கட்டளையை நிறைவேற்றுபவராக அவர் இருக்கிறார். ஆளுநர் ரவி ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தை சேர்ந்தவர், பாஜகவில் செயல்பட்டவர் என்பது எல்லோருக்கும் தெரியும். அவ்வாறு இருப்பதும் தவறு இல்லை. ஆனால், ஆர்.எஸ்.எஸ். கொள்கை குறித்து, பாஜக கொள்கை குறித்துப் பேச வேண்டும், விவாதிக்க வேண்டும் என்று அவர் விரும்பினால், ஆளுநர் பொறுப்பில் இருந்து விலகி விட்டு அவற்றைச் செய்யலாம். ஆளுநர் பொறுப்பில் இருந்து கொண்டு அப்படிச் செயல்படுவது ஜனநாயகத்திற்கு விரோதமானது. அரசியல் அமைப்பு சட்டத்திற்கு எதிரானது. ஆளுநரின் இந்த நடவடிக்கைக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கடும் கண்டனம் தெரிவித்துக் கொள்கிறது.

சட்டப்பேரவை என்பது தமிழ்நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்ற உறுப்பினர்கள் இடம்பெற்றுள்ள அவை. இந்த சட்டப்பேரவைக்கு புறம்பான முறையில், அதன் மான்புக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் செயல்பட்டதற்கு தமிழக மக்களிடம் ஆளுநர் ஆர்.என். ரவி பகிரங்கமாக மன்னிப்புக் கேட்க வேண்டும். ஆளுநரின் நடவடிக்கைக்கு கண்டனம் தெரிவித்து சட்டப்பேரவையில் கண்டனத் தீர்மானம் கொண்டுவந்து தமிழ்நாடு அரசு நிறைவேற்ற வேண்டும். ஆளுநர் ஆர்.என்.ரவியை ஒன்றிய அரசு உடனடியாகத் திரும்பப்பெற வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

தமிழ்நாட்டில் சர்ச்சைக்குரிய கருத்துகளைப் பேசி, கலகத்தை ஏற்படுத்தி ஆட்சியை கவிழ்ப்பதற்கு; அல்லது போட்டி அரசாங்கம்நடத்துவதற்கு ஆளுநரை ஒன்றிய அரசு பயன்படுத்துகிறது. அதற்கு ஆளுநர் ரவியும் உடன்பட்டுச் செயல்படுகிறார். அவருடையஇந்தநடவடிக்கைகள் ஜனநாயக விரோதமானது. இதனைக் கண்டித்து சட்டப்பேரவையில் கண்டனத் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும். ஆளுநர் ஆர்.என்.ரவியை ஒன்றிய அரசு உடனடியாகத் திரும்பப்பெற வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

இந்த கோரிக்கையை வலியுறுத்தி ஏற்கனவே ஆளுநர் மாளிகை முற்றுகைப் போராட்டம் நடத்தி இருக்கிறோம். தோழமைக் கட்சிகளுடன் பேசி தொடர் போராட்டங்களில் ஈடுபடவும் இருக்கிறோம் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கூறினார். இந்த செய்தியாளர் சந்திப்பின் போது, டி.ராமச்சந்திரன் எம்.எல்.ஏ., க.மாரிமுத்து எம்.எல்.ஏ., ஆகியோர் உடனிருந்தனர்.

# சட்டப்பேரவை மாண்பை களங்கப்படுத்திய ஆளுநர்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

நடப்பு ஆண்டின் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக் கூட்டத் தொடரை தொடங்கி வைத்து தமிழ்நாடு ஆளுநர் ஜன. 09 அன்று உரையாற்றியுள்ளார்.

அரசியலமைப்பு அதிகாரம் பெற்ற மாநில அரசின் தலைவர் ஆளுநர். இவர் அமைச்சரவையின் ஆலோசனைப்படி தான் செயல்பட முடியும். இந்த வகையில் தமிழ்நாடு அரசு தயாரித்து வழங்கும் உரையை ஆளுநர் சட்டமன்றப் பேரவையில் வாசிக்க கடமைப்பட்டவர். இந்த முறையை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை அமைந்த காலம் தொட்டு பின்பற்றி வருவது மரபாக அமைந்துள்ளது. இந்த முறையிதான் ஜன. 09 அன்று ஆளுநர் உரையாற்றும் நிகழ்வு நடந்திருக்க வேண்டும்.

ஆனால், ஆளுநர் ஆர்.என்.ரவி, சட்ட மன்றப் பேரவையின் மாண்புக்கு நீங்கா களங்கம் ஏற்படுத்தும் முறையில் மிகவும் தரம் தாழ்ந்து நடந்து கொண்டிருப்பது உச்சமட்ட அத்துமீறலாகும். அவையின் மரபுகளை உடைத்தும், தமிழ்நாட்டின் நன்மதிப்பு பெற்ற தலைவர்கள் பெயர்களையும், ஆளும் அரசு "திராவிட மாடல் ஆட்சி" என்று உரிமை கொண்டாடுவதை நிராகரித்தும் அவமதித்துள்ளார். தமிழ்நாடு அமைதி பூங்காவாக திகழ்வதை ஏற்க மறுத்துள்ள ஆர்.என்.ரவியின் அநாகரிகச் செயலை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது.

அண்மைக் காலமாக ஆளுநரும், பாஜக மற்றும் சங் பரிவார் கும்பலும் தமிழ்நாட்டின் அமைதி நிலையை சீர்குலைத்து, கலகத்தை ஏற்படுத்தும் நோக்கத்தோடு செயல்பட்டு வருவதன் தொடர்ச்சியாகவே ஆளுநர் நடவடிக்கை அமைத்திருக்கிறது. இது ஜனநாயக நடைமுறைகளுக்கும், அமைதி வாழ்வுக்கும் பேராபத்து ஏற்பட்டிருப்பதை வெளிப்படுத்தியுள்ளது. இந்தப் பேராபத்தை எதிர் கொண்டு முறியடிக்க, தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு போராட முன்வர வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

**தோழர் சி.எஸ்.கட்டிட நிதி**

| | |
|---|---|
| தனி மாவட்டம் (V) (வங்கி) | ரூ.50,000 |
| திருமதி ஜி.சிவகாமி போரூர் | ரூ.10,000 |

பொங்கட்டும் சமத்துவப் பொங்கல்

வாசகர்கள், விளியோகஸ்தர்கள், சந்தாதாரர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும் இனிய பொங்கல் திருநாள் நல்வாழ்த்துகளை ஜனசக்தி தெரிவித்துக் கொள்கிறது.

– ஆசிரியர் குழு



கட்சிக் கடிதம்

# பணிகள் தொடரட்டும்



பேரன்புமிக்க தோழர்களே!

**தமிழர்களின் தொன்மை சிறப்பான பொங்கல் பண்பாட்டு விழாவை கொண்டாடி மகிழ தயாராகி வருவீர்கள்! இயற்கையோடு இணைந்தும், கலந்தும் வாழும் வாழ்க்கை முறையை கொண்டாடும் பொங்கல் விழா! ஆற்றங்கரைகளிலும், நீர் வழிப் பாதைகளிலும் உருவான உழவுத் தொழில், ஓரிடத்தில் நிலைத்து வாழும் வாழ்க்கை முறைக்கு ஆதாரமானது.**

உழவர் பெருமக்கள் உடல் உழைப்போடு, கால்நடைகளின் உழைப்பையும் சேர்த்து, உற்பத்தியின் ஆற்றலை உயர்த்தினர்.

இயற்கையில் கிடைத்த தண்ணீரை, நிலத்தில் பாய்ச்சி, உழவுத் தொழில் மூலம் உணவு தானியங்களை உற்பத்தி செய்யத் தொடங்கினர்.

விதைப்பதும், அதனை கண்ணின் கருவிழி காக்கும் இமைபோல் காத்து, வளர்த்ததும், அதன் விளைச்சல் பலனை அறுவடை செய்யும் போது ஏற்படும் வெற்றிப் பெருமிதம். அடடா, உள்ளம் துள்ளிக் குதிக்கும் குதூகலம்.

தை முதல் நாளுக்கு முந்தைய நாள். மார்கழி மாதக் கடைசி நாள் "பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல காலவகையினானே" என்று நன்னூல் கூறுவது போல், பயன்படுத்தி காலவதி ஆகிவிட்ட பொருள்ளை கழித்தும், புதியவை சேர்க்கும் பணியில் ஈடுபடுகின்றனர். இது "போகிப் பண்டிகை"யாக கடைப்பிடிக்கபடுகிறது.

தைத் திங்கள் முதல் நாளில் புதுப்பானை, புது அரிசி, புது வெல்லம், ஏலக்காய், முந்திரி என அனைத்தும் சேர்த்து சர்க்கரைப் பொங்கல், மற்றும் வெண் பொங்கல் வைத்து மகிழ்கிறார்கள்.

இவைகளோடு வயலில் விளைந்த காய், கிழங்கு என சேர்த்து சமைத்து அருகில் உள்ள சுற்றத்தாரை அழைத்து கூடி உண்டு மகிழும் விழா!

மனிதர்களோடு இணைந்து, உழைப்பை கொடுத்த கால்நடைகளுக்கு விழா மாட்டுப் பொங்கலாகக் கொண்டாடப்படுகிறது

மூன்றாம் நாள் பெண்கள் கூடி கும்மியடித்து மகிழும் கன்னிப் பொங்கல் விழா.

தமிழர்கள் வாழ்வில் பன்னெடுங்காலமாக தொடரும் தைப் பொங்கல் திருவிழா உலகில் எங்கும் வாழும் தமிழர்கள் கொண்டாடி மகிழ்ந்து வருகின்றனர்.



தை பிறந்தால், வழி பிறக்கும் என தன்நம்பிக்கை தரும் பொங்கல் திருநாளில் தமிழ்நாட்டு பெருமக்கள் அனைவருக்கும் கட்சியின் மாநிலக்குழுவின் தோழமை நிறைந்த நல்வாழ்த்துக்கள்.

பொங்கல் விழா மகிழ்ச்சி பொங்கி பிரவாகிக்கும் நன்னாளில் தமிழுக்கு, தமிழர்களுக்கு, தமிழ் நாட்டிற்கு எதிராக பேசுபவர்களையும், உழைப்பின் பலனை உறிஞ்சிக் குடிக்கும் வன் நெஞ்சக்காரர்களின் செயல்பாடுகளையும் மறந்து விட முடியாது.

இந்த சமூகப் புல்லுருவியின் விளைவுகளை உழைக்கும் மக்களிடம் தொடர்ந்து எடுத்துக் கூறி, விழிப்புணர்வூட்டும் கடமையை கருத்தில் கொள்ள வேண்டும்.

இந்த மாதம் பதினெட்டாம் நாள் (18.01.2023) இலக்கியப் பேராசான், சுய மரியாதை சுடரொளி, சமத்துவப் போராளி தோழர் ஜீவாவின் நினைவு நாள்.

1963 ஜனவரி 18 ஆம் தேதி ஜீவாவின் உயிர் வாழ்வு நிறைவடைந்தது. ஆனால் அவர் வாழ்ந்த காலத்தில் வழங்கிய அறிவாயுதம், சமூக மாற்றப்பணிக்கான பங்களிப்பு மனித குலம் உள்ளவரை நீடித்து வாழும் சாகாவரம் பெற்றவையாகும்.

புதியதோர் உலகம் செய்வோம்
ஜனசக்தி
மக்கள் வாரஇதழ்

அவரது வாழ்வும், பணியும் நாட்டு மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டிய பெரும் பொறுப்பும், கடமையும் நமக்குண்டு.

தோழர் ஜீவா, அவரது இளம் பருவம் தொடங்கி, இறுதி மூச்சிருந்த வரை சமூக விடுதலைக்கு அவர் ஆற்றிய பணிகளை இளைய தலைமுறைக்கு எடுத்துக் கூறுவது நமது தலையாய கடமையாகும்.

சாதிய ஆதிக்கத்திற்கு எதிராக அவர் நடத்திய போராட்டத்தை இன்றைக்கு மிகத் தீவிரமாக நடத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. நாட்டில் ஆங்காங்கே ஆட்டம் போடும் தீண்டாமை செயல்களை கண்டு ஜீவாவைப் போல் சினம் கொண்டு எதிர்கொள்ள வேண்டியதை உணர வேண்டும்.

நாட்டின் விடுதலைப் போராட்டக் களத்திலும், சமூக விடுதலைப் போர்க்களத்திலும் ஜீவாவின் பங்களிப்பு மகத்தானது. ஈடு இணையற்றது.

பண்பாட்டு தளத்தில் கலை, இலக்கியம் புராண இதிகாசங்களில் மூழ்கிக் கிடந்த காலத்தில், தமிழர்களின் தொன்மை மரபில் நின்று கலையும், இலக்கியமும் மக்களுக்கானதே என்று முழங்கியவர் ஜீவா.

கட்சியின் முடிவை ஏற்று, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் கண்டதுடன், அதன் கருத்துப் போராட்ட ஆயுதமாக "தாமரை" இலக்கிய மாத இதழ் மலர வழி கண்டவர்.

**அவர் தொடக்கிய கலை இலக்கியப் பெருமன்றம் ஆல்போல் தழைத்து / அருகு போல் வேரோடி தமிழ்நாடு முழுவதும் பரவிப் படர்ந்து வளர்ந்தது. ஜீவாவின் கலை இலக்கிய பெருமன்றத்தில் உருவான, எழுத்தாளர்கள், கவிஞர்கள், சிறுகதையாளர்கள், நாவலாசிரியர்கள், கதை வசன கர்த்தாக்கள், பாடகர்கள், பேச்சாளர்கள் என பல ஆயிரமாயிரம் படைப்பாளிகள் வளர்ந்த வரலாறு காலத்தின் கல்வெட்டாக பதிந்து கிடக்கிறது.**

கம்பன் படைத்த ராம காவியத்தை பாமரனுக்கும் கொண்டு சேர்த்த ஜீவா, புதுமை படைத்த, படைப்புக்கு புது நெறி வகுத்த புலவன் பாரதியின் புகழ்பூத்த வரலாற்றை வீதிகள் தோறும் எடுத்துக் சென்ற சாரதியாக திகழ்ந்தவர்.

கம்பனின் கவிநயம் குறித்து ஜீவா பேசும் போது, அங்கே, ஜீவா வடிவில் கம்பன் தோன்றி பேசுவதாகவே கருத வேண்டும் என நேரில் கேட்டோர் பதிவு செய்துள்ளனர்.

பாரதியின் பாடல்களை ஜீவா பேசினால் அங்கே பாரதியே வந்தது போல் இருக்கும் என்று சிலாகித்துப் பேசப்படுவதை அறிவோம்.

தேசப்பிதா காந்தியால் விடுதலைப் போராட்ட மாவீரன் கப்பலோட்டிய தமிழன் வ.ஊ.சி, தந்தை பெரியார், மூதறிஞர் ராஜாஜி, வரலாற்று நாவலாசிரியர் கல்கி, அண்ணா, பாவேந்தர் பாரதிதாசன், காரைக்குடி சா.கணேசன், முத்தமிழ் அறிஞர் கலைஞர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., நடிகர் திலகம் சிவாஜி கணேசன், கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், நடிகவேள் எம்.ஆர். ராதா என எண்ணற்றோரால் போற்றி புகழப்பட்ட மகத்தான தலைவர் நம் பெருமைக்குரிய ஜீவா.

மிகச் சிறந்த கம்யூனிஸ்ட்டாக வாழ்ந்து காட்டிய மாமனிதர்.

அவர் தொடங்கிய 'தாமரை' மாத இதழ் தொடர்வது மட்டுமல்ல, அதன் விற்பனை பன்மடங்கு பெருகிட வேண்டும்.

அவரை ஆசிரியராக கொண்டு தொடங்கப் பெற்ற 'ஜனசக்தி' வார இதழ் விற்பனை பன்மடங்கு பெருகிடல் வேண்டும்.

அவர் தொடங்கிய தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் ஊர்தோறும் அமைந்திடல் வேண்டும்.

இம் மூன்று கடமைகளையும் நிறைவேற்றிட நாம் அரும்பாடு படவேண்டும். அவரின் நினைவு நாளில் இவைகளை நிறைவேற்றிட சபதம் ஏற்போம். ஏற்றுக் கொள்ளும் சபதத்தை நிறைவேற்ற முனைப்போடு பணியாற்றிட வேண்டும்.

தோழர்களே, மாற்றங்கள் என்பது தொடர்வது தான். மாறிவரும் சூழல்களுக்கு தக்கபடி தகவமைத்துக் கொள்வதில் முன்னேற்றம் காண முடியும்.

**சமூக அமைப்பில் முதலாளித்துவம் ஆரம்ப கால வடிவத்தில் இன்று இல்லை. சமூகத்தில் அது தொடர்ந்து நெருக்கடிகளை சந்தித்து வருகிறது. ஆனாலும் தொடர்ந்து தப்பிப் பிழைத்து புதிய வடிவில் வாழ்ந்து வருகிறது. அரசு அதிகாரத்தின் துணை கொண்டு வாழ்ந்து வரும் முதலாளித்துவம் நெருக்கடிகளுக்கு தீர்வு கண்டு, நீடித்து வாழ இயலாது. அது மடிந்து போவதை யாரும் தடுக்க முடியாது.**

ஆனால், முதலாளித்துவம் உருவாக்கும் நெருக்கடியில் சிக்கிச் சீரழியும் மக்கள் கோபம் கொண்டு, பொங்கி எழுந்து, முதலாளித்துவ கொடூர ஆட்சிக்கு எதிராக போர்களம் அமைப்பார்கள் என்பதும் ஆட்சியாளர்களுக்கு நன்கு தெரியும்.

அத்தகைய பாதிப்பு வந்து விடாமல் தடுத்து தன்னை தற்காத்துக் கொள்ளத்தான் இனவெறி, மதவெறி, சாதி வெறி, மொழி வெறி, கடவுள் வெறி என பல கற்பிதங்களை உருவாக்கி, அதன் மூலம் மக்களை பிளவுபடுத்தும் வெறித்தனத்தில் ஈடுபட்டு வருகிறது.

சுரண்டலின் கோரத் தாண்டவத்தை முற்றிலுமாக, ஆதாரப்பூர்வமாக, விஞ்ஞான கண் கொண்டு உணர்த்திய பெருமகனார் மாமேதை மார்க்ஸ், "உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள் இழக்கப்போவது கை விலங்கு ஆனால், பெறப்போவது பொன்னுலகம்" என்றுரைத்தார்.

மாமனிதர் மார்க்ஸ் உணர்த்திய இப்பேருண்மையை முதலாளிமார்கள் நன்குணர்ந்து, உலக முதலாளிகள் ஒன்று திரண்டுள்ளனர்.

முதலாளிகளாக, பெருமுதலாளிகளாக, ஏகபோக முதலாளிகளாக, உலக முதலாளிகளாக இன்று வளர்ந்தும், உயர்ந்தும் நிற்கின்றனர்.

தொடர்ச்சி 4ம் பக்கம்



டி.எம்.மூர்த்தி

# இது தமிழ்நாடு! ஏன் இந்தக் கூப்பாடு?

**ஆன்லைன் சூதாட்டத்துக்கு அபயம் தந்து, தடை செய்யவிடாமல் தடுத்துக் காப்பாற்றி ஆட்கொண்ட 'மேதகு' ஆளுநர் ஆர்.என். ரவி, ஆளுநர் மாளிகையில், காசி தமிழ்ச் சங்கம 'காரிய கர்த்தா'க்களை கவுரவிக்கும் நிகழ்ச்சியில், உரையாற்றிய போது, தமிழ்நாடு எனும் பெயரைச் சங்காரம் செய்ய வேண்டும் எனக் கருத்து உரைத்து இருக்கிறார். இது ஆர்எஸ்எஸ்ஸின் கருத்து என்பதே இதன் அர்த்தம்.**

### மாற்றுக் கருத்தே கூடாதா?

தமிழகத்தில் ஒரு வித்தியாசமான அரசியல் சூழல் உள்ளதாம். எல்லாவற்றுக்கும் நாங்கள் திராவிடர்கள் என்று சொல்கிறார்களாம். இந்தியா முழுவதும் ஒரு செயல் திட்டம் இருந்தால், அதனை வேண்டாம் என்று தமிழ்நாடு சொல்கிறதாம்.

மாற்றுக் கருத்துச் சொன்னால், உடனே மரண தண்டனை தருவது தானே, பாசிசத்தின் பழக்கம். எனவே "தமிழ்நாடு என்று சொல்வதைவிட, தமிழகம் என்று சொல்வதுதான் சரியாக இருக்கும்" என்று முதலில் பெயர் மீது கை வைத்திருக்கிறார் அந்த 'மேதகு'!

இந்திய விடுதலைப் போராட்டத்தின் போது ஒதுங்கி நின்று, காட்டியும் கொடுத்த கும்பலுக்கு, தமிழ்நாடு என்ற பெயர் வைப்பதற்கு நடத்தப்பட்ட போராட்ட வரலாறு எப்படித் தெரியும்?

### பெயருக்கான போராட்டம்:

தமிழ்நாடு என்று அதிகாரப்பூர்வமாக பெயர் மாற்றி 52 ஆண்டுகள் ஆகிவிட்டன. பெயரை மாற்றுவதற்காக நீண்ட காலமாக தமிழ்நாடு போராடி வந்திருக்கிறது.

### விவசாயிகள் வைத்த பெயர்:

காவிரிப்படுகையில் 1942ல் தென்பரை கிராமத்தில் சாணிப்பால் சவுக்கடியை எதிர்த்து நடந்த விவசாயிகள் கிளர்ச்சிக்கு பின்பு, 1943இல் மன்னார்குடியில் விவசாயிகள் மாநாடு நடைபெற்றது. அது உருவாக்கிய அமைப்புக்கு "தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்" என்று பெயரிடப்பட்டது.

போராட்டத்துக்கும், மாநாட்டுக்கும் தலைமை தாங்கி, அமைப்புக்கு தமிழ்நாடு என்று பெயரிட்டவர் ஒரு தமிழர் அல்ல. அவர் கன்னடத்து பிராமணர் தோழர் பி. சீனிவாசராவ். ஒடுக்கப்பட்ட மக்களின் இதயங்களில் இன்றும் வழிபாட்டுக்குரியவராய் வாழ்ந்து கொண்டிருக்கிற கம்யூனிஸ்ட்.

தமிழகம், ஆந்திரா, கர்நாடகா, கேரள மாநிலங்களை உள்ளடக்கி 'மெட்ராஸ் பிரசிடென்சி' செயல்பட்டுக் கொண்டிருந்த போது நிகழ்ந்தது இது.

இதற்கு முன்பு தமிழ்நாடு என்ற பெயரைத் தாங்கி வேறு எந்த அமைப்பும் இருந்ததாக தெரியவில்லை.

ஆக நாம் வாழும் மாநிலத்துக்கு தமிழ்நாடு என்று முதலில் பெயர் வைத்தவர்கள் விவசாயிகளே!

### தொடர்ந்தனர் தொழிலாளர்கள்:

இந்தியா முழுமையும் தொழிலாளர்களுக்கான மத்திய தொழிற்சங்க அமைப்பாக 1920ல் இருந்து ஏஐடியூசி மட்டுமே செயல்பட்டு வந்தது. விடுதலை வரப்போவது அறிந்ததும், பிர்லாவின் மாளிகையில் வைத்து, ஐஎன்டியூசி என்ற ஒரு அமைப்பை காங்கிரஸ் உருவாக்கி தொழிலாளர் ஒற்றுமை உடைத்தது.

ஏஐடியூசி இங்கு 'மெட்ராஸ் பிரசிடென்சி டிரேட் யூனியன் காங்கிரஸ் (எம்பிடியுசி)' என்று அழைக்கப்பட்டது. அதன் பொதுச் செயலாளராக இருந்தவர் தமிழர் அல்ல, ஒரு மலையாளியான தோழர் பாலசந்திர மேனன். அவரும் கம்யூனிஸ்டுதான்.

அந்த எம்பிடியுசி, 1952 ஆம் ஆண்டில் தனது பெயரை "தமிழ்நாடு தொழிற்சங்க காங்கிரஸ்" என்று மாற்றிக் கொண்டது. இன்றுவரை அது தமிழ்நாடு ஏஐடியூசி என்றே அறியப்படுகிறது.

தமிழ்நாடு தொழிற்சங்க காங்கிரசின் சார்பில் 'தொழிற்சங்க செய்தி' என்ற இதழ் 1953 டிசம்பர் 15ஆம் தேதி துவங்கப்பட்டது. அந்த இதழ் இன்றும் வெளிவந்து கொண்டிருக்கிறது.

ஆகவே விவசாயிகள் முன்மொழிந்த தமிழ்நாடு என்னும் பெயரை வழிமொழிந்தவர்கள் இம்மாநிலத்தின் தொழிலாளர்களே!

### ம.பொ.சி.-ஜீவா:

1956ம் ஆண்டு நவம்பர் முதல் தேதி, மாநிலங்கள் மறுசீரமைப்புச் சட்டம் அமலாக்கப்பட்டு, மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. கேரளா, கர்நாடகா, ஆந்திர மாநிலங்களின் பிரிப்புக்குப் பின், மெட்ராஸ் பிரசிடென்சி பெயர் மாறி "மெட்ராஸ் ஸ்டேட்" உருவானது. சென்னை, திருத்தணி, கன்னியாகுமரி மாவட்டம் உள்ளிட்ட எல்லைப்புற தமிழ் பேசும் பகுதிகளை, தமிழ்நாட்டுக்குள் நிறுத்துவதற்கு, நடத்தப்பட்ட போராட்டம், தனியாகப் பயில வேண்டியது. அதிலும் தலைமையேற்ற ம.பொ.சி.யின் தோளோடு தோள் நின்று போராடியது தோழர் ஜீவாவும் கம்யூனிஸ்ட்களும் தான்.

### கம்யூனிஸ்ட் பெருமிதம்:

அதுமட்டுமின்றி "மதராஸ் மனதே" என்று, ஆந்திராவோடு சென்னையைச் சேர்க்க வேண்டும் என்ற போராட்டம் ஆந்திராவில் நடந்து கொண்டிருந்தபோது, 'மதராஸ் தமிழ்நாட்டுக்குரியது' என்று ஆந்திர மாநில கம்யூனிஸ்ட் கட்சி தீர்மானம் நிறைவேற்றியதும் கவனத்துக்குரியது.

### சங்கரலிங்கனார் மரணம்:

'மெட்ராஸ் ஸ்டேட்' என்பதை 'தமிழ்நாடு' எனமாற்ற வேண்டும் என்பது உள்ளிட்ட பல கோரிக்கைகளுக்காக க.பெ.சங்கரலிங்க நாடார் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டார். 77 நாட்கள் உண்ணாவிரதம் இருந்த அவரை கைது செய்து, மதுரை எர்ஸ்கின் அரசு மருத்துவமனையில் வைத்து பலவந்தமாக குளுக்கோஸ் புகட்டினார்கள். சிறுநீர் பிரியவில்லை என்று அறுவை சிகிச்சையும் செய்தார்கள். அவர் 13.10.1956 அன்று இறந்துவிட்டார்

இறப்பதற்கு முன்பு, தனது உடலை கம்யூனிஸ்டுகளிடம்தான் ஒப்படைக்க வேண்டும் என்று கூறியிருந்தார். கம்யூனிஸ்டுகளான கே.டி.கே.தங்கமணி, கே.பி.ஜானகி அம்மாள், எம்.என்.ஆதி நாராயணன் ஆகியோர்தான் அவரது சடலத்தை பெற்று நல்லடக்கம் செய்தார்கள்.

### தமிழ்நாடு என அழை:

சங்கரலிங்கனார் நினைவாக 22.10.1956ம் தேதியன்று நடைபெற்ற அனைத்து கட்சி பொதுக்கூட்டத்தில் தமிழ்நாடு என்று பெயர் சூட்ட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த நிகழ்வை அடுத்தநாள் ஜனசக்தி இதழ் "இது தமிழ்நாடு! இதைத் தமிழ்நாடு என அழை! என்று தலைப்பு செய்தியாக வெளியிட்டிருந்தது (இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது)

1961 பிப்ரவரி 24ஆம் தேதியன்று மெட்ராஸ் ஸ்டேட் சட்டசபையில் பிரஜா சோசலிஸ்ட் கட்சியின் உறுப்பினர் தமிழ்நாடு என்று பெயர் சூட்ட வேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழிந்தார்.



ஜனசக்தி
தின இதழ்
ஆசிரியர்: ப.ஜீவானந்தம்.

மலர் 13] சென்னை 22-10-56 [இதழ் 67

இது தமிழ்நாடு! இதை தமிழ்நாடு என அழை!

50 ஆயிரம் பேர் கூட்டத்தில் சர்வ கட்சித் தலைவர்கள் முழக்கம்

சங்கரலிங்க நாடார் பேரில் சென்னையில் சபதம்

கட்டுப்பாடற்ற தனியுடமை ஜனநாயகத்திற்கு முரணானது

உலக பாங்க் தலைவருக்கு பிரதமர் நேருவின் பதில்

விவாதத்துக்கு எடுக்க மறுத்த போது, அதை எதிர்த்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், திராவிட முன்னேற்றக் கழகமும் சட்டப்பேரவையில் இருந்து வெளிநடப்பு செய்தன.

### இருதலைக் காங்கிரஸ்:

அன்று சட்டப்பேரவை முன்னவர் சி. சுப்பிரமணியம் அவர்கள். அவர் ஒரு இடைநிலை உடன்பாட்டுக்கு வந்தார். தமிழில் சொல்லும் போது தமிழ்நாடு அரசு என்று சொல்லலாம்; அதே சமயத்தில் ஆங்கிலம் அல்லது பிற மொழிகளில் 'மெட்ராஸ் ஸ்டேட்' என்று எழுத வேண்டும். அவ்வாறே தமிழ் மொழியில் வந்த ஆணைகள், அறிக்கைகளில் தமிழ்நாடு அரசு என்று சொல்லப்பட்டது.

ஆனால் மத்திய அரசு அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்து, தமிழ்நாடு அரசு என பெயர் மாற்றம் செய்ய மறுத்துவிட்டது.

### புபேஷ் குப்தா முன்வைத்த மசோதா:

1963 மே மாதத்தில் நாடாளுமன்றத்தில் 'மெட்ராஸ் ஸ்டேட்'டுக்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்ட வேண்டும் என்ற தனிநபர் மசோதாவை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் புகழ்வாய்ந்த தலைவர் தோழர் புபேஷ் குப்தா முன்வைத்தார். அது ஏதோ ஒரு வரி தீர்மானம் அல்ல. ஏன் மாற்ற வேண்டும் என்பதற்கான அடுக்கடுக்கான வாதங்களை அவர் முன்வைத்தார். அவர் வங்காளத்தைச் சேர்ந்தவர். அந்த முழு ஆங்கில உரையும், விவாதங்களும் புத்தகமாக வந்திருக்கிறது. அதன் தமிழ் மொழிபெயர்ப்பையும் புத்தகமாக நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியிட்டிருக்கிறது.

அப்போது நாடாளுமன்ற அவையில் அறிஞர் அண்ணா அவர்களும் இருந்தார்கள். புபேஷ் குப்தாவின் சட்ட முன்வடிவை ஆதரித்து அவரும் பேசியிருக்கிறார்.

### எது விளம்பரம்:

புபேஷ் குப்தாவுக்கு 'மெட்ராஸ் ஸ்டேட்' பெயரை மாற்றுவதில் என்ன அக்கறை? அதை தமிழ்நாடு என்று மாற்றுவதால் என்ன நன்மை ஏற்படப்போகிறது? சேர நாடு, பாண்டிய நாடு, சோழ நாடு என்றுதான் இருந்ததே தவிர, தமிழ்நாடு என்று இதற்கு முன்பு சொல்லப்பட்டதே இல்லை. கம்யூனிஸ்டுகள் ஒரு விளம்பரத்துக்காக இவ்வாறு அரசியல் செய்கிறார்கள் என்றெல்லாம் காங்கிரஸ் உறுப்பினர்கள் பேசினார்கள்.

புபேஷும், அண்ணாவும் இதற்கு அளித்த பதில்கள் வரலாற்று சிறப்பு வாய்ந்தவை. அவை அனைத்தையும் இங்கு விவரிக்க இயலாது.

### நெற்றியில் அடித்த பதில்கள்:

எனினும் ஒரு பானை சோற்றில் பதம் பார்ப்பதற்காக சில பருக்கைகள்:

1800 ஆண்டுகளுக்கு முந்தைய இலக்கியமான பதிற்றுப்பத்து, தமிழ்நாடு என்று பேசுகிறது. அதுமட்டுமின்றி பரிபாடல், சிலப்பதிகாரம், மணிமேகலை உள்ளிட்ட பழந்தமிழ் காப்பியங்களில் தமிழ்நாடு என இருக்கிறது.

தமிழ்நாடு எனப் பெயர் மாற்றுவதால் என்ன லாபம் என்கிறீர்களே, அப்படி மாற்றுவதால் உங்களுக்கு என்ன நஷ்டம்?

நாடாளுமன்றம் என்பதை 'லோக்சபா' என்றும் மாநிலங்களின் அவை என்பதை 'ராஜ்யசபா' என்றும் குடியரசு தலைவர் என்பதை 'ராஷ்டிரபதி' என்றும் ஏன் பெயர் மாற்றினீர்கள்? அதனால் உங்களுக்கு என்ன லாபம் கிடைத்தது?

'மெட்ராஸ்' என்பது ஒரு ஊரின் பெயர். நாங்கள் மாநிலத்துக்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்ட வேண்டும் என்று கோருகிறோம்.

இது தவறு என்றால், கேரளாவுக்கு திருவனந்தபுரம் என்றும், ஆந்திராவுக்கு ஹைதராபாத் என்றும், குஜராத்துக்கு அகமதாபாத் என்றும், வங்காளத்திற்கு கல்கத்தா என்றும் பெயர் மாற்றுவீர்களா?

அண்ணா பேசும்போது சொன்னார் "கம்யூனிஸ்டுகள் விளம்பரத்துக்காக மசோதா கொண்டு வந்தார்கள் என்கிறீர்கள்! உங்கள் கட்சியும், ஆட்சியும் விளம்பரம் செய்யவில்லையா? இந்த மசோதாவை நிறைவேற்றி விட்டீர்கள் என்றால் உங்களுக்குப் பெயர் கிடைக்கும். இதை தோற்கடித்தீர்கள் என்றால், பூபேஷ் குப்தா தமிழ்நாட்டுக்கு வரும்போது 'நான் உங்கள் மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் வைக்க முன்மொழிந்தேன். ஆனால் இந்த காங்கிரஸ் அரசாங்கம் தோற்கடித்து விட்டது' என்று சொல்வார். தமிழ்நாட்டு மக்கள் அவரைக் கட்டி அணைத்துக் கொள்வார்கள். நீங்கள் தான் அவர்களுக்கு விளம்பரம் தேடித் தருகிறீர்கள்".

### தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற பின்:

1967ல் சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று திமுக ஆட்சி அமைத்தது ஜூலை மாதம் 18 ஆம் தேதி, அன்று தமிழ்நாடு என பெயர் மாற்றம் செய்ய சட்டசபையில் முன்வடிவு தாக்கல் செய்யப்பட்டது அப்போது காங்கிரஸ் தலைவர் கருத்திருமன். 'மெட்ராஸ்

தொடர்ச்சி 4ம் பக்கம்

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 85 இதழ் 41

# ஆளுநர் பொறுப்பில் இருந்து ஆர்.என்.ரவியை வெளியேற்றுக!

தமிழ்நாடு சட்டப்பேரவையில் உரையாற்ற வந்த ஆளுநர் ஆர்.என்.ரவி, அரசு தயாரித்து தந்த உரையில் சில சொற்களையும், சொற்றொடர்களையும் தவிர்த்து விட்டு, தானாகவே சில பத்திகளை சேர்த்து பேசி இருக்கிறார்.

தவிர்த்த சொற்கள் முக்கியமானவை.

'மதநல்லிணக்கம்', 'பல்லுயிர் ஓம்புதல்', 'சுயமரியாதை', 'சமூகநீதி', 'சமத்துவம்', 'பகுத்தறிவு', 'பெண்ணுரிமை' ஆகிய சொற்களையும், பெரியார், அம்பேத்கர், காமராசர், அண்ணா, கலைஞர் ஆகிய தலைவர்களின் பெயர்களையும் உச்சரிக்க கூடாது என அவராகவே முடிவெடுத்துள்ளார்.

இவற்றில் அவருக்கு உடன்பாடு இல்லாமல் இருக்கலாம்.

அவற்றை எதிர்த்து பேச அவர் விரும்பினால், பதவி விலகி, தமிழ்நாட்டின் வாக்காளராக பதிவு செய்துகொண்டு, இந்தக் கொள்கைகளுக்கு எதிரான பிஜேபி சார்பில் சட்டப் பேரவைத் தேர்தலில் போட்டியிட்டு, வென்று சட்டப் பேரவைக்குள் நுழைய வேண்டும்.

ஆளுநராக இருப்பதெனில், தமிழ்நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு எழுதித் தருவதை எழுத்துப் பிறழாமல் படித்து விட்டு அமர வேண்டும். அந்த உரை ஒன்றும் அவர் மேடையேறும் நேரத்தில் அவர் கையில் திணிக்கப்பட்டதல்ல. முன்னதாகவே ஜனவரி 5ஆம் நாள் அவருக்கு அனுப்பப்பட்டது. எந்த மாற்றமும் சொல்லாமல், அதனை ஏற்று ஜனவரி 7ஆம் தேதி கையெழுத்திட்டிருக்கிறார்.

அரசு எழுதிக் கொடுத்ததில் உடன்பாடு இல்லை என்பதில் நியாயமில்லை. ஆனால் 'தமிழ்நாடு' என்பது ஒன்றிய அரசு அங்கீகரித்த பெயர்தானே! அதைச் சொல்ல மறுத்து, தமிழகம் என்று மாற்றுவதற்கு இவர் யார்?

இதெல்லாம் கூடப் போகட்டும்! அத்தனை தவறுகளையும், அரசியல் சாசன விதிகளை பற்றிய அச்சமே இல்லாமல், அவர் அரங்கேற்றிக் கொண்டிருந்தபோது, அமைச்சர்களும் ஆளுங்கட்சியின் உறுப்பினர்களும் அமைதி காத்து கேட்டுக் கொண்டு தானே இருந்தார்கள்? கடைசியில் ஆளுநர் தன்னிச்சையாக செய்த திருத்தங்களை பேரவை ஏற்கவில்லை என்று தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது. இதைவிட கண்ணியமாக வேறு எவ்வாறு எதிர்ப்பைக் காட்ட இயலும்?

எந்த வினைக்கும் எதிர் வினை உண்டு. ஜனநாயக மாண்புகளையும், மரபுகளையும் மதிக்காதது மட்டுமல்ல; அவரிடம் நாகரிகமும், சகிப்புத்தன்மையும் கூட எள்முனையளவும் இல்லை. பேரவை நடவடிக்கைகள் முடிந்து தேசிய கீதம் பாடப்படும் முன்பு வெளியேறியது ஏன்? ஆளுநருக்கு இந்த அரசை தர்ம சங்கடத்தில் சிக்க வைக்க வேண்டும் என்ற திட்டமிட்ட முயற்சி இருப்பது அவர் செயலில் வெளிப்படுகிறது.

அத்துடனும் அவர் நின்று விடவில்லை. தமிழர் திருநாளான பொங்கல் விழாவுக்கு ஆளுநர் பெயரில் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. சென்ற முறை தமிழ்நாடு அரசின் கோபுரச் சின்னத்துடன் அழைப்பிதழ் இருந்தது. இந்த ஆண்டு அழைப்பிதழில் இந்திய அரசின் மூன்று சிங்க முத்திரை உள்ளது. மேலும் அவரது பதவியின் பெயர் தமிழ்நாடு ஆளுநர் என்பதற்கு பதிலாக 'தமிழக ஆளுநர்' என திருத்தப்பட்டுள்ளது.

மாநில அரசின், கோபுரச் சின்னத்தில் 'தமிழ்நாடு' என்று எழுதப்பட்டுள்ளதால் அதனைப் பயன்படுத்த மறுத்துள்ளார்.

ஆளுநர் ரவி, தமிழ்நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை எதிர்த்து, அரசியல் சாசனத்திற்கு மாறாக, ஒரு திட்டமிட்ட கருத்தியல் மற்றும் அரசியல் போரை நிகழ்த்திக் கொண்டிருக்கிறார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு கட்சி தனது நீண்ட கால நம்பிக்கைகளையோ, கருத்துகளையோ, சித்தாந்தத்தையோ மாற்றிக்கொள்ள வேண்டும் என்று நிர்ப்பந்திக்க ஆளுநருக்கு எந்த உரிமையும், அதிகாரமும் இல்லை.

அவர் பதவியேற்ற போது அரசியல் சாசனத்தை பாதுகாப்பதாக உறுதி எடுத்துள்ளார். அதற்கு எதிரானதாகவே அவரது நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

சமூகநீதி, சுயமரியாதை, சமத்துவம் பெண்ணுரிமை, மதச்சார்பின்மை போன்றவை திமுகவின் கோட்பாடுகள் மட்டுமல்ல. இவற்றை நிலைநிறுத்த எண்ணற்ற சமூகப் போராட்டங்கள் தமிழ்நாட்டில் நடைபெற்றுள்ளன. எனவே அவரது செயல் திமுகவுக்கு எதிரானது மட்டுமல்ல; ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களுக்கும், நீடித்த போராட்டங்களால் அது நிலை நாட்டிய சமூக வளர்ச்சிக்கும் எதிரானது.

ஆளுநர் சட்டப்பேரவையில் நுழையும் போதே, "தமிழ்நாட்டை மதிக்காத ஆளுநரே வெளியேறு!" என இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட், காங்கிரஸ், விசிக உள்ளிட்ட கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம் பொருள் பொதிந்ததாகிறது.

தமிழ்நாட்டோடு விரோதம் கொண்ட ஆர்.என்.ரவி, ஆளுநர் பதவியிலிருந்து விலகி வெளியேறுவதே நியாயமானது. இல்லையெனில் ஒன்றிய அரசு அவரை உடனடியாக விடுவிக்க வேண்டும்.

## 3 ம் பக்கத் தொடர்ச்சி

தமிழ்நாடு' என்று இரண்டையும் சேர்த்து வைத்துக் கொள்ளலாமே என்று கூட ஆலோசனை சொன்னார்.

(சென்னைMadras, வியாசர்பாடிஜீவா, வாஞ்சிமணியாச்சி, மறைமலையடிகள்நகர்காமராஜர் என்று இரண்டு பெயர்களை சேர்த்து வைப்பதில் காங்கிரஸ்காரர்கள் கெட்டிக்காரர்கள். தேசிய கீதம் கூட 'ஜனகன மன', 'வந்தேமாதரம்' என இரண்டு)

அதையெல்லாம் மறுத்து தமிழ்நாடு எனப் பெயர் சூட்டுவது என்றும் இதையே அரசியல் அமைப்பு சட்டத்தில் திருத்தம் செய்து நிறைவேற்றுமாறு ஒன்றிய அரசை கேட்டும் சட்டத்தை தமிழ்நாடு சட்டமன்றம் நிறைவேற்றியது.

எனினும் ஒன்றிய அரசு பல்வேறு தாமதங்களை செய்தது. கடைசியில், ஒரு தைத் திங்கள் முதல் நாளில், 1969 ஜனவரி 14ஆம் தேதியன்று தான் தமிழ்நாடு என்ற பெயர் அதிகாரப்பூர்வமாக ஏற்கப்பட்டது.

### பாசிசக் கனவு:

இவ்வளவு நெடிய போராட்டங்களை நடத்தி, 52 ஆண்டுகளுக்கு முன்பாக தன் மொழியின் பெயரால் மாநிலத்திற்கு பெயர் அமைத்துக் கொண்டதை, மாற்றித் தீர வேண்டும் என்று 'மேதகு' குதிப்பது ஏன்? ஒரே நாடு, ஒரே கட்சி, ஒரே அதிபர் என்ற அவர்களது பாசிசக் கனவை, இப்பெயர் வெறும் கனவு மட்டுமே என நிறுவுகிறது.

இப்படி மிளகுப் பொடியும், மிளகாய்ப் பொடியும் தூவி சர்ச்சைகளை எழுப்பி அந்த அந்தப் பரபரப்பினூடே பயணப்படுவது இவர்களுக்குப் பழக்கம்.

### எல்லோருக்குமான இந்தியா:

தமிழ்நாட்டுக்கு மட்டுமில்லாமல், இந்தியா முழுமையிலும் மொழிவாரி மாநிலம் அமைக்க வேண்டும் என்று போராடியவர்கள் கம்யூனிஸ்டுகள்!

அந்தந்த மாநிலங்களில் அதனதன் தாய் மொழியை உயர்த்திப் பிடிப்பதற்கு ஏராளமாய் எழுதிக் குவித்தவர்கள் கம்யூனிஸ்டுகள்!

'கலை கலைக்காகவே' என்ற சனாதன கோட்பாடுகளை போராடி உடைத்தெறிந்து 'கலை மக்களுக்காகவே' என்பதை நிலைநாட்டி, உயிரூட்டியவர்கள் கம்யூனிஸ்டுகள்!

மக்கள் ஆதரவை பெற முடியாத மாநிலங்களில், தனது அதிகாரத்தைப் பயன்படுத்தியும், கையில் வைத்துள்ள மாளாத பணத்தை அள்ளித் தெளித்தும், ஆளுநர்களைக் கொண்டு போட்டி அரசு நடத்தியும், சனாதனத்தோடு சேர்த்து தன்னையும் மீட்டெடுத்துக் கொள்ள ஆர்எஸ்எஸ் பாஜக சதி செயல் புரிகிறது.

விழிப்போடு இருப்போம்!

## 2 ம் பக்கத் தொடர்ச்சி

தங்களின் லாபம் என்கிற வஞ்சகம் நிறைந்திட்ட சுரண்டலை நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமாக உயர்த்திக் கொண்டே இருக்கின்றனர்.

மிருகத்தனமான, கொடூரமான லாபவேட்டையை இரக்கமின்றி, இரட்டிப்பாக்க, மும்மடங்காக, பன்மடங்காக பெருக்கி, உயர்த்திட, "விளம்பரம்" என்கிற ஆயுதத்தை நன்கு பயன்படுத்திக் கொள்கின்றனர். விளம்பர மோகத்தில் மதிமயங்கி, நுகர்வு கலாச்சாரத்துக்கு பலியாகி எப்பொருளையும் என்ன விலை கொடுத்தும் வாங்கிவிட மக்கள் பழகி விட்டார்கள்.

முதலாளித்துவத்தின் சாகசங்களை மக்களிடம் அடையாளப்படுத்தி உணர வைப்பது அவ்வளவு எளிதான ஒன்றல்ல. எனினும் முதலாளித்துவத்தின் முகமூடிகளை, அதன் உண்மை சுயரூபத்தை வெளிப்படுத்திட இடையறாது இயக்கங்களை மேற்கொள்வது தவிர வேறு பாதை இல்லை.

மக்கள் விழிப்புணர்வு பெற, அவர்களது அறிவில் வெளிச்சம் பாய்ச்ச வேண்டும். அதற்கான ஒரு வழி ஏற்படுத்திடக் கூடிய நமது அரசியல் இயக்க வார இதழான "ஜனசக்தி"யை உழைக்கும் மக்கள் கரங்களில் சேர்த்திட வேண்டும். நம் உறுப்பினர்கள் ஒவ்வொரும் "ஜனசக்தி" வாங்கிப் படித்திடல் வேண்டாமா? நமக்கு விழிப்புணர்வு பெறாமல், மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுமா?

அரசியல் அதிகாரத்தை வென்று, அதன் வழி சமூக மாற்றம் காணுவது என்ற குறிக்கோளுடன் தான் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 1925 டிசம்பர் 26ல் தொடங்கப் பெற்றது. 97 ஆண்டுகள் நிறைவு செய்துள்ள புகழார்ந்த பேரியக்கத்தில் நாம் அனைவரும் உறுப்பினராக இருப்பதில் பெருமை கொள்கிறோம்.

எவருடைய நிர்ப்பந்தங்களும் இன்றி எதனையும் எதிர்பார்க்காமல் தாமாக முன் வந்து கம்யூனிஸ்ட் பேரியக்கத்தில் உறுப்பினராக சேர்ந்தோம். சேர்ந்தது மட்டுமல்ல, இரவு, பகல் பாராது, வெய்யில், மழை குறித்து கவலையின்றி இடையறாது பணியாற்றி வருகின்றோம்.

உலகிலும், நாட்டிலும் எத்தனை, எத்தனையோ இயக்கங்கள் தோன்றியும் உள்ளன. அவற்றுள் பல மறைந்தும் உள்ளன. புதிய, புதிய இயக்கங்கள் தோன்றவும் கூடும். ஆனால் அவைகள் அனைத்திலும் வேறுபட்டது, முற்றிலும் வித்தியாசமானது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி என்பதனை எவராலும் மறுக்கவோ, மறைக்கவோ இயலாது, முடியாது.

அத்தகைய புரட்சிகரமான இயக்கத்தில் பங்கு பெற்று, பணிபுரிந்து வரும் நாம், நாம் வாழும் பகுதியில், நம்முடன் வாழ்ந்து கொண்டு இருக்கும் மக்களிடத்தில் நாம் யார், நமது பணி யாருக்காக அமைந்துள்ளது என்பதனை உணரச் செய்திட வேண்டாமா? அவ்வாறு உணரச் செய்திட நமக்குள்ள பெரும் வாய்ப்பு ஜனசக்தி அல்லவா?

அதனை நாம் நமது தோள்களில் சுமந்து இல்லம் தோறும் கொண்டு சேர்க்கின்ற பெரும் பணியை மேற்கொள்வோம்.

ஒவ்வொரு கட்சிக் கிளையும் அதற்குரிய முன் முயற்சிகளை மேற்கொண்டால், கிளைக்கு ஐந்து ஆண்டு சந்தாதானா? அது பத்து, பதினைந்து ஆண்டு சந்தாக்கள் என சேர்த்திட இயலும் தமிழ்நாடு முழுவதும் பல்லாயிரம் இதழ்கள் சென்றடைவதன் மூலம் நமது பேரியக்கம் குறித்த புரிதலை ஏற்படுத்திட இயலும்.

இத்தகைய பணிகளை வெற்றிகரமாக மேற்கொள்ள மதுரை, ஈரோடு, சென்னை, தஞ்சை, வேலூர் என ஐந்து மண்டலங்களில் மாநில நிர்வாகக்குழு உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர்கள், ஜனசக்தி மாவட்ட பொறுப்பாளர்கள் கொண்ட கூட்டங்கள் முறையே ஜனவரி 19, 20, 21, 22, 25ல் நடைபெறுகின்றன.

இக்கூட்டங்களில் மேற்கொள்ளப்படும் முடிவுகளை முழுமையாக நிறைவேற்றுவதன் மூலம் ஜனசக்தி விற்பனையை பன்மடங்கு உயர்த்திடுவோம்.

இதே காலத்தில் மூர்க்கத்தனமான பாஜக ஒன்றிய அரசு கார்ப்பரேட் பெருமுதலாளிகளுக்கு ஆதரவாக, தொழிலாளி வர்க்கத்திற்கு எதிராக தொடுத்துள்ள தாக்குதலை முறியடித்து முடிவிற்கு கொண்டு வர வேண்டும். நூற்றாண்டு காலம் போராடி இரத்தம் சிந்தி, உயிர்ப்பலி கொடுத்து, சிறைக் கொடுமை சித்தரவதைகளுக்கு ஆளாகி பெற்ற உரிமைகளை பறித்துக் கொண்ட மோடி அரசுக்கு தக்க பாடம் புகட்ட தயாராக வேண்டும்.

தொழிலாளி வர்க்கம் ஒன்றுபட்டு தனது போர்க்குணம் நிறைந்த போராட்டத்தால், தொழிலாளி வர்க்கத்திற்கு எதிராக நிறைவேற்றியுள்ள சட்டங்களை முறியடிக்க தொழிலாளி வர்க்கம் தயாராகி விட்டது. ஆம் நாட்டின் முதல் தொழிற் சங்கமான ஏஐடியூசி ஜனவரி 24ஆம் தேதி மறியல் போராட்டம் மேற்கொள்கிறது.

ஒன்றிய அரசானாலும், மாநில அரசானாலும் தொழிலாளி வர்க்கத்திற்கு எதிராக மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கையினையும் ஏற்க மாட்டோம், அனுமதிக்க மாட்டோம் என சூளுரைத்து போர்ப் பிரகடனம் செய்துள்ளது.

ஜனவரி 24 ஆம் நாள் மறியல் போர்! திருப்பூரில் திரண்டது போல், டிசம்பர் 29ல் ஆளுநர் மாளிகை முற்றுகைக்கு சென்னை பெருநகரில் திரண்டது போல், நாம் யார் என்பதனை, நம் பலம் என்ன என்பதை உணர்த்திட ஆயிரமாயிரமாய், பல்லாயிரமாய் அணி திரள்வீர்! வெற்றி பெறுவீர்..

மீண்டும் சந்திப்போம்! வணக்கம்

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

## திருத்தம்

சென்ற வாரம் ஜனசக்தி இதழில் (ஜனவரி 8–14) 'கட்சிக் கடிதம்' பகுதியில் 3வது பத்தி 7வது பாராவில் "தஞ்சாவூர் தெற்கு மாவட்டம் ஆம்பலாப்பட்டு கிராமத்தில்" என்று தவறுதலாக வந்துவிட்டது. இதை "தஞ்சாவூர் தெற்கு மாவட்டம், கிளாமங்கலம் கிராமத்தில்" என்று திருத்தி வாசிக்க வேண்டுகிறோம். தவறுக்கு வருந்துகிறோம்!

இவண்
ஆசிரியர்குழு, ஜனசக்தி



அ.பாஸ்கர்

# மனித மலத்தை கலந்த கொடியோர் கைதாவது எப்போது?

**தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் வெளியிடும் பள்ளிக் கல்விக்கான பாடப் புத்தகங்களில், "தீண்டாமை ஒரு பெரும் குற்றம்; தீண்டாமை ஒரு பாவச் செயல்" என்ற வாசகம் பெரிய எழுத்துக்களில் அச்சிடப்பட்டிருக்கும். பாடப்புத்தகங்களை வாசிக்கும் சிறுவர் உள்ளங்களில் தீண்டாமை நோய் தொற்றாமல் இருக்க வேண்டும் என்ற விழிப்புணர்வூட்டும் முயற்சியாக இது அமைந்தது.**

ஆனால், மாதா, பிதா, குரு மூவரும் தெய்வங்கள் என பண்படுத்தும் மரபில் இம் மூன்று தெய்வங்களும் அவரவர் சாதிப் பெருமை பேசுவதையும், பிற சாதியினரை இழிவுபடுத்தி மகிழ்வதுமான குரூரத்தை வாழ்க்கை முறையாக கற்பிக்கிறதே, இதனைத் தடுக்க என்ன வழி?

குழந்தைகளை பள்ளியில் சேர்க்கும்போது, மாணவர் சேர்க்கை அனுமதி படிவத்தில் என்ன மதம்? என்ன சாதி? என்ற கேட்பதில் தொடங்குகிறது சாதியப் பாகுபாடு. இங்கு சமூக நீதி வழங்குவதில் இட ஒதுக்கீடுகள் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதற்கு சாதி அடையாளம் தேவைதானே? என்ற எதிர் வினாவும் எழுப்பப்படுகிறது. சாதி வாரியாக கணக்கெடுப்பு நடத்தி, அதன் அடிப்படையில் இட ஒதுக்கீட்டு முறையில் உள்ள முரண்பாடுகளுக்கு தீர்வு காண வேண்டும் என்ற கோரிக்கையும் வலியுறுத்தப்பட்டு வருகிறது.

நாட்டின் விடுதலைப் போராட்டம் மக்கள் இயக்கமாக விரிவடைய வேண்டும் என்ற வேட்கையில் "அடையப் போகும் விடுதலை பற்றி கனவு கண்ட முண்டாசுக் கவிஞன் பாரதி"

**விடுதலை; விடுதலை; விடுதலை;**
**பறையருக்கும் இங்கு தீயர் புலையருக்கும் விடுதலை;**
**பரவரோடு குறவருக்கும் மறவருக்கும் விடுதலை"**

என்று கட்டியம் கூறினான்.

அரசியல், சமூகம், பொருளாதாரம் என்ற மூன்று நிலைகளிலும் விடுதலை பெற வேண்டும் என்று தான் ஆயிரமாயிரம் பேர் விடுதலைப் போராட்டத்தில் அணி வகுத்தனர். ஈடு இணையற்ற ஈகை புரிந்தனர். இறுதியில் மகத்தான வெற்றி பெற்றனர்.

நாடு விடுதலைப் பெற்று 75 ஆண்டுகள் கடந்து விட்டன. 75 வது சுதந்திர நாளை நாடு முழுவதும் கொண்டாடி வருகிறோம்.

எட்டயபுரத்து கவிஞனும், அவரோடு சேர்ந்து விடுதலை வேள்வியில் ஈடுபட்டோரும் கண்ட கனவு நனவாகியுள்ளதா? அரசியல், பொருளாதார, சமூக விடுதலை கிடைத்து விட்டதா?

விடுதலை பெற்ற நாட்டை நவீன முறையில் நிர்மாணிக்க, நமக்கு நாமே ஏற்றுக் கொண்ட அரசியல் அமைப்புச் சட்டம் நடைமுறையில் உள்ளது. இந்தச் சட்டத்தை வரைவு செய்து, அரசியலமைப்பு அவையில் முன்வைத்து, அதன் ஒப்புதலைப் பெற்ற நிறைவு நாளில் அண்ணல் அம்பேத்கர், அனைவருக்கும் நன்றி கூறும் வகையில் பேசினார். அப்போது "இன்று முதல் நாம் ஒரு புதிய கட்டத்தில் பயணத்தை தொடங்குகிறோம். அரசியல் ரீதியாக அனைவரும் "சமம்" என்பதை உறுதி செய்துவிட்டோம். ஆம் வயது வந்தோர் (அப்போது 21, தற்போது 18) அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்படுகிறது. இதில் வசதியுள்ளோர், வறுமைப்பட்டோர், அரண்மனையில் வசிப்போர், வசிப்பிடமும் இல்லாமல் தெருவோரங்களில் வாழ்வோர் என எந்த ஏற்றத் தாழ்வும் இல்லாமல், வேதங்களின் கற்பிதக் கருத்தான நெற்றியில் பிறந்தவர், புஜத்தில் பிறந்தவர், வயிற்றில் பிறந்தவர், உள்ளங்காலில் பிறந்தவர் எனக் கூறும் வர்ணாசிரம பாகுபாடுகள், மனித சமூக வட்டத்திற்கு வெளியே நிறுத்தப்பட்ட "பஞ்சமர்" என்று இழிவுகளுக்கும் இடமில்லாமல் ஒவ்வொருவருக்கும் ஒரு வாக்கு என்ற முறையில் அரசியல் நிலையில் சம உரிமை உறுதியாகிவிட்டது.

ஆனால், இந்த சம உரிமை நிலை சமூகத்திலும், பொருளாதாரத் தளத்திலும் இன்னும் உருவாக்கப்படவில்லை என்பதை இந்த அரசியல் அமைப்புச் சட்டத்தை அமலாக்கும் அரசியல் அதிகாரத்தை வழிநடத்துவோர் கருத்தில் கொள்ள வேண்டும். சமூக, பொருளாதார தளங்களில் சமத்துவம், சமவாய்ப்பு வழங்கப்படாத வரை சமூக அமைதி என்பது சவாலாகவே அமையும் என்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

விடுதலை பெற்ற நாட்டில், நிகழ்கால வாழ்க்கையில் உறுதி செய்யப்பட்ட அரசியல் உரிமையும் பறிபோகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. பன்னாட்டு நிதி மூலதன சக்திகளும், கார்ப்ரேட் கொள்ளையர்களும், மதவெறியூட்டும் வகுப்புவாத சக்திகளையும், சாதி வெறி கொண்ட ஆதிக்க சக்திகளையும் அதிகாரத்தில் அமர்த்தி விட்டதால் சாதிய வன்கொடுமைகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன.

புதுக்கோட்டை மாவட்டத்தில் நடந்துள்ள சாதிய வெறி ஆதிக்கத்தின் குரூரச் செயலால் மனித குலமே வெட்கித் தலை குனிந்து நிற்கிறது.



அன்னவாசல் ஒன்றியம் வேங்கைவயல் இறையூர் கிராமத்தில் பட்டியல் இன மக்கள் தாகம் தீர்க்க, பசியாற சமைத்து சாப்பிட, ஏன், உயிர் வாழப் பயன்படுத்தும் குடிநீரில், மனித வடிவில் வாழும் சாதி பைத்தியங்கள், மலத்தை கலந்து, அதனால் ஏற்படும் துயரங்களை ரசிக்க காத்திருந்தன. தீண்டாமை வெறியர்களின் சதியை அறிந்து கொள்ளாத அப்பாவி மக்கள், அந்த மலம் கலந்த குடிநீரை குடித்ததால் கடுமையான பாதிப்புகளுக்கு ஆளாகினர். அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிகிச்சை பெற்றதால் உயிர் பிழைத்தனர்.

குறிப்பிட்ட ஒரு குடியிருப்பில் இருந்து குழந்தைகளும், பெரியவர்களும் வாந்தி, பேதி கண்டு, அரசு மருத்துவமனைக்கு அணி, அணியாக வருவது ஏன்? என்ற கேள்வி எழுந்ததும், அரசு அதிகாரிகள் வேங்கை வயலுக்கு ஆய்வுக்கு சென்றனர். அவர்களது ஆய்வில் தான் மனிதத் தன்மையை இழந்து, சாதிவெறி பிராணிகளாக வாழும் சிலர் மனித மலத்தை மேல்நிலை தண்ணீர் தொட்டியில் கலந்துள்ள பாவச் செயல் வெளியானது.

வேங்கை வயலில் விளைந்து நிற்கும் இந்த தீண்டாமைச் செடியின் தீய விளைவுகள் நாடு முழுவதும் அதிர்வலையை ஏற்படுத்தியது. இதனையறிந்த புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் கவிதா ராமு மற்றும் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் வந்திதா பாண்டே உள்ளிட்ட அதிகாரிகள் வேங்கை வயலுக்கு (இறையூர்) சென்றனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு தைரியம் ஊட்டினர். அப்போது தான் கிராம மக்கள் அங்கு, சாதி ஆதிக்கக் கோட்டையில் தீண்டாமைக் கொடி ஆட்சிக் கொடியாக பறந்து கொண்டிருப்பதை எடுத்துக் கூறினர். அவர்களது விருப்பக் கடவுளான அய்யனாரை தரிசிக்கக் கூட அனுமதிப்பதில்லை என்று விளக்கமாக கூறியுள்ளனர்.

நான்கு தலைமுறையாக முயற்சித்தும் அய்யனார் கோயில் வாசலை கூட மிதிக்க விடாமல் ஒதுக்கப்பட்டு இருக்கிறோம் என கண்ணீர் மல்க கூற கேட்டதும், மாவட்ட ஆட்சியரும், காவல் கண்காணிப்பாளரும் பட்டியல் இன மக்களை அய்யனார் கோயிலுக்குள் அழைத்துச் சென்று வழிபட வைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நிகழும் போது கோவில் பூசாரியின் மனைவி சிங்கம்மாள் உடலில் ஏறிய "சாதிவெறிச் சாமி" "டேய் முட்டாப் பசங்களா, அவர்களை ஏன்டா உள்ள விட்டே? தீட்டுபட்டதடா, என் வாசல்" என தீண்டாமைக்கு ஆதரவாக பேசி, பட்டியலின மக்களை இழிவு படுத்தி ஆடியுள்ளது. சாமி மீது மக்கள் வைக்கும் (மூட) நம்பிக்கையை மூலதனமாக்கி, மக்களை முட்டாளாகவே வைத்திருக்கும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது.

பூசாரி மனைவி சிங்கமாளையும், அவள் மீது ஏறி ஆடிய தீண்டாமை சாமியையும் சேர்த்து, மாவட்ட ஆட்சியர் உத்தரவுப்படி "ஆசாமிகளாக" இருந்த காவல்துறையினர் கைது செய்து, தடைகளை அகற்றினர்.

வேங்கைவயல் (இறையூர்) பகுதியில் நிலவும் இரட்டை குவளை முறையை நியாயப்படுத்திய டீக்கடை உரிமையாளர் மூக்கையா என்பவரையும் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் கைது செய்திருக்கிறார்கள்.

பாதிக்கப்பட்ட மக்கள் பக்கம் நின்ற, மாவட்ட ஆட்சியாக்கும், காவல்துறை கண்காணிப்பாளருக்கும் பாராட்டுக்கள் குவிகின்றன. அவர்களுக்கு தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கமும் பாராட்டுக்களை தெரி வித்துக் கொள்கிறது.

குடிநீர் தொட்டியில் மனித மலத்தை கலந்த அந்த கொடியவர்கள் யார்? அவர்களை ஏன் இன்னும் கண்டறியவில்லை? அவர்களை விரைந்து கண்டறிந்து கைது செய்ய வேண்டும்.

தீண்டாமை கொடுமை அன்றாட வாழ்வில் கலந்து நிற்கிறது சக மனிதர்களை சாதியாக வேறுபடுத்தி, வெறுத்துப் பார்ப்பதும், அவர்களை தொட்டால் தீட்டு என்று, தீண்டாமை கடைப்பிடிப்பதும், ஏன், பட்டியலினப் பெண்கள் கூட்டுப் வன்புணர்வுக்கு ஆளாக்கப்படுவதும் நாடு முழுவதும் தொடர்கிறது.

தமிழக அரசு மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக்கள் அமைத்துள்ளது. ஆனால், இதன் செயல்பாட்டில் என்ன முன்னேற்றம் கண்டுள்ளோம்.

சாதிவெறிக்கும், மதவெறியூட்டலுக்கும் இரையாகி, மூடப்பழக்க வழக்கங்கள் புதர்போல் மண்டி கிடக்கும் சமூக அமைப்பை சீர்திருத்த அரசு கடைபிடிக்கும் கொள்கை வழி என்ன?

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்று முழங்கிய வள்ளுவர் வாக்கும், "யாதும் ஊரே, யாவரும் கேளிர்"! என்ற மூத்த தமிழ் குடியின் உயர்ந்த நோக்கும் அரசின் கொள்கை வழியாக அமைய வேண்டும். இதற்கு செயல் வடிவம் தரும் வகையில் ஒவ்வொரு கிராமத்திலும் அங்கு வாழும் சமூகத்தின் அனைத்துப் பிரிவு மக்களும், பெண்களும் பங்கேற்கும் "சமூக சீர்திருத்த நல்லிணக்கக் குழுக்கள்" உருவாக்க வேண்டும். இதன் மூலம் சிந்தனை சிற்பி சிங்கார வேலர், பகுத்தறிவுப் போராளி பெரியார், சுயமரியாதைச் சுடர் ப.ஜீவானந்தம், ஜனநாயக புரட்சியாளர்கள் அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் போன்றோர் வழி நின்று பண்பாட்டு போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்பது தான் காலம் முன்வைக்கும் கடமைகளாகும். இந்தக் கடமைகளை வேங்கை வயல் மீண்டும் ஒரு முறை அரசுக்கும், சமூக அமைப்புகளுக்கும் முன்வைத்துள்ளது.

தொடர்புக்கு: 9488488339

## மறைந்த தோழர் ஆர்.தேவராஜ் படத்திறப்பு தலைவர்கள் பங்கேற்பு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கோவை மாவட்டத்தில் முக்கிய தோழர்களில் ஒருவராக திகழ்ந்த முன்னாள் மாவட்ட துணை செயலாளர், முன்னாள் மாமன்ற உறுப்பினர் ஆர்.தேவராஜ் படத்திறப்பு மற்றும் புகழஞ்சலி கூட்டம், கோவை ஜீவா இல்லத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் சி.சிவசாமி தலைமை தாங்கினார். மாநில பொருளாளர் எம். ஆறுமுகம் துவக்கவுரை நிகழ்த்தினார்.

மாநில செயலாளர் இரா. முத்தரசன் படத்தை திறந்து வைத்து புகழஞ்சலி செலுத்தினார். மாநில கட்டுப்பாட்டு குழு தலைவரும், திருப்பூர் மக்களவைத் தொகுதி உறுப்பினருமான கே. சுப்பராயன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கோவை மக்களவைத் தொகுதி உறுப்பினர் பி. ஆர். நடராஜன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் நா.பெரியசாமி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநகர் மாவட்ட செயலாளர் ஆர்.ஆர். மோகன்குமார், அவைத்தலைவர் சேதுபதி, தந்தை பெரியார் திராவிட கழகம் ஆறுச்சாமி, கொங்குநாடு மக்கள் தேசிய முன்னேற்ற கழகம் மாநகர் மாவட்ட செயலாளர் ஆர். எஸ். தனபால் உள்ளிட்டோர் புகழஞ்சலி செலுத்தினர்.





# உணவை நஞ்சாக்கும் உலகமய செறிவூட்டப்பட்ட அரிசி!

மா.பிரபாகரன்

**இந்தியப் பிரதமர் கடந்த ஆண்டு (2021) தனது விடுதலைநாள் உரையில், இந்திய மக்களுக்கு இனிமேல் சத்து மிகுந்த செறிவூட்டப்பட்ட அரிசியை பொது வழங்கல் திட்டம் போன்ற அரசுத் திட்டங்களின் வழியாக கொடுக்க உள்ளதாக பேசினார். அதற்கான காரணங்களை புள்ளி விவரங்களுடன் அரசு தரப்பில் இருந்து யாரும் வெளியிடவில்லை. நிதி அயோக், உணவு மற்றும் பொது வழங்கல்துறை, இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர அதிகாரத் துறை (FSSAI) ஆகிய யாரும் ஏன் இந்த அரிசியை இந்திய மக்களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற தரவுகளை வெளியிடவில்லை.**

அதற்கு மாற்றாக எப்படி வழங்கப் போகிறோம் என்றே விரிவாகக் கூறுகிறார்கள். அதிலும் எந்த அளவு சத்து ரசாயனங்களை யாரிடமிருந்து இறக்குமதி செய்யப் போகிறோம் என்றும் வெளி யிடவில்லை. அது என்ன செறிவூட்டப்பட்ட அரிசி? (fortified rice)?

இந்தியக் குழந்தைகளுக்கும், பெண்களுக்கும் அனீமியா எனப்படும் ரத்தசோகை உள்ளதாகவும் மேலும் சில நுண்ணூட்டச் சத்துக் குறைபாடு உள்ளதாகவும் அதனால் அவர்களது வளர்ச்சி பாதிக்கப்படுவதாகவும் செயற்கையாக அரிசியைத் தயார் செய்து, அதில் இரும்புச் சத்து, வைட்டமின், ஃபோலிக் அமிலம் போன்ற ரசாயனங்களைச் சேர்த்து சத்து உண்டாக்கி ரேசன் கடைகள் வழியாக பொது வழங்கல் முறை மூலம், மாநில அரசுகளின் நிதியையும் எடுத்துக் கொண்டு ஒன்றிய அரசு கொடுக்கப் போகிறது! அப்பாடா மூச்சு முட்டுகிறதா? இதுமட்டுமல்ல, இப்படி செய்யப்படும் அரிசியில் சேர்ப்பதற்கான சத்துக்களை பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து ஏறத்தாழ 3000 கோடி ரூபாய்களுக்கு வாங்கி அரிசியில் சேர்த்துத் தரப்போகின்றது. அந்த வேலைகளும் தொடங்கிவிட்டன.

தமிழ்நாட்டிலும் அந்தத் திட்டம் திருச்சி மாவட்டத்தை முன்னோடியாகக் கொண்டு நியாயவிலைக் கடைகள் மூலம் செயலாக்கம் பெறுகின்றன. இந்தியாவில் அதிக அளவு ரத்தசோகை, சத்துக் குறைபாடு ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ள மாநிலங்களில் பீகார், மேற்கு வங்காளம், அரியானா, அந்தமான் நிகோபார் ஆகியவையே முன்னணியில் உள்ளன. இந்த மாநிலங்களுக்கு செறிவூட்டப்பட்ட அரிசித் திட்டம் இல்லை. ஒரு வேளை பீகார் மக்கள் கோதுமை உண்பதாகக் கொண்டால், மேற்கு வங்காளத்திற்கு ஏன் போகவில்லை? அத்துடன் குறைவான ரத்தசோகை பாதிப்புகள் கொண்ட கேரளா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களுக்கு இத்திட்டம் அறிமுகமாகியுள்ளது ஏன்?




இம்மாதிரியான கருத்துக்களின் ஊற்றுக்கண் எதுவாக இருக்கிறது என்றால், அது உலக சுகாதார நிறுவனமும் அதன் துணை அமைப்புகளாகவும் உள்ளன. குறிப்பாக பில் கேட்ஸ் போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் இதற்கு வழங்கும் நிதிகளின் அளவு ஆண்டுக்கு ஆண்டு அதிகமாகி வருகிறது. முன்னர் அரசுகள் அளித்த நிதியில் ஐ.நா. நிறுவனங்கள் தனித்தன்மையுடன் இயங்கி வந்தன. தற்போது நிதி ஆதாரங்களுக்கு பன்னாட்டு நிறுவனங்களைச் சார்ந்து இயங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

உண்மையில் இந்த வண்ண அரிசிக்கு ஒதுக்கும் தொகையை மரபரிசிகளுக்கு ஒதுக்கினால் பல நூறு உழவர்களுக்கும் பயன்கிட்டும், மரபு நெல்லினங்களும் பாதுகாக்கப்படும், மக்களுக்கும் சத்தான அரிசி உள்ளூரிலேயே கிடைக்கும். ஆனால் ஒன்றிய அரசு 5 பெரும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு 3000 கோடி ரூபாய்களை அள்ளி வழங்குகிறது.

உலகம் முழுவதும் இந்த மாதிரியான செயற்கை ஊட்டமேற்றும் முறைக்கு எதிர்ப்புகள் உருவாகி வருகின்றன. அனைத்து மக்களும் உண்பார்கள். யாருக்கு என்ற சிக்கல் உள்ளது என்று யாருக்கும் தெரியாது. ரசாயனங்களை உணவில் சேர்க்கும்போது அளவுக்கு அதிகமானால் அதுவே நஞ்சாக மாறிவிடும். என்று அமெரிக்கன் சர்னல் ஆப் கிளினிக்கல் நுட்ரீசியன் தெரிவிக்கிறது.

இப்படி கோடி கோடியாக அள்ளித் தந்து எந்தச் சத்தை வாங்கப் போகிறார்கள் என்று பார்த்தால் வைட்டமின் பி12 என்று கூறுகிறார்கள். அரிசியை பழைய சோறாக்கிச் சாப்பிட்டால், அல்லது நீராகாரம் குடித்தால், ஏன் கேப்பைக் கூழ், கம்பங்கூழ் குடித்தால் வைட்டமின் பி12 சாதாரணமாகக் கிடைக்கும் இதை நாம் சொல்லவில்லை. அரசு உணவு ஆராய்ச்சி நிறுவனங்கள் கூறுகின்றன. பழைய சோறு சாப்பிடும் பழக்கத்தையும், கூழ் குடிக்கும் பழக்கத்தையும் நம்மிடம் இருந்து இழிவுபடுத்தி விரட்டியது யார்? அதற்கு எதற்கு 3000 கோடி ரூபாய்கள்? அந்தப் பழக்கத்தை மீட்டு விட்டாலே போதுமல்லவா?

அடுத்தாக இரும்புச் சத்தை செயற்கை அரிசி மூலம் தரப்போகிறோம் என்கிறார்கள். பொதுவாக தீட்டாத அரிசியில் இரும்புச் சத்து உண்டு, அதிலும் செந்நெல் யாவற்றிலும் இரும்புச் சத்து இன்னும் கூடுதலாக உண்டு, கருப்பு நெல்லிலும் உண்டு. கருங்குறுவை என்ற அரிசியில் மற்ற அரிசியைவிட ஆறு மடங்கு இரும்பச் சத்து கூடுதலாக உள்ளதை ஆய்வுகள் கூறுகின்றன. குறிப்பாக காடியாக (நொதிக்க வைத்து) மாற்றும்போது கருப்பு அரிசிகளில் மிகச் சிறப்பாக இரும்புச் சத்து கிடைக்கிறது. அதனால்தான் சித்த மருத்தவர்கள் கருங்குறுவைக் காடியை ஒரு துணை மருந்தாகப் பயன்படுத்துகிறார்கள்.

ஆக பழைய சோற்றுக்கு மாறினால் 3000 கோடி ரூபாய் மிச்சம். இந்தத் தொகையை மரபு நெல்லினங்களைப் பாதுகாக்கப் பயன்படுத்தலாம்.

அடுத்ததாக முருங்கைக் கீரையில் இவர்கள் கூறும் அனைத்துச் சத்துகளும் உள்ளன. இதற்கு எந்த இறக்குமதியும் செய்ய வேண்டாம். ஒரு கிலோ அரிசியில் 28 மி.கி இரும்புச் சத்து உள்ளதாக திஷி ஷிகிமி கூறுகிறது. ஆனால் முருங்கை இலையில் ஒரு கிலோவிற்கு 54.9 மி.கி. இருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. தீர்வுகளை தேடுவதைவிட்டு குறிப்பிட்ட சில நிறுவனங்களுக்கு மட்டும் லாபம் தரும் முறையைக் கையாளுவது நாட்டிற்கு நல்லதல்ல.

செர்மனியின் பிஏஎஸ்எப், சுவிட்சர்லாந்தின் லான்ட்சா, பிரான்சின் அடிசியோ முதலிய ஐந்து நிறுவனங்களுக்கு மட்டும் தொகை அளிக்கப்படவுள்ளது. ‘ஒற்றைமயத்தின்’ கூறான ‘ஒரே நாடு ஒரே ரேசன் கார்டு’ மூலம் சில பன்னாட்டு நிறுவனங்கள் பயன்பெறப் போகின்றன. ஆனால் அல்லும் பகலும் உழைத்து சத்தான மரபின நெல்லை உருவாக்கும் பரந்துபட்ட மக்களுக்கான எந்தத் திட்டமும் இல்லை. இந்தியாவின் மிகப்பெரிய கூட்டுறவு நிறுவனமான அமுல் உணப் பொருளில் செறிவூட்டும் முறையை கடுமையாக எதிர்த்துள்ளது.

அனைத்துத் திட்டங்களையும் மையப்படுத்தும் நோக்கில் இந்தத் திட்டத்தையும் ஒன்றிய அரசு நோக்குவதாகத் தெரிகிறது. இதனால் மாநிலங்களின் தனித்த உணவுப் பண்பாட்டிற்கு ஊறு ஏற்படும்.

அனைத்தையும் சந்தையாக்குவது என்பது ஆபத்தானது, குறிப்பாக உணவும், உடல்நலமும் அறமற்ற சந்தைக்குள் வரும்போது அது சீர் செய்ய இயலாத ஆழமான விளைவுகளை ஏற்படுத்தும்.

தொடர்புக்கு: 6380677313

# பல்நோக்கு மருத்துவமனை பணியாளர்களை பணி நிரந்தரம் செய்திடுக!

## சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம், தமிழ்நாடு மருத்துவத்துறை பணியாளர்கள் கூட்டமைப்பு வலியுறுத்தல்

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர். ரவீந்திரநாத், தமிழ்நாடு மருத்துவத்துறை பணியாளர்கள் கூட்டமைப்பின் மாநிலப் பொதுச் செயலாளர் ஏ.ஆர்.சாந்தி ஆகியோர் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

தமிழ்நாட்டில் மருத்துவ துறை மாவட்ட இணை இயக்குனர்கள் மூலம், 2012 ஆம் ஆண்டு உத்தரவு அடிப்படையில்,வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம், இட ஒதுக்கீட்டையும் பின்பற்றி ,2013,மற்றும் 2014 ஆண்டுகளில் பணி நியமனம் செய்யப்பட்டு, தினக்கூலி அடிப்படையில் 2500க்கும் மேற்பட்ட பல்நோக்கு மருத்துவமனை பணியாளர்கள் அரசு மருத்துவமனைகளில் பணிபுரிந்து வருகின்றனர்.

அவர்கள் ஐந்தாண்டு கால சேவையை முடித்தவுடன், பணி நிரந்தரம் செய்யப்படும் என பணி நியமன ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அவர்கள் பணியில் சேர்ந்து பத்து ஆண்டுகளாகியும் இதுவரை பணி நிரந்தரம் செய்யப்படவில்லை. தினக் கூலி அடிப்படையிலேயே பணி செய்து வருகின்றனர். இது சமூக நீதிக்கு எதிரானது.எனவே, தமிழ்நாடு அரசு இவர்களை உடனடியாக பணி நிரந்தரம் செய்திட வேண்டும். கடந்த ஆட்சிக் காலத்தில் இவர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை சட்டமன்றத்தில் அன்றைய திமுக எம்எல்ஏ, எ.வா.வேலு அவர்கள் எழுப்பினார். அதற்கு பதில் அளித்த அன்றைய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் ,இந்தப் பணியாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள் என உறுதி அளித்தார். ஆனால் ,இது வரை இவர்கள் பணி நிரந்தரம் செய்யப்படவில்லை என்பது வருத்தம் அளிக்கிறது.எனவே, உடனடியாக பணி நிரந்தரம் செய்திட வேண்டும்.

கடந்த 4 முதல் 5 மாதங்களாக அவர்களுக்கு ஊதியமும் வழங்கப்பட வில்லை. வழங்கப்படாத இந்த ஊதியத்தை யும் உடனடியாக வழங்கிட வேண்டும்.

எம்.ஆர்.பி கோவிட் செவிலியர்களை பணி நீக்கம் செய்ததை உடனடியாக ரத்து செய்ய வேண்டும். அவர்களுக்கு, பணி பாதுகாப்பும், பணி நிரந்தரமும் வழங்குவதோடு, 6 மாதங்களாக வழங்கப்படாமல் உள்ள ஊதியத்தையும் உடனடியாக வழங்கிட வேண்டும்.

ஒன்றிய அரசு, தேசிய மருத்துவ ஆணையம் மூலம், மருத்துவ மாணவர்களுக்கு நெக்ஸ்ட் (NEXT) தேர்வை திணிக்கிறது. இது மாநில உரிமைகளுக்கும் ,சம நீதிக்கும் அடித்தட்டு சமூகப் பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களின் நலன்களுக்கும் எதிரானதாகும். எனவே, நெக்ஸ்ட் தேர்வை தமிழ்நாடு அரசு உறுதியுடன் எதிர்த்திட முன்வர வேண்டும். இது குறித்து விவாதித்திட அனைத்துக் கட்சி கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திட வேண்டும்.

தமிழ்நாடு அரசு, முதுநிலை மருத்துவ மாணவர்களின் விடுதிகளை தனியார்மயமாக்குவதை கைவிட வேண்டும்.

சென்னை அரசு பல் மருத்துவ மாணவர்களுக்கு தங்குவதற்கு மாற்றிடம் வழங்காமல்,கோட்டை ரயில் நிலையம் எதிரில் தற்போதுள்ள விடுதியை இடித்திடக் கூடாது. அம்முயற்சியை கைவிட வேண்டும். மாற்று தங்கும் வசதியை ஏற்பாடு செய்தபின், பழைய விடுதியை இடித்துவிட்டு புதிய விடுதியை கட்டிட வேண்டும்.

கொரோனா காலகட்டத்தில் பணியமர்த்தப்பட்டு, சிறப்பாக சேவை செய்த, எம்.ஆர்.பி தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்த மருத்துவர்களையும் மற்றும் செவிலிய உதவியாளர்களையும் பணி நீக்கம் செய்தது சரியல்ல. அவர்களுக்கு மீண்டும் பணி வழங்க வேண்டும்.

தமிழ்நாட்டில் 7 அரசு மருத்துவக் கல்லூரிகளில் செயல்படும், மது அடிமைத்தனத்திலிருந்து மீட்கும் மறுவாழ்வு மையங்களில் பணிபுரியும் 14 மன நல நிரந்தர மருத்துவர்களுக்கு கடந்த 7 மாதங்களாக ஊதியம் வழங்கப்படவில்லை. அந்த ஊதியத்தை உடனடியாக வழங்கிட வேண்டும். இது போன்று மருத்துவத்துறையில் ஏராளமானோருக்கு பல மாதங்களாக ஊதியம் வழங்கப்படாமல் உள்ளது. அவர்களுக்கு உடனடியா ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளனர்.

# உலக கால்பந்து விளையாட்டின் அதிசயப் பிறவி பீலே



லி.உதயகுமார்

**உலகம் முழுவதும் உள்ள கால்பந்தாட்டத்தின் ரசிகர்களால், அதுவும் கடவுள் நம்பிக்கை உள்ளவர்களால் கால்பந்தின் கடவுள் என்று அழைக்கப்படுபவரை நேரில் அழைத்து ஐயா எனது பெயர் ரொனால்ட் ரீகன், நான் அமெரிக்கா நாட்டின் அதிபர் மட்டுமே! ஆனால் நீங்களோ! கோடிக்கணக்கான கால்பந்து ரசிகர்களின் உள்ளத்தில் இடம்பெற்ற உண்மையான உலக நாயகன் என்று சொல்லி தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டவர்.**

அவர்தான் கால்பந்து ஜாம்பவான் பிரேசில் நாட்டு பீலே. ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்நாளில் ஏதாவது ஒரு வகையில் புகழ்பெற விரும்புவார்கள். அந்த வகையில் கால்பந்து உலக வரலாற்றில் அழியாப் புகழை பெற்றவர்.

இவரது தந்தையும் சிறந்த கால்பந்தாட்ட வீரர். இவர் விஞ்ஞானத்தின் மீது அதிக நம்பிக்கை கொண்டவர். தாமஸ் ஆல்வா எடிசனை மிகவும் நேசித்தவர். அவரது கண்டுபிடிப்புகளை வியந்து பேசுவார். அவர் மீது கொண்ட பேரன்பு காரணத்தால் தான் தனது மகன் பீலேவுக்கு, எடிசன் அதண்டஸ் டோ நாசிமெண்டோ என்ற பெயர் சூட்டி மகிழ்ந்தார்.


பீலே என்று அழைக்கப்பட்டாலும் இந்தப் பெயரின் உண்மையான அர்த்தம் என்னவென்று இவருக்குத் தெரியாது. உலகில் உள்ள அனைத்து மொழிகளிலும் இந்த வார்த்தைக்கு அர்த்தம் தேடிய பொழுது, ஹீப்ரு மொழியில் இப்படி ஒரு வார்த்தை இருந்தது. அதன் அர்த்தம் அதிசயம். ஆம் இவர் கால்பந்து உலகின் அதிசயப் பிறவி. கால்பந்தின் நுணுக்கங்களை சிறுவயதிலேயே இயல்பாகவே தானே கற்றுக் கொண்டவர். கால்பந்தை லாவகமாக உதைப்பதையும், மிக நேர்த்தியான முறையில் எதிரணியின் வீரர்களை ஏமாற்றி கடத்திச் செல்வதிலும் இவருக்கு நிகர் இவரே தான்.

1958 ஆம் ஆண்டு பிரேசில் – சுவிடன் அணிகள் இடையிலான ஆட்டத்தில் பிரேசில் அணியில் 16 வயதில் மிகவும் இளம் வீரராக அறிமுகமானார்.

17 வயதில் யாரும் உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் விளையாடியது கிடையாது. ஆனால் பிரேசில் நாட்டு உலகக் கோப்பை போட்டியில் விளையாடிய சிறப்பு இவருக்கு உண்டு.

பிரேசில் நாட்டிற்காக 1958, 1962, 1970 ஆகிய ஆண்டுகளில் உலகக் கோப்பையை பெற்று தந்த பெருமை இவருக்கு மட்டுமே உண்டு. வேறு எந்த நாட்டு கேப்டனும் மூன்று முறை கோப்பையை பெற்றுத் தந்த பெருமை இல்லை. இதுவே இவரது சாதனைகளில் இன்று வரை நிலைக்கிறது.

இவர் விளையாடிய பொழுது பிரேசில் கால்பந்து அணியின் மிகச்சிறந்த வீரர்கள் ஜெர்சன், கார்லஸ் அல்பர்ட்டோ, வாவா, ஜயிரின்ஸோ, காரின்சா, டிடி. இன்றைக்கு எப்படி மரடோனா, மெஸ்ஸி, போர்ச்சுக்கல் ரொனால்டோ, ஜெர்மன் கிளின்ஸ்மேன், ரூடிவாலர் என்று அழைக்கிறார்களோ, அதே போன்று அன்றைக்கு இருந்த இருவர் வாவா, டிடி போன்ற வீரர்கள். இது போன்ற சிறந்த வீரர்கள் இருந்தாலும் உலகளாவிய ரசிகர்களை தனது கால்களின் மாயாஜால வித்தையால் மெய்மறக்க செய்தவர். அனைவரையும் கவர்ந்திழுக்கும் திறமை கொண்டவர் பீலே மட்டுமே.



பிரேசில் என்றதுமே நாம் நினைவுக்கு வருவது இரண்டு. ஒன்று காபி, மற்றொன்று கால்பந்து. பிரேசிலில் காதலர்கள் விரும்பி செல்வது பூங்கா, கடற்கரை, பொழுதுபோக்கு இடங்களுக்கு செல்வதை விட கால்பந்து போட்டி எங்கு நடைபெறுகிறதோ அங்கே தான் காதலர்கள் செல்வார்கள். அந்த அளவுக்கு அங்கே கால்பந்து காதலர்கள் அதிகம்.

1970 ஆம் ஆண்டு பிரேசில் நாட்டில் வாழும் மக்களிடம் தங்களது நேசத்திற்குரியவர் யார் என்று கேட்ட பொழுது ஒட்டுமொத்த நாடு பீலே! பீலே! என்றே உச்சரித்தார்கள். உலக நாடுகளில் எந்த விளையாட்டு வீரரும் விளையாட்டுத்துறை அமைச்சராக பொறுப்பு வகித்தது கிடையாது. ஆனால் பீலேவை அந்தநாடு விளையாட்டுதுறை அமைச்சராக பொறுப்பு வழங்கி கௌரவித்தது. இவரும் விளையாட்டுத்துறை அமைச்சராக திறம்பட செயல்பட்டார்.



1967 ஆம் ஆண்டு நைஜீரியாவில் உள்நாட்டு போர் நடைபெற்றது. லகோலே என்ற இடத்தில் பீலே விளையாடும் கால்பந்து போட்டி நடைபெற இருந்தது. இவரது ஆட்டத்தை ரசிக்க வேண்டும் என்பதற்காக 48 மணி நேரம் போர் நிறுத்தம் செய்து சிறப்பு செய்தனர். உலகத்திலேயே ஒரு விளையாட்டு வீரருக்காக போர் நிறுத்தம் செய்தது இவரது சாதனைக்கு சான்று.

இப்படிப்பட்ட சாதனையாளர் சாதாரண ஏழ்மை நிறைந்த, வறுமை குடி கொண்ட குடும்பத்தில் பிறந்தவர்தான். சிறுவயதில் தேநீர் கடையில் சுத்தம் செய்யும் வேலை செய்து தன் பசியை போக்கியவர்.

தன் தந்தையிடம் பயிற்சி பெற்ற இவருக்கு கால்பந்து உதைக்கும் காலணி கூட வாங்க பணம் இல்லை. இதனால் கால் உரைகளுக்கு நடுவே செய்தித் தாள்களை மடித்து வைத்துக் கொண்டு விளையாடினார்.

இவர் நிகழ்த்திய சாதனைகளில் இன்று வரை நீடித்து நிலைப்பது, எதிர் அணியில் 11 பேர். இதில் எட்டு பேரை தனது அற்புத அதிசயிக்கத்தக்க கால்களால் நேர்த்தியாக பந்தை கடத்தி சென்று கோல் அடித்தது. இதுவரை இந்த சாதனையை யாரும் நிகழ்த்தவில்லை. அது மட்டுமல்ல. இவர் விளையாடி வெற்றி பெற்ற போட்டிகளில் அனைத்திலும் முதல் கோல் இவர் அடித்தது தான். இந்த சாதனையையும் இன்னும் யாரும் முறியடிக்கவில்லை.

19.11.1969 ஆம் ஆண்டு கால்பந்து போட்டியில் தனது 1000–ம் ஆவது கோலை அடித்து சாதனையை நிகழ்த்தினார். இந்த நாள் வரை, நவம்பர் 19ஆம் தேதியை உலக கால்பந்து சம்மேளனம் பீலே தினம் என்றே அழைத்து வருகிறது. இச்சிறப்பை முன்னிட்டு பிரேசில் அரசாங்கம் இவருக்கு சிறப்பு தபால் தலை வெளியிட்டு கௌரவித்தது.

1999 ஆம் ஆண்டு சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி இவரை இந்த நூற்றாண்டின் தலைசிறந்த விளையாட்டு வீரர் என அறிவித்து சிறப்பு செய்தது. 1994 ஆம் ஆண்டு யுனோஸ்கோவால் நல்லெண்ண தூதராக நியமிக்கப்பட்டார்.

1997 ஆம் ஆண்டு இங்கிலாந்து அரசின் இரண்டாம் எலிசபெத் ராணியால் சர்பட்டம் வழங்கப் பெற்றார். உலக கால்பந்து ரசிகர்கள் இவரை கருப்பு முத்து, கால்பந்தாட்டத்தின் அரசன், கால்பந்து கடவுள் என்று அழைப்பார்கள். உலக அதிசயங்கள் 7 என்பார்கள். ஆனால் கால்பந்து உலகின் அதிசயம் இவர் ஒருவர் மட்டுமே.

இயற்கையின் அற்புத படைப்பில் பூமி ஒன்றுதான், வானமும் ஒன்றுதான். கால்பந்தாட்டத்தில் ஒரே ஒரு பீலே மட்டும் தான். ஆம் கால்பந்தின் அதிசயப் பிறவி. கோடிக்கணக்கான ரசிகர்களை ஒன்றரை மணி நேரம் தனது கால்களின் மாயாஜாலத்தால் கட்டிப் போட்டவர். புத்தாண்டுக்கு முன் 29 டிசம்பர் 2022ல் புற்றுநோய் பாதிப்பால் அகால மரணம் அடைந்தார். அவரது உடல் ஜனவரி 3ஆம் தேதி 14 அடுக்கு மாடி கொண்ட கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது. அவர் மறைந்தாலும் அவரது நினைவு கால்பந்து உலகம் உள்ளவரை நீடித்து நிலைத்திருக்கும். வாழ்க அவரது புகழ்!

தொடர்புக்கு: 97919 22710

# குடும்பத் தலைவிக்கு ரூ.1000 வழங்கும் திட்டத்தை உடனே செயல்படுத்துக!

## இந்திய மாதர் தேசிய சம்மேளன மாநில நிர்வாகக்குழு கூட்டத்தில் தீர்மானம்!

இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் மாநில நிர்வாக குழு கூட்டம் ஜனவரி 6 அன்று தஞ்சாவூர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது. மாநிலதுணைத் தலைவர் சுந்தரவல்லி தலைமை வகித்தார். மாநில செயலாளர் ஜி.மஞ்சுளா நடைபெற்ற பணிகள் குறித்தும், சமீப காலமாக பெண்கள், சிறுமிகள் மீதான பாலியல் வன்கொடுமைகள் அதிகரித்து வரும் நிலை பற்றியும் ஒன்றிய, மாநில அரசுகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் குறித்தும் விரிவாக பேசினார்.

கூட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தெற்கு மாவட்ட செயலாளர் முத்துஉத்திராபதி வாழ்த்துரை வழங்கினார். மாநில நிர்வாகிகள் ராஜலட்சுமி, வளர்மதி, கண்ணகி, நிசா சத்தியன், லலிதா, லதா,தனலட்சுமி, சபியா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பெண்கள் உடல்நலம், மனநலம் குறித்து மகளிர் சிறப்பு மருத்துவர் மு.முருகபிரியா , மகளிர் அறுவை சிகிச்சை மருத்துவர் வானதி ஆகியோர் உரையாற்றினர்.

கோவை மாவட்டம் வெள்ளியங்கிரி பகுதியில் அமைந்துள்ள ஈசா யோகா மையம், வனப்பகுதியில் பழங்குடி இனத்தவர்களுடைய, விவசாய நிலங்களை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ளது. இங்கு பயிற்சிக்கும், தியானத்திற்கும் வரும் இளம் பெண்கள், சிறுமிகள் பாலியல் வன்கொடுமைகளுக்கும், போதை பழக்க வழக்கத்திற்கும் அடிமையாக்கப்படுகிறார்கள்.


சமீபத்தில் திருப்பூரைச் சேர்ந்த சுபஸ்ரீ என்னும் திருமணம் ஆன இளம்பெண் ஈசா யோகா மையத்தை விட்டு பதற்றத்துடன் ஓடி வந்த காட்சிகள் சிசிடிவி கேமராவில் பதிவாகியுள்ளன. பின்னர் அவர் மர்மமான முறையில் இறந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டது.

அவரது உடல் உடற்கூராய்வு செய்யப்பட்டு, அவரது கணவருக்கு தெரியாமல் எரிக்கப்பட்டது மிகப்பெரிய சந்தேகத்தை ஈஷா யோகா மையம் மீது ஏற்படுத்தியுள்ளது. தொடர்ந்து மக்களுக்கு எதிராக, பெண்களுக்கு எதிராக, போதைப் பழக்கங்களை ஊக்குவித்து வரும் பாலியல் வன் கொடுமைகளை நடத்தி வரும் ஈசா யோகா மையம் மீது தமிழ்நாடு அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும், குற்றவாளிகள் கைது செய்யப்பட வேண்டும் என்று இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் மாநில நிர்வாகக்குழு கூட்டம் தமிழ்நாடு முதல்வரை வலியுறுத்துகிறது.

கொரோனா காலத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட செவிலியர்கள், தங்களது உயிரையும் பொருட்படுத்தாமல் இரண்டு ஆண்டுகளாக பணி செய்து வந்த நிலையில், அவர்களை பணி நிரந்தரம் செய்யாமல் வேலை நீக்கம் செய்தது கண்டிக்கத்தக்கது. உடனடியாக அவர்களின் அர்ப்பணிப்பான பணிகளை உணர்ந்து மீண்டும் பணியமர்த்த வேண்டும்.

திமுக அரசு தேர்தல் காலத்தில் ஆட்சிக்கு வந்தால் இல்லத்தரசிகளுக்கு மாதந்தோறும் ரூ. 1000 அளிப்போம் என்ற தேர்தல் கால வாக்குறுதி ஆட்சிக்கு வந்து ஒன்றரை வருட காலமாகியும் நிறைவேற்றப்படவில்லை. உடனடியாக தமிழர் திருநாளாம் பொங்கல், மற்றும் தமிழ் புத்தாண்டு நாளிலிருந்து வாக்குறுதி அளித்தபடி ரூ.1000 இல்லத்தரசிகளுக்கு வழங்க வேண்டும் என்று இந்திய மாதர் தேசிய சம்மேளனம் தமிழ்நாடு அரசை வலியுறுத்துகிறது. முன்னதாக தஞ்சை மாவட்ட செயலாளர் ம.விஜயலட்சுமி அனைவரையும் வரவேற்றார். முடிவில் மாவட்ட பொருளாளர் ஸ்ரீதேவி நன்றி கூறினார்.

# இந்துத்வா: முகமூடிக்குப்



◆ என்.இ.பலராம்

சென்ற வார தொடர்ச்சி

### வர்ணம் - சாதிக்கு எதிரானது

இரண்டாவது அம்சம், இந்த இயக்கம் நால் வர்ணத்திற்கும், சாதீய அமைப்பிற்கும் எதிரானது ஆகும். ராமானந்தர், துளசிதாசர், சைத்தன்யர், ராமானுஜர், பசவராஜர் போன்றவர்கள் அவர்களது பாடல்களில் சாதீயத்தை கடுமையாக எதிர்த்தனர். இவர்களில் பலர் ஹரிசனங்களுடன் இருந்தனர். அவர்களது பாடல்களின் செய்தி கடவுளின் முன்பு எல்லோரும் சமமானவர்கள். கடவுள் மீது அன்பு செலுத்துதல் எல்லா மதங்களையும்விட பெரிய மதம் என்பனவாகும். இந்த இயக்கத்தின் சாராம்சம் மனித குலத்தின் சமத்துவம் ஆகும். மேல் சாதியினரின் அந்தஸ்தை ஏற்றுக் கொண்டாலும் ராமானுஜர் கோவில்களில் ஒடுக்கப்பட்ட சாதியினரை அனுமதிக்க வேண்டும் என்று வாதிட்டார்.

ஆனால் அவர் காலத்திய சாதி இந்துக்கள் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. லிங்காயத்துக்களுக்குத் தலைமை தாங்கிய பசவராஜர், கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் கர்நாடகத்தில், வீர சைவம் என்ற மதத்தை உருவாக்கினார். அவர்கள் வேதங்கள் அல்லது மறுபிறவி, சாதிய அமைப்பு ஆகியவற்றை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆண் பெண் சமத்துவத்தைக் கோரினர். அவர்கள் ராமரையும், கிருஷ்ணரையும் அனுமதிக்கவில்லை. ஆந்திர மாநிலத்தில் லிங்காயத்துக்கள் உள்ளனர். இன்றும் கூட அவர்கள் கணிசமான அளவு உள்ளனர்.

**சமுதாயச் சொத்து என்ற கருத்தை வீர சைவர்கள் பரப்பினர். ஒரு பக்தன் சம்பாதித்தால் அதனை அவனது குழுவினருடன் பங்கிட்டுக் கொள்ள வேண்டும். ஒருவனுடைய வருமானம் பற்றி அதிருப்தி அடையக் கூடாது. இந்த முறையில் சைவ சந்நியாசிகள் சமுதாயத்தில் உழைப்பார்கள். சகோதரத்துவத்தை உருவாக்கினர். இதற்கு “காயகா” என்று பெயரிட்டனர். “காயகமே விசுவாசம்” என்று அவர்கள் கூறினர்.**

இந்த இயக்கம் முற்றிலுமாக சாதீயத்திற்கு எதிரானது. இதன் முக்கியமான தலைவர்களில் ஒரு சிலர் ஒடுக்கப்பட்ட சாதியிலிருந்து வந்தார்கள். ஜேடேதா தேசாப்மய்யா ஒரு நெசவாளி. சங்கரதேசிமய்யா ஒரு தையல்காரர். மாதவ உள்ளய்யா ஒரு செருப்புத் தைக்கும் தொழிலாளி. ஹடப்ப அய்யா ஒரு நாவிதர். மதிவதமாதய்யா ஒரு வண்ணார். சைவ சந்நியாசிகளில் புகழ் பெற்ற பெண்கள் இருந்தனர். இவர்களில் மகாதேவி அக்கா, அக்க நாகம்மா, முக்தேஜி லெக்கம்மா, லிங்கம்மா, நிலம்மா, தங்கம்பில்லா ஆகியோர் இவர்களில் புகழ் பெற்றவர்கள். சமுதாயத்தில் பெண்களுக்குச் சம உரிமை வேண்டும் என்று வீர சைவ இயக்கம் வலியுறுத்தியது. சாரண இயக்கத்தினைச் சேர்ந்த வச்சனசாஹித்யா கர்நாடக மொழியை அதிகமாக வளர்த்தார். இதனை மறக்கக் கூடாது.



பசவராஜர்

பக்தி இயக்கத்தின் மூன்றாவது அம்சம் இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு முக்கியத்துவம் கொடுத்தது ஆகும். இதிலுள்ள எல்லாக் கவிஞர்களும் இதுபற்றிப் பாடவில்லை. கபீர், நானக், துளசிதாசர் மற்றும் சில சூபி கவிஞர்கள் இதனைப் பாடினர். கபீர் ராமானந்தரின் சீடராக உருவானார். ஆனால் பின்னால் அவர் தனது போதனைகளைச் செய்தார். அவர் ஒரு முஸ்லீமால் வளர்க்கப்பட்ட ஒரு ஒடுக்கப்பட்ட சாதி நெசவாளி. அவரது கவிதை மக்கள் கவிதை ஆகும். முஸ்லீம்கள் அவரை ஒரு சூபியாகக் கண்டனர். இந்துக்கள் அவரை பரம பக்தராகவும் கண்டனர். அவரது பாடல்களில் ஒன்றைப் பாருங்கள்.

“புனிதமான குளிக்கும் இடத்தில் நீர் தவிர வேறு ஒன்றுமில்லை. எனக்கு அது தெரியும். நான் அதில் குளித்துள்ளேன். பிம்பங்கள் எல்லாம் உயிரற்றவை. அவை பேசா. எனக்குத் தெரியும், அவை பற்றி நான் கதறியுள்ளேன். புராணங்களும் குரானும் வெறும் சொற்களே. திரையை தூக்கி நான் கண்டு கொண்டேன். ஒரு துறவியின் சாதி எது என்பது முட்டாள்தனம். நாவிதன் கடவுளை நாடுகிறான், வண்ணாரப் பெண்ணும், தச்சனும் அவ்வாறே.

ரய்டர் கூட கடவுளை நாடினவர் தான். சுரபச்ச முனிவர் ஒரு செம்மான். இந்துக்களும் முஸ்லீம்களும் இந்த முடிவினை அடைந்துள்ளனர். அதில் வேறுபாட்டு அடையாளம் இல்லை” (இது தாகூரின் மொழிபெயர்ப்பு)

சைதன்யர் ஒரு பக்திமான் மட்டுமல்ல. அவர் ஒரு தீவிரமான சமூக சீர்திருத்தவாதி. அவர் உருவாக்கிய கௌளிய வைஷ்ணவ இயக்கத்தில் மின்ந்பூரின் இனக்குழு மக்கள் உட்பட, ஏராளமான கீழ்சாதியினர் பங்கு பெற்றனர். அவரது ஆய்வுகளில் டாக்டர். பருள் டே என்பவர் இந்த வைஷ்ணவம் மிகவும் வலுவான ஒன்றாகியது என்றும் அது குறிப்பாக கீழ்சாதியினர் உட்பட சமுதாயத்தின் பல பிரிவினரை ஈர்த்தது என்றும் கூறுகிறார்.

(A Perspectives in Social Sciences - P.B.I.)

சைதன்யர் உருவாக்கிய கூட்டுப் பாடலுக்கு ஒரு கீழ்சாதி காய்கறி வியாபாரியான ஸ்ரீதரதாஸ் உட்பட பலர் வந்தனர். அவரது சீடர்களில் ஒருவரான நித்யானந்தர் இனக் குழுமக்களிடையே தொண்டு செய்தார். ராமானந்தர் சாதிய அமைப்பிற்கு எதிராகப் போராடினார். இவரது சீடர்களில் சிலர் முஸ்லீம்கள். அவர்களது மரபுப்படி, துதிக்க அவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

இஸ்லாமில் உள்ள குறைபாடுகளை எதிர்த்தவர் சூபிக்கள். அவர்கள் உலமாவின் மதவிளக்கத்தை எதிர்த்தனர். சூபிக்கள் நான்கு பிரிவுகளைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். கத்ரி, சுஹ்ரவர்தி, நக்ஷபந்தி, சிஸ்டி. இவையனைத்தும் இடப் பெயர்களுடன் தொடர்பானவை. கடைசியாக உள்ளவர்கள் (இவர்கள் பாரசீகத்தில் உள்ள சிருஷ்டியிலிருந்து வந்தவர்கள்) இந்தியாவில் பிரபல மரபினர். அதிர்ஷ்டவசமாக அடக்குமுறைக்கு உள்ளாகவில்லை.

பாபா ஷேக் பரீத் என்பவர் கி.பி.1173லிருந்து 1265 வரை லாகூரில் வசித்த ஒரு பிரபலமான சூபி. அவர் ஆண் பெண் சமத்துவம் பற்றிப் பேசினார். பாரசீக மொழியில் பெரிய அறிஞரான அவர் பஞ்சாபி மொழி வளர்ச்சிக்குப் பெரிதும் உதவினார். அவரது பல கவிதைகளை பஞ்சாபியில் எழுதினார். இந்துக்களிடையே அவருக்குப் பல சீடர்கள் இருந்தனர். “எல்லா இதயங்களும் தங்கங்கள், அவற்றிற்கு காயம் ஏற்படுத்தாதீர்” என்று தொடங்கும் அவரது நான்கு கவிதைகள் குரு கிரந்சாகிபில் சேர்க்கப்பட்டுள்ளன. உண்மையில் பரீத்தின் பாடல்களை சீக்கியர்கள் அடிக்கடி பாடுகின்றனர்.

குலாஜா நிஜாம்–உத்–தின் ஆஷனிய சையத் சுசரப், குலாஜா மொய்னுதீன் சிஸ்டி, முகமது பக்தியார் சுத்தி போன்றவர்கள் பிற சூபி கவிஞர்கள் ஆவர். முஸ்லீம் அரசர்கள் பற்றிய சூபி விமர்சனங்களில் ஒன்று அவர்கள் ஆட்சியை மதத்திற்கு மேலாக வைத்தனர் என்பதாகும். பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஷா முனி என்பவர் சித்தாந்த பேதம் என்ற நூலை எழுதினார். அல்லாவும் விஷ்ணுவும் ஒருவரே என்றும் அதில் கூறுகிறார். குரான் நாராயணனின் படைப்பு என்றும் கூறுகிறார்.

பவிஷ்யத் புராணம் என்பது பாலைவனத்தில் விஷ்ணுவின் அவதாரம் முகமது நபி என்று கூறுகிறது. அவர்களது கவிதையில் இந்துக்களும் முஸ்லிம்களும்




சகோதரர்களே என்று கபீரும், நானக்கும் கூறினர். பதினோராம் நூற்றாண்டு வாக்கில் இந்து முஸ்லீம் வேறுபாடு தோன்றத் தொடங்கியது. ஆனால் அவர்கள் கபா, காஷி, ராம், ரஹீம் ஆகியோர் ஒன்றே என்று கூறினர். அவர்களைப் பொறுத்த மட்டிலும் கோயில்களுக்கும் மசூதிகளுக்கும் வேறுபாடு எதுவுமில்லை. இவர்களின் சீடர்களில் பெரும்பாலோர் கைவினைஞர்கள், விவசாயத் தொழிலாளிகள் பிரிவிலிருந்து வந்தவர்கள். பிராமணராக இருந்தாலும், துளசிதாசர் மசூதியிலிருந்து உணவு பெறுவதைப் பெருமையாகப் பேசினார். ராமநாமத்தைப் பாடுவதையும் பெருமையாகப் பேசினார். “அரிசனங்கள்” என்ற பெயரை குஜராத்தில் முதன்முதலாக நரசிம்ம மேத்தா என்பவர் பயன்படுத்தினார். அதனை காந்திஜி அவரிடமிருந்து பெற்றார். இந்தக் கவிஞர்கள் எல்லோரும் சாதீயத்தை எதிர்த்தனர். இந்து முஸ்லீம் ஒற்றுமையை வளர்க்க விரும்பினர்.

**12ஆம் நூற்றாண்டு தொடங்கி 16ஆம் நூற்றாண்டு வரை பக்தி இயக்கம் 500 ஆண்டுகளாக இருந்தது. இந்தக் காலகட்டத்தில் தான் இந்தியாவில் தேசிய உணர்வு வளரத் தொடங்கியது. மொழி வளர்ச்சிக்கும், பிராமணிய ஆதிக்கத்திற்குட்பட்ட கலாச்சார எதிர்ப்பிற்கும் இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கான கருத்துக்களுக்கும் பக்தி சூபி இயக்கம் அளித்த பங்கினை புதியதாக ஆராய வேண்டும்.**

### மேற்கத்திய கலாச்சாரத்தின் வருகை

இந்து அரசர்களுக்கும், முஸ்லீம் அரசர்களுக்கும் இடையேயும் போர்கள் வெள்ளையர்கள் வருவதற்கு முன்பே இடம் பெற்றன. இந்துக் கோயில்களை அழித்த முஸ்லீம் அரசர்களும் இருந்தனர். சிலைகளுக்கு அடியே வைக்கப்பட்டிருந்த தங்கம், வைரம் ஆகியவற்றைக் கொள்ளையடிக்க இதனைச் செய்த இந்து அரசர்களும் இருந்தனர். கஜனி முகமதுவும், அவருக்கு முன்பு காஷ்மீரத்து ஹர்ஷரும் பிரபலமான சிலை உடைப்பவர்கள் ஆவர். இருவருமே கொள்ளையடிப்பதை லட்சியமாகக் கொண்டவர்கள். மதரீதியாக ஒதுக்கப்பட்டவர்கள். இந்துக்களும், முஸ்லீம்களும் ஒன்றாக வசித்தார்கள் என்று நாம் கூறுவது விவாதங்கள் அவர்களுக்குள்ளே இல்லை என்பதல்ல. அது மதச் சகிப்புத் தன்மை மிகவும் குறைவாக சமுதாயத்தில் இருந்த காலமும் உண்டு. தென்னிந்தியாவில் பௌத்தரும், சமணரும் பிராமணர்களால் கொடூரமாகத் தாக்கப்பட்டது இதற்கு ஒரு உதாரணம். இங்கு விவரங்கள் கொடுக்கப்படவில்லை.

வெள்ளையர்களது அரசாட்சி இந்த மூன்று போக்குகளின் வளர்ச்சியைக் கண்டது.

**ஒன்று அதிகார வர்க்கத்தினர் திட்டமிட்டு, முஸ்லீம்களும், இந்துக்களும் வெவ்வேறானவர்கள் என்றும், அவர்களது நலன்கள் வேறுவேறானவை என்றும் பிரச்சாரம் செய்தனர். ஜேம்ஸ் மில் எழுதிய “இந்திய வரலாறு” இதற்குச் சிறந்த உதாரணம்.**

# பின்னால் உள்ள உண்மைகள்

மதவாத அடிப்படையில் இவ்வாறு பண்டைய இந்தியா இந்துக்களின் பொற்காலம் என்றும், மத்திய கால இந்தியா முஸ்லீம் ஆதிக்கத்தின் காலம் என்றும் விளக்கியது பெரும்பாலோர் மனதில் இடம் பிடித்தது. பண்டைய இந்தியாவின் எல்லா தத்துவங்களையும் இந்து தத்துவங்கள் என்று மில் கூறினார். எல்லா சந்தர்ப்பங்களிலும் ஒரு மதவாத விளக்கத்தை வெள்ளையர்கள் கொடுக்க முயற்சித்தனர். 1905ஆம் ஆண்டு வங்காளப் பிரிவினை நிர்வாக முறைகளின் மூலம் மத உணர்வுகளை ஊக்குவித்ததற்குச் சிறந்த உதாரணம் ஆகும்.

**இரண்டாவது போக்கு தங்களை கீழை தேசவாதிகள் என்பவர்களால் உருவாக்கப்பட்டது. இவர்கள் சமஸ்கிருதத்தையும், பாலியையும் கற்றவர்கள். இந்த மொழியில் உள்ள பல நூல்களை வெளிக்கொண்டு வந்தவர்கள். இவர்களது முயற்சியால், நான்கு வேதங்களும் பதிப்பிக்கப்பட்டன. வேதங்களை பிராமணர்கள் மட்டுமே கற்க முடியும்; இவற்றைக் கேட்பதற்குக் கூட சூத்திரர்கள் தடுக்கப்பட்டிருந்தனர்.**

பிரம்ம சமாஜத்தின் மூலம் வேதங்களை ராஜாராம் மோகன்ராய் பரப்புவதற்கு முயற்சித்ததை ஆந்திர பிராமணர்கள் எதிர்த்தனர். இது இந்திய மறுமலர்ச்சியின் ஒரு விறுவிறுப்பான பகுதியாகும்.

இந்த கீழை தேசவாதிகள் இந்தியப் பாரம்பரியத்தின் சிறப்பினை மிகையாகக் கூறினர். அவர்களது மேற்கத்தியப் பின்னணியிலிருந்து அந்நியமான இந்த அறிஞர்கள் இந்தியத் தத்துவத்தில் உள்ள சில கருத்துக்களால் ஈர்க்கப்பட்டனர். இதில் வியப்பேதும் இல்லை. இந்தியத் தத்துவத்தில் உள்ள வேதாந்தம், மோட்சம் என்ற இரு கருத்துக்களும் இவர்களை அதிகமாகக் கவர்ந்தன. பிரபலமான இந்தியவியல் அறிஞர் மாக்ஸ் முல்லர் இதற்கு நல்ல உதாரணம். அவர் தனது பெயரை மோட்ச முல்லர் என்று வைத்துக் கொண்டு இங்கிலாந்தில் வேதாந்தத்தினைப் பரப்ப முயன்றார். ஏனைய தத்துவங்களை விட இந்துத் தத்துவம் சிறந்தது, இந்தியா தான் ஆன்மீகச் சிந்தனையின் பிறப்பிடம். பிற நாடுகளில் குறிப்பாக இங்கிலாந்தில் பொருள் முதல் வாதம் ஆட்சி செய்கிறது போன்ற கருத்துக்களை இந்த கீழை தேச இயலாளர்கள் உருவாக்கினர். இத்தகைய மிகைகளும், அரை குறை உண்மைகளும், புரிதலில் பல புதிய பிரச்சனைகளைத் தோற்றுவித்தன.

**மூன்றாவது போக்கு ஆரோக்கியமானது. இது இந்திய சிந்தனை, கருத்துக்கள், சடங்குகள் ஆகியவற்றை சீர்திருத்த வேண்டும் என்ற இயக்கம் ஆகும். பிரபல தத்துவவாதிகளும், சிந்தனையாளர்களுமான ராஜாராம் மோகன்ராய், கேசவ சந்திரசென், ராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர், அரவிந்தர், பாலகங்காதர திலகர், நாராயண குரு போன்றவர்கள் இப்பிரிவினர்.**

பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பாதியிலும் இவர்களது பங்களிப்பு இந்தியா மதசார்பற்ற சனநாயக நாடு என்ற நிலைக்கு முன்னேற உதவியது. காந்தி, சுப்பிரமணிய பாரதி, பிரேம் சந்த், நேரு ஆகியோர்களது இதே தன்மையான பங்களிப்பையும் புறக்கணிக்க முடியாது. இதேபோன்று புரட்சிகர இயக்கங்களும், மறுமலர்ச்சிக்கான பல இயக்கங்களும், புதிய கருத்துக்களைப் பரப்பின. இவை தற்கால இந்தியாவிற்கான அடித்தளத்தை அமைத்தன. இந்தப் பாரம்பரியத்தை மாற்ற இந்துத்துவா போன்ற கருத்துக்கள் தோன்றியுள்ளன.

## இந்தியத் தன்மையும் இந்துத்துவாவும்

இந்தியத் தன்மை என்ற சொல்லின் அர்த்தம் என்ன? சிலர் விளக்க முற்பட்டது போல, அது இந்து சிந்தனை, கருத்துக்கள் என்பன மட்டும் தானா? இல்லை. ஏனென்றால் அத்தகைய விளக்கம் குறுகலானது; உண்மையாக இருந்தாலும் விஞ்ஞானத்திற்குப் புறம்பானது. இந்த நாட்டில் பல கலாச்சாரங்களும், சிந்தனை ஓட்டங்களும் இருந்திருக்கின்றன. அவற்றைப் புறக்கணிப்பது என்பது நமது பாரம்பரியத்தில் உள்ள நல்லதைப் புறக்கணிப்பது ஆகும். இந்திய பாரம்பரியம் பற்றிய குறுகலான விளக்கம், தாராளமான விளக்கம் ஆகியன புதியதொன்றுமல்ல. இந்த இருபோக்குகளும் இதற்கு முன்பே இருந்தன. பாதாரண்யரும், சங்கரரும் முதல் முறையைக் கையாண்டனர். பிரம்ம சூத்திரங்களை விளக்கும் பொழுது முதல் முறையை பாதாரண்யர் கையாண்டார். சங்கரர் அவரை தீவிரமாகப் பின்தொடர்ந்தார். பிரம்ம சூத்திரத்தின் முதல் இரு அதிகாரங்களில் 60 சூத்திரங்களில் பௌத்தம், சாங்கியம், நியாயம், வைசேடிகம், பாஞ்சராத்திரம் ஆகிய தர்சனங்களை மறுத்து அவர்கள் புறந்தள்ளினர். உபநிடதங்களில் உள்ளபடியான வேதங்கள் தாம் உண்மையானவை என்று அவர்கள் கூறினர். சங்கரரது கருத்துப்படி, பௌத்தம், சாங்கியம், நியாயம், வைசேடிகம் போன்ற தத்துவங்கள் இந்தியப் பிரம்மச்சாரியத்தின் பகுதிகள் அல்ல. ஏனென்றால் அவை வேதங்களின் மேலாண்மையை ஏற்றுக் கொள்ளவில்லை. ஒரு வழியில் அவை பொருள் முதல்வாதத் தன்மை உள்ளவை.

ஆனால் பகவத்கீதையின் அணுகுமுறை வேறானது. அது சங்கரரது அணுகுமுறையிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. கீதையில் 17 இந்தியத் தத்துவ தரிசனங்கள் விளக்கப்படுகின்றன. ஒவ்வொன்றை விளக்கும் பொழுதும் அவற்றின் முக்கியத்துவம் கூறப்படுகிறது. சாங்கியத்தையும், வைசேடிகத்தையும் அது முற்றிலுமாகப் புறந்தள்ளவில்லை. கீதையில், முனிவர்களில் சாங்கியத்தின் மூலவரான கபிலர் என்று கிருஷ்ணர் தன்னைக் கூறிக் கொள்கிறார். இவ்வாறு வெவ்வேறு தத்துவக் கருத்துக்களைக் கூறும் பொழுது ஒருவருக்குக் குழப்பமாக இருக்கலாம். எனவே கீதையின் ஆசிரியரது சிந்தனையைக் கிளறும் பதில் பின்வருமாறு உள்ளது.

“புதிர்களுக்கு எல்லாம் புதிரான இந்த அறிவுபற்றி நான் உனக்கு விளக்கியுள்ளேன். இதுபற்றி முழுவதுமாக சிந்தி; உனக்கு எது நல்லது என்று தெரிகிறதோ அதைச் செய்; ஒன்றை உயர்த்தியும் மற்றொன்றை தாழ்த்தியும் செய்யும் முயற்சி இங்கு இல்லை.” “நீ எது நல்லது என்று நினைக்கிறாயோ அதைச் செய்.” கீதையின் ஆசிரியர் தரும் தாராளமான அறிவுரை இதுதான். இந்த இரு அணுகுமுறைகளில் ஒன்று குறுகலானது. மற்றொன்று தாராளமானது. நமது பாரம்பரியத்தினை விளக்குவதில் இவை இரண்டும் இன்னும் தொடருகின்றன.

## இந்தியச் சிந்தனை – வளமான கட்டுமானம்

**ராமபக்தி அல்லது ராமர் மீதான அன்பு மட்டும் தான் இந்துத்துவத்தின் அடையாளம் என்று இன்று சிலர் கூறுகின்றனர். அவ்வாறாயின் வைஷ்ணவர்கள், சைவர்கள், சாலாபததியர்கள், சாந்தேயர்கள், வீர சைவர்கள், அய்யப்ப பக்தர்கள், முருக பக்தர்கள் ஆகியோர்கள் என்ன ஆவார்கள். அவர்கள் இந்துக்கள் இல்லையா? அல்லது அவர்கள் இரண்டாம் தர இந்துக்களா?**

இந்திய சிந்தனைப் பிரிவுகள் பல உள்ளன. பூர்வ மீமாம்சகர்கள் (இது ஒரு பிராமணிய தர்சனம்) சாங்கியர்கள் பௌத்தர்கள், சைனர்கள், காபாலிகர்கள், பாஞ்சராத்திரர்கள், காளமுகர்கள், வீரசைவர்கள், சித்தர்கள் ஆகியோர் இதற்கு உதாரணம். இவற்றில் உட்பிரிவுகள் உண்டு. ஆறு பௌத்த, ஐந்து சைன, ஒவ்வொன்றிலும் நான்கான வைணவ, சைவ ஆகிய பிரிவுகள் உள்ளன. இவற்றில் பல வேத மேலாண்மையை ஏற்றுக் கொள்வதில்லை. பக்தி இயக்கத்திலும், சூபி இயக்கத்திலும், பல பிரிவுகள் உள்ளன. இந்த சிந்தனை அமைப்புகளின் இணைப்பினைத் தான் நாம் இந்தியச் சிந்தனை என்று கூற முடியும். ஆனால் வேதாந்தமும், பிராமணியச் சிந்தனையும் மட்டுமே இந்தியச் சிந்தனை என்று கூறுபவர்கள் உண்மையில் நமது வளமான பாரம்பரியத்தை மறுக்கிறார்கள்.

## இந்துத்துவா என்பது என்ன?

ஆர்.எஸ்.எஸ்ஸின் நிறுவனத் தலைவர் டாக்டர். ஹெட்கெவார் இந்துத்துவா என்ற புதிய கோணத்தை வைத்தார். மதத்தை அரசியலுடன் கலப்பது என்பது அவரது கருத்து. அவரது கருத்து இந்து அல்லாதவர்களின் தேசபக்தி சந்தேகத்திற்குரியது; இந்தியாவை இந்து ராஷ்ட்டிரம் என்று அறிவிக்க வேண்டும் என்பதாகும். இதற்காக ஆர்.எஸ்.எஸ். இந்தியாவின் அரசியல்சட்டத்தை மறுபடியும் எழுத வேண்டும் என்று கோருகிறது. மதச் சார்பின்மை, சனநாயகம் ஆகிய கூறுகளை அதிலிருந்து அகற்ற வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். நாட்டை மத்திய காலத்திற்கு எடுத்துச் செல்வதாகும்.

சாதிய அமைப்பிற்கு எதிரான எதுவும் இந்துத்துவாவில் இல்லை. இந்து சமுதாயத்தில் நிலவும் தீய செயல்களை அகற்ற அதில் எதுவும் இல்லை. இந்து ராஷ்டிரம் என்று அவர்கள் கூறுவதை அவர் சொற்களிலேயே காணலாம்.

“ஒரு இந்து அரசு என்பது எப்பொழுதுமே மதசார்பற்ற சனநாயக அரசாகவே செயல்பட்டு உள்ளது. பாசிசத் தன்மையுள்ள அல்லது எதேச்சாதிகாரமான இந்து அரசன் என்று யாருமே இருந்ததில்லை. பாரதத்தில் இந்து அரசாட்சியின் வரலாறு மதசார்பற்ற பாரம்பரியத்திற்கு சிறந்து நற்சான்றிதழாக உள்ளது” (இந்து ராஷ்ட்ரம் ப.19)

நமது நாட்டில் வரலாறு பற்றிய இப்புரிதல் மோசமானதாக உள்ளது. அஜாதசத்ரு, பிம்பிசாரர், சந்திரகுப்தர் மிமி, ஹர்ஷர், சிலாத்தியர் ஆகியோரது வரலாறு இந்திய வரலாற்று மாணவர்களுக்கு நன்கு தெரிந்த ஒன்று. இந்த அரசர்களது ஆட்சியானது சனநாயகத்தன்மை உள்ளது, மதச்சார்பற்றது என்று யாரும் கூறியதில்லை. இதே துண்டுப் பிரசுரம் இந்துத்வா என்ற கொள்கையை பின்வருமாறு விளக்குகிறது.

“இந்தியாவில் தேசிய இனம் எது என்பதைத் தெளிவுபடுத்த வேண்டியுள்ளது. தங்களை தனி நாட்டினர் என்று கூறி முஸ்லீம்கள் ஒரு தனி நாட்டைப் பெற்றுள்ளனர். எனவே இந்தியாவை விட்டுச் சென்ற முஸ்லீம்கள் இந்தியா என்பது ஒரு இந்து நாடு, இந்துக்கள் தாம் பெரும்பான்மையோர் என்று ஒப்புக் கொள்வதில் தயங்குவதில்லை. பாகிஸ்தானுக்குச் செல்லாத முஸ்லீம்கள் இந்தியாவிற்கு உண்மையாக இருக்க வேண்டும். பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டு விட வேண்டும்... 21, 30, 37 ஆகிய பிரிவுகள் வேறுபாட்டைக் கொண்டவை. அவை அரசியல் சட்டத்திலிருந்து அகற்றப்பட வேண்டும். இந்திய அரசியல் சட்டத்திற்கும், மனிதநேயத்திற்கும் எதிரான அரசியல் சட்டத்தில் உள்ள முஸ்லீம் தனிப்பிரிவுகள் சட்டவிரோதமானவை என்று அறிவிக்கப்பட வேண்டும்.


பிரிவினைவாதத்தை விட்டுக் கொடுக்காத முஸ்லீம்களையும், சிறுபான்மையோரையும் அந்நியர்கள் என்று அறிவிக்க வேண்டும். அவர்களுக்கு ஓட்டு உரிமை இருக்கக் கூடாது. ஈரானிய முஸ்லீம்கள், இஸ்லாத்திற்கு முந்திய ஈரானிய அடையாளங்களுடன் தங்களை இணைத்துக் கொள்வதில் பெருமையடையும் பொழுது, இந்து மூதாதையர்களின் வாரிசுகளான 98 சதவீத இந்திய முஸ்லீம்கள், ஏன் இந்துஸ்தானத்தின் மிகப்பெரிய புதல்வனான ராமருடன் தங்களை இணைத்துக் கொள்ளக் கூடாது? மொழிவழிச் சிறுபான்மையோரைப் பொறுத்தமட்டிலும், பிரச்சினை ஒன்றுமில்லை. ஏனென்றால் இந்தியாவின் பெரும்பான்மை மொழிகள் சமஸ்கிருதத்திலிருந்து வந்தவை ஆகும். எல்லா மொழிகளும் தேவ நாகரி எழுத்துக்களையும் பின்பற்றி சமஸ்கிருத்தைப் படிக்க வேண்டும் என்று கூறினால் இங்கு மொழிச் சிறுபான்மையோர் என்ற பிரச்சினை இருக்காது. (ஏன் இந்து ராஷ்ட்டிரம் பக். 46, 47, 48)

ஆர்.எஸ்.எஸ்ஸின் இந்துத்வா தத்துவத்தின் உண்மையான தன்மையை இக்கூற்றுக்கள் ஐயத்திற்கு இடமின்றி காட்டுகின்றன. அவர்களது எண்ணப்படி, சிறுபான்மையோரைப் பாதுகாக்கும் அரசியல் சட்டப்பிரிவுகள் நீக்கப்பட வேண்டும். முஸ்லீம்கள் ராமரை நேசிக்க வேண்டும். தாராளவாத நோக்குள்ள இந்துக்கள் கூட ஏற்றுக் கொள்ள முடியாத இனவாத அணுகுமுறை இதில் உள்ளதைக் காண முடியும். இது உண்மையான இந்து பாரம்பரியத்திற்கு எதிரானது. ஒரே ஒரு உண்மை தான் உள்ளது. அறிஞர்களால் அது பல்வேறு வழிகளில், விளக்கப்படுகிறது. இந்த இந்தியப் பாரம்பரியத்தை மறுக்கும் எதுவுமே அதற்கு அந்நியமானது என்று கைவிடப்பட வேண்டும்.

**தமிழில்: எஸ்.தோதாத்ரி**

**நன்றி: திணை, மார்ச் – ஆகஸ்ட் 2019**

**முற்றும்**





# அனைத்திந்திய மாணவர் பெருமன்ற மாவட்ட மாநாடுகள்

**இராமநாதபுரம்:** அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாவட்ட பேரவை கூட்டம் 06.01.2023 அன்று தியாகிகள் இல்லத்தில் டி.ராகுல் தலைமையில் நடைபெற்றது. கட்சியின் மாவட்டச் செயலாளர் என்.எஸ். பெருமாள், இளைஞர் பெருமன்ற மாவட்டப் பொருளாளர் வி.ஆரோக்கியராஜ், ஏஐடியுசி மீனவர் சங்க மாவட்ட துணைத் தலைவர் வாழபாண்டி, இளைஞர் ஒருங்கிணைப்பாளர் பா.சண்முகராஜன் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மாணவர் பெருமன்ற மாநில செயலாளர் தினேஷ் சீரங்கராஜ் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். மாவட்டத் தலைவராக வி.இந்துமதி, செயலாளராக டி.ராகுல், பொருளாளராக ஜே.இரவிக்குமார், துணைத் தலைவராக ரவிக்குமார், துணைச் செயலாளராக வித்யா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். இராமநாதபுரம் நகரில் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி அமைக்க வேண்டும், மீன்வளத்துறை சார்ந்த கல்வி படிப்புகளும், கல்வி நிலையங்களும் துவங்கப்பட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

**சிவகங்கை:** அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் சிவகங்கை மாவட்ட பேரவை கூட்டம் 07.01.2023 அன்று நவீன் குமார் தலைமையில் நடைபெற்றது. கிருஷ்ணகுமார் கொடியை ஏற்றிவைத்தார். மாநிலச் செயலாளர் தினேஷ் சீரங்கராஜ் அரசியல் அமைப்பு நிலைப்பற்றி உரையாற்றினர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் மு.கண்ணகி, விவசாய சங்க மாநிலத் தலைவர் எஸ்.குணசேகரன், கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் கே.கோபால் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாவட்டத் தலைவராக நவீன்குமார், மாவட்டச் செயலாளராக ஆர்.கிருஷ்ணகுமார், பொருளாளராக சுந்தர், துணைத்தலைவர்களாக எஸ்.சூர்யா, எஸ்.மனோஜ், துணைச் செயலாளர்களாக எஸ்.சந்தோஷ், இ.கெவின்பிராங் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**சேலம்:** அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் சேலம் மாவட்ட 15வது மாநாடு சேலம் ஆர்.பி.மகாலில் 08.01.2023 அன்று மாவட்ட துணைத் தலைவர் தீனதயாளன் தலைமையில் நடைபெற்றது. முன்னாள் மாவட்டத் தலைவர் கனியன் பூங்குன்றன் மாணவர் பெருமன்றக் கொடியினை ஏற்றி வைத்தார்.



கட்சியின் மாவட்டச் செயலாளர் ஏ.மோகன், இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் இரா.ரமேஷ், வங்கி ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் எஸ்.சம்பத், இன்சூரன்ஸ் சங்க நிர்வாகி ஜி.அரவிந்தன், வழக்கறிஞர் டி.மனுவேல் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இளைஞர் பெருமன்ற மாநில செயலாளர் க.பாரதி, மாணவர் பெருமன்ற மாநில தலைவர் மௌ.குணசேகர் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

மாவட்டத் தலைவராக கே.எஸ். தீனதயாளன், செயலாளராக பா.தினேஷ், பொருளாளராக எம்.மணிபாரதி, துணைத் தலைவர்களாக ஏ.கலைவாணன், வி.சண்முக பாண்டியன், கனிமொழி, துணைச் செயலாளர்களாக டி.சந்துரு, ஏ.கரண், சந்துரு ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். அரசு வேளாண்மை கல்லூரி சேலத்தில் அமைக்க வேண்டும், சேலம் அரசு கலைக் கல்லூரிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

**புதுக்கோட்டை:** அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் புதுக்கோட்டை மாவட்ட 6வது மாநாடு 08.01.2023 அன்று திருமங்கலம் ஒன்றியம், கொத்தமங்கலம் தங்கம் திருமணம் மண்டபத்தில் மு.செல்லமுத்து நினைவரங்கத்தில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் விஜய் தலைமை தாங்கினார்.

கட்சியின் மாவட்டச் செயலாளர் தா.செங்கோடன் மாநாட்டினை துவக்கி வைத்து உரையாற்றினார். மாநில செயலாளர் தினேஷ் சிரங்கராஜ் சிறப்புரையாற்றினார். இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் கு.ராஜேந்திரன், தேசியக் குழு உறுப்பினர் வழக்கறிஞர் பவிதாரணி, மாவட்டத் தலைவர் மு.கைலாச பாண்டியன், மாதர் சம்மேளன மாவட்டச் செயலாளர் இந்திராணி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். மாவட்டத்திற்கு ஒரு சட்டக் கல்லூரி அமைத்திட வேண்டும், ஆவுடையார் கோவில் தாலுகா கள்ளனேந்தல் அமைந்திருக்கும் அரசு கல்லூரிக்கு சுற்றுச்சுவர் அமைத்திட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

மாவட்டத் தலைவராக கே.முத்துலட்சுமி, துணைத் தலைவராக எஸ்.சடையய்யா, செயலாளராக கார்த்திக், துணைச் செயலாளர்களாக என்.முத்துலட்சுமி, எஸ்.கஸ்தூரி, பொருளாளராக கௌசிக் ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

**திருச்சி மாநகர்:** திருச்சி மாநகர் மாவட்ட 15வது மாநாடு 8.1.2023 அன்று உறையூர், ராமலிங்க நகர் பகுதியில் அமைந்துள்ள கூட்டுறவு மினி ஹாலில் மாணவர் பெருமன்ற மாவட்டத் தலைவர் என்.எஸ். பாட்ஷா மற்றும் ஆர்த்தி தலைமையில் நடைபெற்றது. மாணவர் பெருமன்ற மாநில துணைச் செயலாளர் ஜி.ஆர்.தினேஷ்குமார் கொடியேற்றி துவக்க உரையாற்றினார்.

மாணவர் பெருமன்றத்தின் முன்னாள் மாநில செயலாளர் எம். செல்வராஜ், முன்னாள் மாநில தலைவர் ஆர்.மணி மோகன், கட்சியின் மாவட்ட செயலாளர் எஸ்.சிவா, ஏஐடியுசி பொதுச் செயலாளர் க.சுரேஷ், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாவட்டச் செயலாளர் எஸ்.சூர்யா மற்றும் தொழிற்சங்க நிர்வாகிகள் இரா.சுரேஷ் முத்துசாமி, எம்.ஆர்.முருகன், டி.ராஜா, சையது அபுதாகிர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

திருச்சி மாநகர் மாவட்டத் தலைவராக க.இப்ராஹிம், துணைத் தலைவர்களாக என்.எஸ்.பாட்ஷா, எம்.நந்தகுமார், து.அஜித் குமார், செயலாளராக ஆர்.கார்த்திக், துணைச் செயலாளர்களாக எம். சுதர்சனம், எம்.ஜெய்லானி, டி. சஞ்சய், பொருளாளராக த.ஜீவானந்தம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மாணவர் பெருமன்ற மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் எம்.செல்வகுமார் நிறைவுற்றினார். மாவட்டப் பொருளாளர் கௌதம் நன்றி கூறினார்.

20 பல்கலைக்கழகங்களில் பட்டமளிப்பு விழா நடத்த அனுமதி தராமல் தொடர்ந்து காலம் தாழ்த்தி வரும் ஆளுநர் ஆர்.என். ரவியை கண்டித்தும் மற்றும் கேந்திர வித்யாலயா பள்ளியில் தமிழை பயிற்று மொழியாக கொண்டு வர வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**திருநெல்வேலி:** திருநெல்வேலி மாவட்டப் பேரவைக் கூட்டம் 08.01.2023 அன்று பாலன் இல்லத்தில் பி.ஷிபானா தலைமையில் நடைபெற்றது. மாணவர் பெருமன்ற மாநில பொருளாளர் சு.பாலசுப்பிரமணியன் கொடியேற்றி சிறப்புரையாற்றினார்.

ஏஐடியுசி மாநிலத் தலைவர் எஸ்.காசி விஸ்வநாதன், வங்கி ஊழியர் சங்க தலைவர் ஆர்.ரங்கன், ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் ஆர்.சடையப்பன், இளைஞர் பெருமன்ற நிர்வாகிகள் நெல்லை பி.சுரேஷ், கே.முத்துகிருஷ்ணன், எஸ்.ஏ.பி.பாலன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மாவட்டத் தலைவராக எம்.வினோத், செயலாளராக எம்.நவராஜ் மோசஸ், பொருளாளராக பி.ஜீவாபாரதி, துணைத் தலைவராக எஸ்.சௌமியா, துணை செயலாளர்களாக விஷ்வ பாரதி, எஸ்.மீனா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். கட்சியின் மாவட்டச் செயலாளர் செ.லட்சுமணன் நிறைவுறையாற்றினார்.

தொடர்ச்சி 11ம் பக்கம்

---

16 ம் பக்கத் தொடர்ச்சி

வரக்கூடிய வருமானம் சமமாக பங்கு வைக்கப்பட்டால், அவனவன் தேவைக்கேற்றபடி எல்லாமும் கிடைக்கிற அளவுக்கு பங்கு வைக்கப்பட்டு இருக்கிறதா ? என்றால் இல்லை. நம்முடைய வயிற்றில் அடித்து, அடித்து மிகப் பிரமாண்டமான முதலாளிகள் உருவாகி இருக்கிறார்கள்.

அதற்கு என்னென்ன கொள்கைகள் வேண்டுமோ அதையெல்லாம் வகுக்கிறார்கள். இந்திய தொழிற்சங்க இயக்கத்திற்கு 150 ஆண்டு கால வரலாறு உள்ளது. 44 சட்டங்கள் வேறு ஒன்றும் இல்லை சுருக்கி மூன்றே வார்த்தைகளில் சொல்லிவிடலாம்.

ஒன்று வேலைக்கு உத்தரவாதம், 60 வயசு வரை எனக்கு வேலை இருக்கிறது. இரண்டாவது வேலை பார்த்தால் ஏழாம் தேதி அல்லது 10ஆம் தேதிக்குள் சம்பளம் கொடுக்க வேண்டும். சம்பளம் எவ்வளவு என்று பேசி முடிக்க வேண்டும். அந்த சம்பளத்தைத்தான் கொடுக்க வேண்டும். அந்த சம்பளத்தை நீ கொடுக்கவில்லை என்றால் பத்து மடங்கு அபராதம் உன்னிடம் வசூலிக்கலாம். இதுதான் சம்பளத்திற்கான உத்தரவாதம்.

மூன்றாவது ஓய்வுக்கு பின்னர் வெறும் கையை வீசிக்கொண்டு நான் சென்றால் மீதி இருக்கிற வாழ்க்கை எப்படி கடத்துவது? பிச்சை எடுத்து கஞ்சி குடிக்க வேண்டுமா? எனக்கு கௌரவமான வாழ்க்கை இல்லையா? ஆகவேதான் எத்தனை ஆண்டுகள் வேலை செய்தானோ அத்தனை நாட்களுக்கு கிராஜுட்டி, அதிலிருந்து கொஞ்சம் காசை எடுத்து பென்ஷன், மீதி வாழ்க்கையை சாப்பாட்டிற்கே கஷ்டப்படாமல் வாழ வேண்டும்.

உடம்புக்கு முடியவில்லை என்றால் ஈஎஸ்ஐ மருத்துவமனைக்கு செல்லலாம். காசு இல்லாமல் வைத்தியம் பார்க்க முடியாமல் செத்து விடக்கூடாது.

இந்த மூன்றில் இருந்தும் பாதுகாப்பதற்காக கொண்டுவரப்பட்ட சட்டங்களை கொஞ்சம் கொஞ்சமாக நகர்த்தி எடுத்து விட்டார்கள். தற்போது அவுட்சோர்சிங் முறை கொண்டு வந்திருக்கிறார்கள் அப்படி என்றால் வேலைக்கு வெளியில் இருந்து ஆட்களை வாடகைக்கு எடுப்பது. அன்றைக்கு வேலை பார்த்தால் அது கேஷுவல், ஆனால் 365 நாள் வேலை பார்த்தாலும் வாடகை தொழிலாளிதான் என்கிறான்.

மோடி அரசாங்கம் சொல்லிவிட்டது எங்கள் கையில் பணம் இல்லை, எனவே பென்சனை பற்றி இப்போது பேசாதீர்கள் என்று சொல்லிவிட்டது.

ஆனால் 80,000 கோடி ரூபாய் கடன் வைத்துள்ள நீரவ் மோடிக்கு 72 ஆயிரம் கோடி ரூபாய் தள்ளுபடி செய்து இருக்கிறார்கள். அவனை எண்பதாயிரம் கோடி ரூபாய் கடன் இருக்கிறதா? வா நீ ஒரு 8000 கோடி ரூபாயை கட்டு, பாக்கி எல்லாம் உனக்கு தள்ளுபடி போ... என்று சொல்லிவிட்டு அரசாங்கம் என்ன சொல்லுகிறது. நாங்கள் வசூல் ஆகாத கடனிலிருந்து எட்டு ஆயிரம் கோடி ரூபாய் வசூல் செய்து விட்டோம் என்று. 72 ஆயிரம் கோடி ரூபாய் போய்விட்டது அதை சொல்ல மாட்டேன் என்கிறார்கள். ஆனால் 8000 கோடி ரூபாய் வசூல் செய்து விட்டோம் என்று சொல்லுகிறார்.

அதே நேரத்தில் தொழிலாளிக்கு வழங்கப்படும் ஆயிரம் ரூபாய் பென்ஷனை 2000 ரூபாயாக உயர்த்தி கொடு என்றால் கொடுக்க மாட்டார்கள். மோசமான ஒரு அரசாங்கம் நடந்து கொண்டிருக்கிறது.

ஒரே நாடு, ஒரே தேசம், ஒரே கொடி என்றால் மாநிலங்கள் இருக்கக் கூடாது. மாநிலம் என்று இருந்தால் தானே நீட் தேர்வு வந்தால் எதிர்க்கிறீர்கள். வேளாண் சட்டம் போட்டால் எதிர்க்கிறீர்கள்.

மாநில அரசாங்கம் எதற்கு ? தமிழ்நாடு என்ற பெயர் சரியில்லை, ஆகவே தமிழ் நாட்டை தமிழகமென்று மாற்றிவிடுவோம் என்று ஆளுநரை சொல்கிறார்.

ஆன்லைன் சூதாட்டத்தில் குடும்பம் குடும்பமாக சாகிறது, அது தவறு என்று சொன்னால் மேலே உட்கார்ந்து கொண்டு சூதாட்ட முதலாளிகளோடு கும்மாளம் அடிகிறார் கவர்னர்.

பழைய சனாதன கருத்துக்களில் இருந்து நாம் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி வருகிறோம். காதல் திருமணங்களும் நம்ம ஊரில் அதிகரித்துள்ளது. பெண்கள் என்றாலே போகப் பொருள் என்ற பார்வை தமிழ் மண்ணில் மாறி வருகிறது.

எல்லாவற்றிலும் சனாதனத்தை பரப்புவதிலும், மூடத்தனத்தை பரப்புவதிலும் பழமை வாதத்தை பரப்புவதிலும் சாதியாகவும், மதமாகவும் சண்டை போட்டுக் கொண்டே இரு, ஆனால் இன்னொரு பக்கம் நான் வாரி வாரி கொடுப்பேன் நீ கண்டுகொள்ளாமல் இரு என்று சொல்லுவது நயவஞ்சகத்தனமானது அல்லவா?

சின்னையன், ராமையன், ரங்கண்ணன், வெங்கடாசலம் இந்த தியாகிகளின் நினைவு மேடையில் இருந்து நாம் இந்தியாவை பாசிச சக்திகளிடமிருந்து விடுவிப்பதற்கு இந்த நேரத்திலே உறுதியேப்போம். என்று சொல்லி நிறைவு செய்கிறேன் வணக்கம்'', என்றும் கூறினார்.

இந்த நிகழ்ச்சிகளுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சூலூர் வடக்கு ஒன்றிய செயலாளர் பி.எஸ். ராமசாமி தலைமை தாங்கினார். சிபிஎம் பாலகிருஷ்ணன் வரவேற்புரை நிகழ்த்தினார். சிபிஎம் மத்திய குழு உறுப்பினர் பி.சண்முகம், பி.ஆர்.நடராஜன் எம்.பி., சிபிஐ மாவட்ட செயலாளர் சி.சிவசாமி, கே.எம்.செல்வராஜ்,

சிபிஐ மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் மௌனசாமி ஆகியோர் சிறப்புரையாற்றினார் கே .சுரேஷ் நன்றி கூறினார்.

நிகழ்ச்சியில் தியாகிகளின் வாரிசுகள் கௌரவிக்கப்பட்டார்கள். பிளஸ் டூ தேர்வில் சின்னியம்பாளையம் அரசு பள்ளியில் படித்து முதல் 3 இடங்களை பிடித்த கீர்த்தனா, தீப நந்தினி, ஆகாஷ் ஆகியோருக்கும் பத்தாம் வகுப்பில் முதல் மூன்று இடம் பிடித்த தேவகி, நேகா, மகிழன் ஆகியோருக்கும் ரொக்கப் பரிசுகள் வழங்கி சிறப்பு செய்யப்பட்டது.



# சங்கே முழங்கு!

## பணமதிப்பிழப்பு வழக்கில் உச்சநீதிமன்ற நீதிபதி நாகரத்னாவின் கருத்து நாட்டின் நாடித் துடிப்பு



பணமதிப்பிழப்பு நடவடிக்கையின் மீது உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பு குறித்து ஜனவரி 2ல், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலங்களவை உறுப்பினரும் தேசியக் குழு செயலாளருமான பினாய் விஸ்வம் கூறியுள்ளதாவது:

பணமதிப்பிழப்பு வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பில் நீதியரசர் நாகரத்னாவின் கருத்துகள் நாட்டின் நாடித் துடிப்பைப் பிரதிபலிக்கிறது, பெரும்பான்மை நீதிபதிகளின் குரலோ மோடி அரசின் குரலைப் பிரதிபலிக்கிறது. அந்த இரவில் அரசின் பண மதிப்பிழப்பு நடவடிக்கை அறிவிப்பு இந்தியப் பொருளாதாரத்தின் மீது பேரிடியாய் இறங்கியது, ஆனால் அது பலனளிக்காத பயனற்ற வெற்று நடவடிக்கை என்பது நிரூபணமாகி விட்டது. கருப்புப் பணத்திற்கு முடிவு கட்டுவது, தீவிரவாதத்தை ஒழிப்பது மற்றும் டிஜிட்டல் பண பரிமாற்றத்திற்கு மாறுவது என்று பிரதமர் அளித்த மிகப் பெரிய வாக்குறுதிகள் என்னவாயிற்று.

ஆயிரக்கணக்கில் தொழிற்சாலைகளும் வணிக நிறுவனங்களும் மூடப்பட்டன, கோடிக் கணக்கான மக்கள் வேலையை விட்டு நீக்கப்பட்டனர்; மதிப்பிழக்கப்பட்ட பணத் தாள்களும் மீண்டும் வங்கிகளுக்கு திரும்பி விட்டன. எனினும் வழக்கை விசாரித்த அமர்வின் பெரும்பான்மை நீதிபதிகள் இந்த உண்மையைக் காண மறுத்து விட்டனர். ஆனால் ஏழைகளுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் எதார்த்த வாழ்க்கையே உண்மை.

கருப்புப் பணம் மற்றும் தீவிரவாதத்திற்கு முடிவு காண்பது, பண பரிவர்த்தனைகளில் டிஜிடல் வழிமுறை முதலிய பிரச்சனைகளில் நாடாளுமன்றத்தைப் புறக்கணித்து அதனை இருட்டிலேயே வைத்துள்ளது. எதுவும் நடைபெறவில்லை! தொழிற்சாலைகள் மற்றும் கடைகள் மூடப்பட்டு, அதன் விளைவாய் பல்லாயிரக் கணக்கானோர் வேலை இழந்தனர் என்பது மட்டுமே கண்ட பலன். உச்ச நீதிமன்றம் இந்த அம்சங்கள் குறித்தெல்லாம் சிறிதும் அக்கறைபடவில்லை. இவ்வாறு கூறியுள்ளார்.

**-பினாய் விஸ்வம் எம்.பி.**

## 2013 முதல் பணி புரியும்

# 2500 பல்நோக்கு மருத்துவமனைப் பணியாளர்களை பணி நிரந்தரம் செய்க

### சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் கோரிக்கை

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம், தமிழ்நாடு எம்.ஆர்.பி. செவிலியர்கள் நலச்சங்கம் மற்றும் தமிழ்நாடு மருத்துவத்துறை பணியாளர்கள் கூட்டமைப்பு வெளி யிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

தமிழ்நாடு அரசு கொரோனாவால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க ஒப்பந்த அடிப்படையில் 2020 மார்ச் மாத உத்தரவு மூலம், 3700 செவிலியர்களை ஒரு சில மாதங்களிலேயே நியமித்தது. 2019 ம் ஆண்டில் நடத்தப்பட்ட MRB தேர்வை எழுதி, தேர்ச்சி பெற்றவர்கள் தான், இட ஒதுக்கீடு முறையில் ,உரிய சான்றிதழ் சரிபார்பிற்குப் பின் முறையாக பணிநியமனம் செய்யப்பட்டனர்.

எம்.ஆர்.பி. தேர்வில் வெற்றி பெற்றிருந்த அந்த செவி லியர்களை, கட்டாயமாக பணியில் சேர்ந்தே ஆக வேண்டும் என வற்புறுத்தி பணியில் சேர்க்கப்பட்டனர். “மூன்று நாட்களில் பணியில் சேராவிட்டால் 2019 எம்.ஆர்.பி. பட்டியலில் இருந்து நீக்கப்படுவீர்கள், எதிர்காலத்தில் வேறு எந்த அரசு வேலையிலும் சேர்க்கப்பட மாட்டீர்கள்“ எனவும் அழைப்பாணை மூலம் மிரட்டப்பட்டனர். அவர்களுக்கு, மாதத் தொகுப்பூதியமாக வெறும் ரூ.14,000 மட்டுமே வழங்கப்பட்டது. கொரோனோ நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க வெறும் ரூ.14000 தொகுப்பூதியம் என்பது வெட்கக் கேடான நடவடிக்கையாகும். இது கடும் உழைப்புச் சுரண்டலாகும். குறைந்த ஊதியத்துடன், கடுமையாக உழைத்தனர். ஒவ்வொரு நாளும் 12.00 மணி நேரத்திற்கு மேல் வேலை செய்தனர்.

இச் செவிலியர்கள் கொரோனா நோயாளிகளுக்கு, மூன்று அலைகளிலும் தங்கள் உயிரையும் துச்சமெனக் கருதி அர்ப்பணிப்போடு சேவை செய்தனர். ஆயிரக்கணக்கான நோயாளிகளை காப்பாற்றினர். இரண்டரை ஆண்டுகளாக, தொடர்ச்சியாக அதே 14,000 ரூபாய் தொகுப்பூதியத்தில் அவர்கள் பணிபுரிந்து வந்தனர்.

இந்நிலையில், இச்செவிலியர்கள் 2,472 பேரையும், 31.12.2022 அன்று திடீரென்று பணி நீக்கம் செய்து அரசு உத்தரவிட்டுள்ளது. இது மிகுந்த அதிர்ச்சியையும், வருத்தத்தையும், மன வேதனையையும் அளிக்கிறது. எனவே, பணி நீக்க உத்தரவை தமிழ்நாடு அரசு உடனடியாக ரத்து செய்ய வேண்டும்.

பணி பாதுகாப்பு, பணி நீட்டிப்பு வழங்க வேண்டும். படிப்படியாக பணிநிரந்தரம் வழங்கிட வேண்டும்.

கடந்த 6 மாதகாலமாக அவர்களில் பெரும்பாலோருக்கு ஊதியமும் வழங்கப்படவில்லை. ஆறு மாதங்களாக வழங்கப்படாத ஊதியத்தையும் உடனடியாக வழங்கிட வேண்டும்.

மருத்துவப் பணியாளர்கள் பணி நியமன ஆணையம் (MRB) மூலம் நியமிக்கப் பட்டு கடந்த 8 ஆண்டுகளுக்கும் மேலாக ஒப்பந்த அடிப்படையில் செவிலியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களுக்கு ரூ.14000 முதல் 20,500 வரை தொகுப்பூதியம் வழங்கப்படுகிறது. 12 மணி நேர வேலை வழங்கப்படுகிறது. இவ்வாறு பணி புரியும் ஏறத்தாழ 6000 செவிலியர்களுக்கு உடனடியாக பணி நிரந்தரம் வழங்கிட வேண்டும்.

2013 முதல் தினக்கூலியாக பணி புரியும் 2500 பல்நோக்கு மருத்துவமனை பணியாளர்களுக்கு பணி நிரந்தரம் வழங்கிட வேண்டும்.

தமிழ்நாடு அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் 2005 ஆம் ஆண்டு முதல் R.C.H. திட்டத்தின் கீழ், தற்காலிக அடிப்படையில், 3140 க்கும் தூய்மைப் பணியாளர்கள் கடந்த 15 ஆண்டுகளாக பணிபுரிந்து வருகின்றனர். அவர்களுக்கு மாதம் தோறும் ரூபாய் 1500 மட்டுமே தொகுப்பூதியமாக வழங்கப்படுகிறது. அவர்கள் நாள்தோறும் தொடர்ந்து பனிரெண்டு மணி நேரம் வேலை செய்கின்றனர். வார விடுமுறை ,அரசு விடுமுறை மற்றும் மருத்துவ விடுப்பு கூட இல்லாமல் பணி செய்ய வைக்கப்படுகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் , பட்டியலின சாதிகளைச் சேர்ந்தவர்கள் என்பதும், பெண்கள் என்பதும், பொருளாதார ரீதியில் வறுமைக் கோட்டிற்கும் கீழ் உள்ளவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர்கள் வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்து கொள்ள முடியாத அவல நிலையில் உள்ளனர். பலர் நோயுற்றும், பணியிலிருக்கும் போதும் உயிர் இழந்து விட்டனர்.

முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்களால், மூன்று ஆண்டுகளுக்குமேலாகப் பணிபுரியும் இத்தூய்மைப் பணியாளர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம் (special time scale of pay) வழங்கும் அரசாணை 01.10.2010 அன்று (நிதி ஊதியப் பிரிவுத்துறையின் இந்த அரசாணை அ.ஆ.நிலை எண் 385), வெளியிடப்பட்டது. ஆனால் அவ்வாணை இதுவரை நடைமுறைப் படுத்தப் படவில்லை. எனவே, இவர்களை உடனடியாக பணிநிரந்தரம் செய்திட வேண்டும்.

2017 ல் அறிவிக்கப்பட்ட தினக்கூலி உத்தரவு, நிறைவேற்றப்படாததால், அதற்கான 150 கோடி நிலுவைத் தொகையும் வழங்கப் படவில்லை. அதை உடனடியாக வழங்கிட வேண்டும்.

கொரோனா காலகட்டத்தில் பணியமர்த்தப்பட்டு, சிறப்பாக சேவை செய்த, எம்.ஆர்.பி தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்த மருத்துவர்களையும், செவி லிய உதவியாளர்களையும், பல்நோக்கு மருத்துவப் பணியார்களையும், இதர பணியாளர்களையும் பணி நீக்கம் செய்தது சரியல்ல. அவர்களுக்கு மீண்டும் பணி வழங்க வேண்டும்.

மேலும் “ஒன்றிய அரசுடைய கொள்கை, ஒன்றிய அரசுடைய தேசிய சுகாதார இயக்கம்” என்ற காரணங்களை கூறி, தமிழக அரசு, தனது செவிலியர் மற்றும் மருத்துவ பணியாளர்கள் பணி நியமனக் கொள்கையை முற்றிலும் கைவிடுவது ஏற்புடையது அல்ல. மாநில உரிமையை பறிகொடுப்பது சரியல்ல.

நெக்ஸ்ட் தேர்வை திணிக்கக் கூடாது. நீட் தேர்விற்கான நேரடி பயிற்சியை ஏழை மாணவர்களுக்கு வழங்கிட வேண்டும். பீகார் மாநில அரசு போல் தமிழ்நாடு அரசும் சாதி வாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்த வேண்டும்.

அனைத்து ஊரக, உள்ளாட்சி பகுதிகளிலும் மனித கழிவு அகற்றுவதை இயந்திர மயமாக்க வேண்டும். அதற்கான உபகரணங்களை மதுரை மாநகராட்சி போல் அனைத்து இடங்களிலும் வாடகைக்கு வழங்கப்பட வேண்டும்.

புதுக்கோட்டை மாவட்டம், இறையூரில் உள்ள வேங்கை வாசல் தெருவில் தலித்துகளின் குடிநீர் மேல் நிலைத் தொட்டியில் மனித மலம் கலக்கப்பட்டச் சம்பவம் வன்மையாக கண்டிகத்தக்கது. குற்றவாளிகளை கண்டறிந்து கடுமையான தண்டனை வழங்க வேண்டும்.

கொரானா காலத்தில் மருத்துவ தேர்வுகள் கால தாமதமாக நடத்தப் பட்டன. எனவே, முதுநிலை மருத்துவ படிப்புக்கான நீட் நுழைவுத் தேர்வு எழுத, எப்போதும் உள்ளது போல் மார்ச் 31 தேதிக்கு பதிலாக, மே 31 தேதி வரை பயிற்சி மருத்துவம் செய்யும் மருத்துவ மாணவர்களை அனுமதிக்க வேண்டும்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளனர்.

10 ம் பக்கத் தொடர்ச்சி

**கிருஷ்ணகிரி:** கிருஷ்ணகிரி மாவட்ட 15வது மாநாடு 08.01.2023 அன்று ஒசூரில் ஶ்ரீஹரி தலைமையில் நடைபெற்றது. மாணவர் பெருமன்றக் கொடியினை மாநில துணைத் தலைவர் பா.தினேஷ் ஏற்றி வைத்து, துவக்கவுரையாற்றினார். விவசா யிகள் சங்க மாநில துணைத் தலைவர் எம்.இலகுமைய்யா, மாணவர் பெருமன்ற மாநில தலைவர் மௌ.குணசேகர், மாதர் சம்மேளன தேசியக் குழு உறுப்பினர் எஸ்.ஆர்.சுந்தரவள்ளி, ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் எம்.கே.மாதையன், இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் எஸ்.ஆதில் ஆகியோர் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார்கள்.



மாவட்டத் தலைவராக பிரஜ்வல், செயளாளராக வெ.நிரூபன், துணைச் செயளாளர்களாக வெங்கடேஷ், ஸ்டீபன், துணைத் தலைவராக பவானி, மாவட்ட பொருளாளராக ஶ்ரீஹரி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். கிருஷ்ணகிரியில் அரசு சட்டக் கல்லூரி துவங்கப்பட வேண்டும், ஒசூர் அரசு கலை அறிவியல் கல்லூரிக்கு புதியவிடுதி அமைத்திட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

ஒன்றிய, கிளை பேரவைக் கூட்டங்கள்

ஈரோடு வடக்கில் பவானிசாகர் தெற்கு தொகுதி, தாளவாடி கிழக்கு ஒன்றியம், கோவையில் மேற்கு மண்டலம் ஆகியவற்றில் ஒன்றிய பேரவைக் கூட்டங்கள் நடைபெற்றது.

சேலம் அரசு கலைக் கல்லூரி, அரக்கோணம் அருகே சோளிங்கர் ஒன்றியத்திலுள்ள கூடலூர், மதுரை புறநகர் மாவட்டத்திலுள்ள மேலூர் அரசு கலைக் கல்லூரி, வடசென்னை மாவட்டம், வியாசர்பாடியிலுள்ள அம்பேத்கர் அரசு கலை அறிவியல் கல்லூரி ஆகியவற்றில் கிளை பேரவைக் கூட்டங்கள் நடைபெற்றது.

## லோடு ஆட்டோ ஓட்டுநர்கள் சங்க கிளை துவக்க விழா

ஏஐடியூசி லோடு ஆட்டோ ஓட்டுநர்கள் சங்கம் கிளை துவக்க விழா செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் ஒன்றியம் கண்ணகப்பட்டு கிளையில் நடைபெற்றது. ஏஐடியூசி கொடியை மாவட்ட செயலாளர் க.ஜெகதீசன் ஏற்றி வைத்தார். கௌரவ தலைவர் ஏ.காஜா மொய்தீன் பெயர் பலகையை திறந்து வைத்தார். சட்ட ஆலோசகர் மோ.வெங்கடேசன், மாவட்ட துணை தலைவர் எஸ்.சந்தோஷ் முரளி, சங்கத்தின் தலைவர் எஸ்.சௌகத் அலி மற்றும் கிளை தோழர்கள் கலந்துகொண்டனர்.

## ஷேர் ஆட்டோ ஓட்டுநர்கள் சங்க கிளை துவக்க விழா

ஏஐடியூசி ஷேர் ஆட்டோ ஓட்டுநர்கள் சங்க கிளை துவக்க விழா செங்கல்பட்டு மாவட்டம் திருக்கழுக்குன்றம் ஒன்றியம் குழிப்பாந்தண்டலம் கிளையில் சங்க தலைவர் என்.தாஸ் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட செயலாளர் க.ஜெகதீசன் முன்னிலையில், சங்கத்தின் கொடியை ஏஐடியூசி மாநில செயலாளர் வி.ஆதிமுலம் ஏற்றினார். பெயர் பலகையை கே.வி.இரவி திறந்து வைத்தார். ஒய்.ஹாருன் பாஷா பி.எஸ்.என்.எல். ஓய்வு ஊழியர் நல சங்கம் பகுதி ஒருங்கிணைப்பாளர், சட்ட ஆலோசகர் மோ.வெங்கடேசன், கௌரவ தலைவர் வழக்கறிஞர் வி.திருநாவுக்கரசு, மாவட்டக்குழு உறுப்பினர் ஜி.வாசு மற்றும் சங்க நிர்வாகிகள் எஸ்.சேகர், ஆர்.ராஜேஷ், எஸ.மதன்ராஜ், வி.முரளி, வி.ரஞ்சித்குமார் மற்றும் கிளை தோழர்கள் கலந்து கொண்டனர்.

## ஆட்டோ மற்றும் வாடகை ஊர்திகள் ஓட்டுநர் சங்க கிளை துவக்க விழா

செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆலத்தூர் சிட்கோவில் ஏஐடியூசி ஆட்டோ மற்றும் வாடகை ஊர்திகள் ஓட்டுநர் சங்கத்தின் புதிய கிளை துவக்க விழா, கிளை தலைவர் எல்.ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. கிளை செயலாளர் ஜெ.அன்பரசு வரவேற்புரையாற்றினார். சங்கத்தின் பெயர் பலகையை சங்க ஆலோசகர் வி.ஆதிமூலம் திறந்து வைத்தார். சங்கத்தின் கொடியை மாவட்ட செயலாளர் க.ஜெகதீசன் ஏற்றிவைத்தார். நிகழ்ச்சியில் சட்ட ஆலோசகர் மோ.வெங்கடேசன், கௌரவ தலைவர் இ.முனுசாமி, மாவட்ட துணை தலைவர் எஸ்.சந்தோஷ், மாவட்டக்குழு உறுப்பினர் பி.முரளி, டி.டி.பி.ஏ.ஒன்றிய செயலாளர் ஒய்.ஹாருன் பாஷா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

ஆர்.விஜயக்குமார், சி.எஸ்.ராஜேந்திரன் முன்னிலை வகித்தனர். சங்க பொருளாளர் பி.தங்கமாரியப்பன் நன்றி கூறினார்.

## புத்தாநத்தத்தில் 100 நாள் வேலை கேட்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சாலை மறியல்



மணப்பாறை தாலுக்கா புத்தாநத்தத்தில் 100 நாள் வேலை கேட்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சாலை மறியல் செய்தனர்

மணப்பாறை ஒன்றியம் புத்தாநத்தம் ஊராட்சியில் 20 கிராமங்கள் உள்ளன இக்கிரமங்களில் நடைபெற்று வந்த 100 நாள் வேலை திட்டம் கடந்த மூன்று மாதங்களாக வேலை தடைபட்டதால் உடனடியாக கிராமங்களில் 100 நாள் வேலை திட்டத்தை நடைமுறைப்படுத்த வலியுறுத்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் புத்தாநத்தம் ஊராட்சி அலுவலகம் முன்பு உள்ள கடைவீதியில் சாலையில் மறியலில் ஈடுபட்டனர்.

தகவல் அறிந்து விரைந்து வந்த காவல் ஆய்வாளர், மணப்பாறை ஒன்றிய ஆணையர் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ஆகியோர் மறியலில் ஈடுபட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி புத்தாநத்தம் கிளை செயலாளர் மன்சூர் புத்தாநத்தம் ஊராட்சி மன்ற உறுப்பினர் சிராஜுதீன், மாவட்ட குழு உறுப்பினர் ஹக்கீம் சேட் மற்றும் 100 நாள் வேலை பயனாளிகளுடன் நடைபெற்ற பேச்சு வார்த்தையில் வருகின்ற திங்கட்கிழமை முதல் 100 நாள் வேலைத்திட்டத்தை இவ் ஊராட்சியில் நடைமுறை படுத்துவது என்ற உறுதி மொழியை கொடுத்ததை ஏற்று மறியலில் ஈடுபட்டவர்கள் கலைந்து சென்றனர்.

## ஆண்டிப்பட்டியில் சிபிஐ புதிய கிளை அமைப்பு கூட்டம்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஆண்டிப்பட்டி ஒன்றியக் குழு ஜி.கல்லுபட்டியில் புதிய கிளை அமைப்பு கூட்டம் செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட துணைச் செயலாளர் வே.பரமேஸ்வரன், ஆண்டிப்பட்டி ஒன்றிய செயலாளர் பா.பிச்சைமணி ஆகியோர் கலந்து கொண்டார்.

கிளையின் புதிய செயலாளராக செல்வராஜ், துணை செயலாளராக தங்கவேல் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

# ஈஷா யோகா மர்ம சாவுகள்: நீதி விசாரணை நடத்திடுக!

### கோவையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம்




ஈசா யோகா மையத்தில் நடைபெற்று வரும் மர்ம சாவுகள் குறித்து நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் ஜனவரி 6 அன்று கோவையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கோவையை அடுத்த மேற்கு தொடர்ச்சி மலை வெள்ளியங்கிரி மலை அடிவாரத்தில் அமைந்துள்ள ஈஷா யோகா மையத்தில், தொடர்ந்து மர்ம சாவுகள் நிகழ்ந்து வருகின்றன. அங்கு யோகா பயிற்சிக்கு செல்லும் பெண்கள் மன மாற்றம் செய்யப்பட்டு துறவிகளாக்கப்படுகின்றனர். யானை வழித்தடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. மலைவாழ் மக்களுக்கு சொந்தமான இடங்கள் அடிமாட்டு விலைக்கு வாங்கப்பட்டுள்ளது. குறிப்பாக ஈசா யோகா மையத்திற்குள் நடைபெறும் பல சம்பவங்கள் மர்மம் நிறைந்ததாக உள்ளது.

கடந்த 11.12.2022 ம் தேதி ஈஷா யோகா மையத்திற்கு பயிற்சிக்காக சென்ற சுபஸ்ரீ என்ற பெண் 1.01.2023 ம் தேதி கிணற்றிலிருந்து பிணமாக மீட்கப்பட்டார். ஈஷா யோகா மையத்தில் தொடர்ந்து இது போன்ற சம்பவங்கள் நடைபெற்று வருகிறது. எனவே ஈஷா யோகா மையம் தொடர்பாக எழுந்துள்ள புகார்கள் மீது வெளிப்படையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உள்பட அரசியல் கட்சிகளும், சமூக அமைப்புகளும் வலியுறுத்தி வருகின்றன.

எனவே நேர்மையும், சமூக அக்கறையும், நம்பகத் தன்மையும் கொண்ட ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையில் விசாரணை நடத்தவும், சுபஸ்ரீயின் மரணத்திற்கு காரணமான உண்மையான குற்றவாளிகளை கண்டறிந்து நடவடிக்கை எடுக்கவும் வேண்டும் என வலியுறுத்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு கட்சியின் மாநில பொருளாளர் எம். ஆறுமுகம் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் சி. சிவசாமி, மாவட்டத் துணைச் செயலாளர்கள் ஜே. ஜேம்ஸ், மௌன. குணசேகர், மாவட்ட பொருளாளர் சி. தங்கவேல், கே. எம். செல்வராஜ், பெ. மவுனசாமி, வி. ஆர். பாண்டியன், மு.வ. கல்யாணசுந்தரம், கே. ரவீந்திரன், சாந்தி சந்திரன், மற்றும் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள், மண்டல மற்றும் ஒன்றிய குழு செயலாளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# திருமகன் ஈ.வெ.ரா. மறைவு: இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ஈ.வெ.கி.எஸ். இளங்கோவன் மகனும், ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி உறுப்பினருமான திருமகன் ஈவெரா (46) உடல் நலிவால் மரணமடைந்தார் என்ற துயரச் செய்தி நெஞ்சை பிளக்கும் வேதனையாகும்.

பெரியார் ஈ.வெ.ராவின் கொள்ளுப் பேரனும், சொல்லின் செல்வர் ஈ.வெ.கி.சம்பத் பேரனுமான திருமகன் ஈ.வெ.ரா, அழகும் அறிவும் ஒரு சேரப் பெற்றவர். அதிர்ந்து பேசும் சுபாவத்தின் சுவடும் இல்லாத பண்பாளர். 2004 ஆம் ஆண்டில் நடந்த நாடாளுமன்ற தேர்தலில் கோபிச்செட்டிபாளையம் மக்களவைத் தொகுதியில் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் ஈவெகிச இளங்கோவனுக்கு ஆதரவாக இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி அமைத்த பிரச்சார மேடையில் முதன்முதலாக பேசத் தொடங்கியவர் திருமகன் ஈவெரா. 2021 ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி மக்களின் நன்மதிப்பை பெற்று, தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராக தேர்வானவர். கடந்த இரண்டாண்டுகளில் தொகுதி வளர்ச்சியில் முனைப்போடு செயல்பட்ட சட்டமன்ற உறுப்பினர்.

காங்கிரஸ் கட்சியிலும் பல நிலைகளில் பொறுப்புகளை ஏற்று சிறப்பாக செயல்பட்டு மூத்த தலைவர்களின் பாசத்தையும், இளைய தலைமுறையின் நம்பிக்கையையும் பெற்றவர். திருமகன் ஈவெரா இறந்து போனார் என்ற செய்தியை எளிதில் ஏற்க முடியவில்லை. அவரது மறைவால் எதிர்காலம் பண்புமிக்க தலைவர் ஒருவரை இழந்து நிற்கிறது. அவரை இழந்து நிற்கும் ஈ.வெ.கி.ச. இளங்கோவன், அவரது இணையர் வரலட்சுமி ஆகியோரை காலம்தான் தேற்ற வேண்டும்.

திருமகன் ஈவெரா மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த அஞ்சலி தெரிவித்துக் கொள்கிறது. அவரை இழந்து தவிக்கும் அவரது இணையர் பூர்ணிமாவுக்கும், மகளுக்கும் காங்கிரஸ் நண்பர்களுக்கும் ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறது. இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

### இரா.முத்தரசன் நேரில் அஞ்சலி

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் திருமகன் ஈவெரா உடலுக்கு நேரில் அஞ்சலி செலுத்தினார். அவருடன் கட்சியின் மாநில துணைச் செயலாளர் என்.பெரியசாமி, மாநில பொருளாளர் எம்.ஆறுமுகம், உள்ளிட்டோரும் நேரில் அஞ்சலி செலுத்தினர். முன்னதாக, திருமகன் ஈவெரா மரணம் குறித்து தகவலறிந்ததும், அவரின் இல்லத்திற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான ஸ்டாலின் குணசேகரன், கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்ட செயலாளர் பிரபாகரன், ஈரோடு தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் திருநாவுக்கரசு, ஈரோடு தெற்கு மாவட்ட பொருளாளர் ரமணி, வட்டார செயலாளர் கல்யாணசுந்தரம் உள்ளிட்ட தோழர்கள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

திருப்பூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில கட்டுப்பாட்டுக் குழு தலைவருமான கே.சுப்பராயன் திருமகன் ஈவெரா உடலுக்கு நேரில் அஞ்சலி செலுத்தினார்.

# மூடப்பட்டுள்ள சிலைமான் ருக்மணி மில்லை திற! உயர்நீதிமன்ற உத்தரவை அமல்படுத்து!

மதுரை மாவட்டம் சிலைமான் ருக்மணி ஆலை 20 ஆண்டுகளுக்கு மேலாக மூடப்பட்டுள்ளது.இந்நிலையில் ஆலையில் பணியாற்றிய தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய கிராஜுவிட்டி, பண பயன்கள் இன்று வரை கிடைக்கப் பெறவில்லை.

தவறான ஆலை நிர்வாகத்தின் நடவடிக்கைகளால் மூடப்பட்டுள்ள சிலைமான் ருக்மணி மில் நிர்வாகம் தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமைகளை வழங்க கோரி ஏஐடியூசி சங்கத்தின் சார்பாக பல ஆண்டுகளாக ஆர்ப்பாட்டங்கள், பல்வேறு போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. அங்கு பணியாற்றிய தொழிலாளர்கள் வயது மூப்பால் தங்களுக்கு கிடைக்க வேண்டிய கிராஜுவிட்டி, பணபயன்கள் கிடைக்க பெறாமலேயே சிலர் காலமாகிவிட்டார்கள்.

இதற்கிடையே ஏஐடியூசி சங்கத்தின் முழு முயற்சியாக ஆலை நிர்வாகத்தின் போக்கை கண்டித்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டு தொழிலாளாளர்களுக்கு சாதகமான தீர்ப்பை உயர்நீதிமன்றத்தின் வாயிலாக பெறப்பட்டுள்ளது,

ஆலை அமைந்துள்ள சிவகங்கை மாவட்ட ஆட்சி தலைவருக்கு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு நகல் கிடைக்க பெற்றும், சிவகங்கை மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களோ, மாவட்ட நிர்வாகமோ, இதுவரை தொழிலாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பம் குறித்த அக்கரை ஏதுமின்றி இருந்து வருகிறார்கள்.

சென்னை உயர்நீதி மன்ற உத்தரவை செயல் படுத்த கோரி ஆலைநிர்வாகத்தையும், சிவகங்கை மாவட்ட நிர்வாகத்தையும் கண்டித்து கடந்த மாதம் பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்கள் ஏஐடியூசி சங்கத்தின் தலைமையில் மாபெரும் ஆர்ப்பாட்ட நிகழ்வை நடத்தியது. ஆனாலும் பலன் இல்லை.

இதனால் ஆலை வாயில் முன்பாக தொழிலாளர்களையும், பொதுமக்களையும் திரட்டி கூட்டம் நடத்தப்பட்டது. இதில் மதுரை மாவட்ட பஞ்சாலை ஏஐடியூசி தொழிலாளர்கள் சங்க தலைவர் விளாங்குடி கே.எஸ்.மணி, பஞ்சாலை சங்க நிர்வாகிகள் ஜி.பாலகிருஷ்ணன்,லோகநாதன் மற்றும் வழக்கறிஞர் கே.கே.சாமி ஆகியோர் கலந்து கொண்டு பேசும்போது, மூடப்பட்டுள்ள சிலைமான் ருக்மணி ஆலையின் உள்ளேயே சென்று ஆலை நுழைவு போராட்டம் நடத்தப்படும் என எச்சரித்தனர்.

# அயல்நாட்டு பல்கலைக்கழகங்களை அனுமதிக்காதே!

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு வலியுறுத்தல்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

அயல்நாட்டு பல்கலைக்கழகங்கள், இந்தியாவில் அவற்றின் கிளைகளைத் திறந்திட அனுமதிக்கும் பல்கலைக்கழக மானியக் குழுவின் முடிவுக்கும், அது தொடர்பாக அண்மைக் காலத்தில் அறிவிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழக மானியக் குழுவின் நடவடிக்கைகளுக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு கடும் எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்கிறது.

ஆலோசனைகள் வழங்குவதற்காக அளிக்கப்பட்ட கால அவகாசமும் போதுமானதாக இல்லை. இத்தகைய கொள்கை முடிவு, இந்திய உயர்கல்வி முறைக்கு ஊறு விளைவித்து, நீர்த்து போகச் செய்து, இறுதியில் கல்வி வணிகமயத்திற்கு இட்டுச் செல்கிறது. இந்த முடிவானது, கல்வியை எட்டாக்கனியாக்கிவிடும்; தலித்துகள், பழங்குடி மக்கள், சிறுபான்மையினர் மற்றும் ஏழை மக்கள் மிக மோசமாகப் பாதிக்கப்படுவர்.

அரசாங்கம் பல்கலைக்கழகங்களுக்கு நிதி அளிக்கும் என்று எதிர்பார்த்துச், சார்ந்திருப்பதை இந்தியர்கள் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் கல்வியமைச்சர் கூறியுள்ளதன் பின்னணியில், இத்தகைய முடிவானது, அரசாங்கத்தின் பணக்காரர்கள் ஆதரவுப் போக்கின் பிரதிபலிப்பு ஆகும்.

கல்விக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகப்படுத்த வேண்டிய தேவை இருக்கும் போது, பட்ஜெட்டில் மூன்று சதவீதத்திற்கும் குறைவாகவே நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இட ஒதுக்கீடு கொள்கையும், சமூகநீதி கோட்பாடும் மிகப்பெரிய அளவில் பாதிப்பிற்கு உள்ளாகும். மாநில அரசாங்கங்கள் மீது இத்தகைய முடிவுகளைத் திணிப்பது கூட்டாட்சி முறைக்கு எதிரானது ஆகும். மாநில அரசாங்கங்களின் அதிகாரத்தில் அத்துமீறி ஆக்கிரமிப்பதாகும்.

தேசம் மற்றும் மாணவர்களின் எதிர்காலத்தைச் சீரழிக்கக்கூடிய, இத்தகைய அவசர மற்றும் எதேச்சதிகார முடிவுகளை மேற்கொள்ளுவதற்கு முன் அத்தகைய பல்கலைக்கழகங்களை முறைப்படுத்தும் கட்டமைப்பு குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது. இந்தப் பிற்போக்குத்தனமான நடவடிக்கையை மாணவர் மற்றும் ஆசிரியர் அமைப்புகள் தடுத்து நிறுத்த வேண்டுமென இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### காரிமங்கலம், அரூரில்

# உள்ளாட்சி பணியாளர்கள் ஆர்பாட்டம்

தமிழ்நாடு ஏஐடியூசி தருமபுரி மாவட்ட முனிசிபல் பஞ்சாயத்து பொது பணியாளர்கள் சங்கம்,ஊராட்சி,பேரூராட்சி,டேங்க் ஆப்ரேட்டர்கள் சங்கம்,தூய்மைப் பணியாளர்கள்,தூய்மை காவலர்கள் மற்றும் உள்ளாட்சி பணியாளர் சம்மேளனம் சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி காரிமங்கலம் வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பு கவன ஈர்ப்பு ஆர்பாட்டம் நடைபெற்றது.

ஆர்பாட்டத்திற்கு ஒன்றிய செயலாளர் சுப்ரமணி,சிதம்பரம் தலைமை வகித்தனர்.நிர்வாகிகள் மல்லி,குப்பம்மாள்,ராணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.ஏஐடியூசி மாவட்ட பொது செயலாளர் கே.மணி,உள்ளாட்சி பணியாளர் சங்க மாவட்ட தலைவர் என்.மனோகரன்ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார்கள்.

ஆர்பாட்டத்தில் பொங்கல் பண்டிகையொட்டி அனைத்து உள்ளாட்சி பணியாளர்களுக்கும் கருணை தொகை வழங்க வேண்டும். மழைக்காலங்களில் மழை கோட்,உபகரணங்களும் வழங்க வேண்டும்.

கொரோனா காலங்களில் பணி செய்த உள்ளாட்சி பணியாளர்களுக்கு அரசு அறிவித்த சிறப்பு ஊக்கத்தொகை வழங்க வேண்டும். உள்ளாட்சி அமைப்புகளில் பணியாற்றும் டேங்க் ஆப்ரேட்டர், தூய்மை பணியாளர்களுக்கு 7வது ஊதியக் குழு பரிந்துரைப்படி ஊதிய உயர்வு வழங்க வேண்டும்

வருட கணக்கில் குடிநீர் தொட்டி சுத்தம் செய்பவர்களுக்கான ஊதியம் ரூ.300 வழங்க வேண்டும்.

.உள்ளாட்சி பேரூராட்சி தூய்மை காவலர்களுக்கு பணி பதிவேடு போர்க்கால அடிப்படையில் பதிவு செய்ய வேண்டும்.

துப்புரவு தொழிலாளர்கள். ஓஎச்டி இயக்குபவர்கள். தூய்மை காவலர்கள், கொசுபுழு பணி, ஆஷா பணியாளர் போன்ற அனைத்து பணியாளர்களும் ஓய்வின்றி, விடுப்பின்றி நேரம் காலமின்றி பணிபுரிகிறார்கள் இவர்கள் குறைந்த ஊதியம் பெற்று கூடுதல் வேலை,பாதுகாத்திட தன்னாட்சி கொண்ட உள்ளாட்சி தொழிலாளர்களின் குறைதீர் ஆணையம் அமைத்திட வேண்டும்.

டேங்க் ஆப்ரேட்டர், தூய்மை பணி, தூய்மை காவலர்களுக்கு அரசாணைப்படி பிரதி மாதம் 5ம் தேதிக்குள் ஊதியம் மற்றும் நிலுவை ஊதியம் வழங்க வேண்டும்.

கூடுதல் டேங் ஆப்ரேட்டர்களுக்கு 20.5.2022ல் அரசு ஒரு குறிப்பாணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி தீர்மானம் மற்றும் இணையதள பதிவேற்றம் செய்து ஊதிய உயர்வு வழங்க வேண்டும் என ஆர்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.நிர்வாகிகள் சண்முகம், முருகன், நாகரா, கோபால், ஆறுமுகம்,மாதேஷ், பழனியம்மாள், மணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அதேபோல் அரூரிலும் மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கவன ஈர்ப்பு ஆர்பாட்டம் நடைபெற்றது.

# விவசாயத் தொழிலாளர்களின் வீடுகளை கான்கிரீட் வீடுகளாக மாற்றிடுக!




திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் ஒன்றிய 32வது மாநாடு திருத்துறைப்பூண்டியில் நடைபெற்றது. மாநாட்டிற்கு ஒன்றிய தலைவர் வி.ஜவஹர் மற்றும் கே. விஜயா ஆகியோர் தலைமை தாங்கினர்.

32வது மாநாட்டின் கொடியினை சட்டபேரவை முன்னாள் உறுப்பினர் கோ.பழனிச்சாமி ஏற்றிவைத்து மாநாட்டு நிகழ்வினை துவக்கிவைத்தார். மறைந்த தோழர்கள் நினைவு ஸ்தூபியினை சங்கத்தின் மாநில பொதுசெயலாளர் என்.பெரியசாமி எக்ஸ்.எம்.எல்.ஏ., திறந்து வைத்து மரியாதை செலுத்தினார்.

சங்கத்தில் பணியாற்றி மறைந்த தோழர்கள் ஜி.நேதாஜி, பி.வி.ரத்தினசாமி, அ.தங்கராசு, கே.பாலகிருஷ்ணன் ஆகியோர் படங்கள் திறக்கப்பட்டு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாநாட்டு துவங்கி வைத்து சங்கத்தின் பொதுசெயலாளர் என்.பெரியசாமி உரை நிகழ்த்தினார்.

மாநாட்டினை வாழ்த்தி எம். செல்வராசு எம்.பி., க.மாரிமுத்து எம்.எல்.ஏ., கே. உலகநாதன் எக்ஸ்.எம்.எல்.ஏ., அ.பாஸ்கர் ஊ.ஒ.பெருந்தலைவர், இரெ. ஞானமோகன், எஸ். தமயந்தி, கே.ஆர்.ஜோசப், கே. ராஜா ஆகியோர் பேசினர்.

தலைவராக அ.மூர்த்தி, செயலாளராக எம்.மகாலிங்கம், பொருளாளராக கே.ராஜேந்திரன், துணைத் தலைவர்களாக கே.விஜயா, எம்.முருகானந்தம், என். துரைராஜ் ஆகியோரும், துணைச் செயலாளர்களாக அ.குமரேசன், எஸ்.ராஜ்மோகன், கனகராஜ் ஆகியோரும் தேர்வு செய்யப்பட்டனர்.

புதிய நிர்வாகிகளை அறிமுகம் செய்து கோ.பழனிசாமி மாநாட்டில் நிறைவுரை நிகழ்த்தினார். 350க்கும் அதிகமான பிரதிநிதிகள் கலந்துகொண்ட இம்மாநாட்டில் பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. குறிப்பாக 100 வேலைக்கு அதிக நிதி ஒதுக்கிட வேண்டும், நபர் ஒவ்வொருவருக்கும் 100 நாட்கள் ஓர் ஆண்டில் வேலை வழங்க வேண்டும், 100 நாள் வேலையினை 200 நாட்களாக உயர்த்தி வழங்க வேண்டும், விவசாய தொழிலாளர்களின் வீடுகளை கான்கிரீட் வீடுகளாக மாற்றி தர வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# தவறான சிகிச்சையால் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு நீதி கேட்டு போராட்டம்




பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்ட சேலம் மாவட்டம் நங்கவள்ளி ஒன்றியம் சூரபள்ளி ஊராட்சி சின்னனூர் கிராமத்தைச் சார்ந்த விவசாய சங்கத்தின் மாவட்டத்தலைவர் எம்.சின்னதம்பி அவர்களின் மகள் எம்.சத்தியா என்பவருக்கு தவறான ஊசியை போட்டு கண்பார்வை இழக்கச் செய்த சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவ கல்லூரி மருத்துவமனை மருத்துவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அரசு மருத்துவமனையை முற்றுகையிடும் போராட்டம் நங்கவள்ளி ஒன்றிய செயலாளர் பழ.ஜீவானந்தம் தலைமையில் நடைபெற்றது.

போராட்டத்தை கட்சியின் மாவட்ட செயலாளர் ஏ.மோகன் துவக்கி வைத்தார்.மாவட்ட துணைச் செயலாளர்கள் எம்.ராமன் ஏ.கந்தன் ஆகியோர் கோரிக்கை உரையாற்றினர்.

போராட்டத்தின் போது மருத்துவமனைக்குள்ளே நுழைந்து மருத்துவமனையில் அமர்ந்து முழக்கங்களை எழுப்பினர். அப்போதும் பாதிக்கப்பட்ட மக்களை பார்ப்பதற்கு மருத்துவமனை முதல்வர் மற்றும் இதர மருத்துவர்கள் மறுத்துவிட்டனர். இதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட குடும்பத்துடன் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் சென்று வருவாய் கோட்டாட்சியரிடம் மனு வழங்கப்பட்டது.

# 18ம் ஆண்டு சுனாமி நினைவு தினம்

செங்கல்பட்டு மாவட்டத்தில், தமிழ்நாடு ஏஐடியூசி மீனவ தொழிலாளர் சங்கத்தின் சார்பில் 18ஆம் சுனாமி நினைவு தினம் கடைபிடிக்கப்பட்டது. மாவட்ட தலைவர் கா.ஜெகதீசன் தலைமை தாங்கினார். கல்பாக்கம், சதுரங்கப்பட்டினம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சுனாமி நினைவு ஸ்தூபிக்கு கல்பாக்கம் அணுமின் நிலையம் ஏஐடியூசி ஸ்தாபகர், மூத்த தோழர் சி.சக்கரபாணி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். மாவட்ட செயலாளர் எஸ். சரவணன் மற்றும் மீனவ தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

### குரண்டி ஊராட்சியில்

# அடிப்படை பிரச்சினைகளை தீர்க்க வலியுறுத்தி பொதுக்கூட்டம்

விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி வட்டம் குரண்டி ஊராட்சியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கிளை செயலாளர் கணேசன் தலைமை வகித்தார். பிச்சைகனி, பழனிஅய்யா ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். தேசிய குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ , மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட பொருலாளர் எஸ்.பழனிக்குமார் ,வட்டசெயலாளர் வேலுச்சாமி, துணை செயலாளர் ஞானக்குமார், திருச்சுழி ஒன்றிய செயலாளர் செல்வம், பயணம் சுந்தரராஜன், ஏஐடியுசி இளங்கோ ,தவிச சேதுராஜ் , பொருளாளர் ரவிச்சந்திரன் ஆகியோர் பேசினார்கள். வாருகால் அமைக்க வேண்டும், வீட்டு வரி ரசீது வழங்க வேண்டும், நூறு நாள வேலை திட்டத்தில் பாகுபாடின்றி அனைவருக்கும் வேலை வழங்க வேண்டும், விளையாட்டு மைதானத்தையும், நூலகத்தையும் சீர் செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தலைவர்கள் பேசினார்கள். முன்னதாக கட்சி கொடியை தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ ஏற்றி வைத்தார்.

## இந்த வார தம்பிக்குறள்

### 103. ஐயுறுதல்

**ஐயுறுதல் ஆக்கத்தின் ஆக்கம் இறத்தல்**
**இதயத்தைக் கொல்லும் இடித்து**

எந்தச் செயலிலும் 'ஏன், எப்படி, எதற்கு' என ஐயம் எழுப்பிச் செயல்படின் செல்வம் உண்டாகும். அதுவேகூட அளவுக்கு மிஞ்சினால் இதயத்தை தாக்கி கொன்று விடும் என்க. (இறத்தல் – எல்லை தாண்டுதல்)

**சிறந்துழி ஐயம் சிறந்ததென்ப தேரின்**
**இறந்துழி இல்லை இனிது.**

ஐயம் (சந்தேகம்) சிற்புடையதாக இருப்பின், நன்மை உண்டாகுமாறு கேட்கப்படின் ஐயம் கேட்டுத் தெளிவது சிறப்பாகும். அதுவே எடுத்ததற்கெல்லாம் ஐயமாகிவிட்டால் அது இன்பம் தராது. துன்பமே தரும். (வினா வகை ஆறு அவற்றில் ஐயுறல் என்பது இதுவோ, அதுவோ என ஐயப்படல் எனப்படும். இதனை நன்னூலில் கண்டு கொள்க.)

# நூல் நயம்

## அம்பேத்கரும் மனுஸ்மிருதியும்




தமிழ் செவ்விலக்கியங்கள் அவை தோன்றிய சூழலும், சமஸ்கிருதத்தில் அவற்றின் சாயலும் என்னும் இந்நூலில் ஒரு மொழியின் இலக்கியத்தின் மூலத்தை தேடுதல், அந்த இலக்கியத்தின் தன்மையைப் பற்றிய ஆராய்ச்சியில் ஒரு கூறு. தமிழில் சங்க இலக்கியம் நமக்கு கிடைத்துள்ள மூல இலக்கியம். அதன் மொழி, அதன் சமகாலத்தை சேர்ந்த பிரமி அல்லது தமிழிக் கல்வெட்டுக்களின் மொழியிலிருந்து மிகவும் வேறுபட்டது. சங்க இலக்கியத்தின் பண்பட்ட, குறிப்பு பொருள் நிறைந்த அழகியல், சிறந்த மொழி நடை எப்படி உருவாகிறது என்னும் கேள்வி, இன்னும் விடை தெரியாத கேள்வியாகும்.

சங்க இலக்கிய மொழி வெளிப்படுத்தும் இலக்கியத் தன்மைகளைப் பற்றியும், அந்த இலக்கியம் சார்ந்த பண்பாட்டின் வாழ்வு முறைகள்.தமிழ் இலக்கியம், பிராக்கிரத, சமஸ்கிருத இலக்கியங்கள் இந்திய துணைக்கண்டத்தில் வளர்ந்தது. இலக்கியங்களிடையே ஒத்த தன்மைகள் இருப்பது எதிர்பார்க்கக் கூடியதே. ஒத்த தன்மைகள் அவற்றின் தொடர்பு பற்றிய கேள்விகள் எழுப்புகின்றன. மொழிகள் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை. ஒன்றின் வளத்திற்கு மற்றொன்று துணை புரியவை என்பதையும் நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.


நூலாசிரியர் சமஸ்கிருத இலக்கியங்கள் தென்னிந்திய மரபின் தாக்கத்தை பெற்றிருக்க வேண்டும் என்னும் ஐயப்பாட்டை தனது ஆழ்ந்த அறிவின் வழி பெற்றிருந்தார். பிற்காலத்தில் இந்தோ, ஆரியம் , சமஸ்கிருதம் என்னும் தனது வரம்பைக் கடந்த அவரது கருத்துக்கள் மிகவும் மதிப்பு மிக்கவனாய் அமைந்தன.

“நெல்லும் உயிர் அன்றே, நீரும் உயிர் அன்றே மன்னன் உயிர்த்தே மலர் தலை உலகம்.” தமிழ் சமூக அமைப்பில் மன்னன் பெறும் இடம், வட இந்திய மன்னனது இடத்திலிருந்து முரண்பட்டு அமைகிறது. மன்னனது உயிரானாலும், நெல்லின் உயிரானாலும் இரண்டும் உயிரே என்பது தமிழர் மரபு. ஆனால் வட மரபில் அவ்வாறு இல்லை. அங்கு புனித ஆற்றல் பெரும்பாலும் பிராமணர்களின் பாதுகாப்பில் அமைகிறது. தமிழ் சமூகத்தில் மன்னருக்கு உள்ள இடமும், வட இந்தியாவில் மன்னருக்கு இருந்த இடமும் வெவ்வேறாக உள்ளன. இவ்வாறு தான் மொழியின் தன்மைகளும் உள்ளன. தமிழ் இலக்கியத்தின் வளமையை அறிந்து கொள்ள இந்நூலை அனைவரும் வாங்கி படிக்க வேண்டுகிறோம்.

– இன்சுவை பாரதி

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | ஆ. சிவசுப்பிரமணியன் |
| பக்கம் | : | 16 விலை: ரூ 15 |
| வெளியீடு | : | நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 50 |

## நடை பழகிய பொழுதுகள்




சமூக ஆர்வலரும், மூட பழக்க வழக்கங்களை, சமூக சீர்கேடுகளை அடியோடு அழிக்க வேண்டும் என்கிற சிந்தனை மிக்கவருமான ஐயறின் ரெஜி எழுதிய ‘நடைபழகிய பொழுதுகள்’ என்னும் கவிதை நூல் இது.

“கன்னித்தமிழ் தாயின் முந்தி பிடித்து நடைப யில துடிக்கும் என் போல் மழலை தமிழ் கவிஞர் தம் கற்பனை முட்டைகளை அடைகாத்து கவிதை குஞ்சுகளை பொறிக்கும் நேரம்“ஒவ்வொரு கவிஞரும் சமூகத்தின் எதார்த்தங்களை, அவலங்களை , அழகியலை, மகிழ்ச்சிகளை எவ்வாறு அடை காத்து கவிதையாக கொண்டு வருகிறார்கள் என்பதை தன்னையே உவமையாக்கி தருகிறார் கவிஞர். தமிழைத் தாயாக்கி அவள் முந்தி பிடித்து உலகத்தை காணுகிறார்.

“முதலில் மனிதன் தோன்றி, தமிழ் மொழி பேசி நின்ற எம், முப்பாட்டன் வாழ் நிலமான, லெமூரியா மொத்தத்தையும் மூழ்க வைத்தது போக, புகாரில் சிறு எச்சத்தையும் புதைத்து வைத்திருக்கும், பேராழி உன்னை பெரும் கோபத்தோடு கண்டேன்”ஆதி மனிதன் தோன்றி பேசிய, ஆதி மொழியாம் தமிழ் மொழியையும், அதன் நிலப்பரப்பையும் கடல்கோல் அழித்தது போக எஞ்சி இருப்பது தான் இன்றைய தமிழ் நிலம். எஞ்சி இருக்கும் எச்சங்களை வைத்து தான் நாம் மிச்சங்களை பேச வேண்டி இருக்கிறது என்கிற எதார்த்தத்தை கோபமாக வெளிப்படுத்துகிறார்.

“புவியில் தழைத்த எமது இனத்தை சுயநல வாழ்வின் சொகுசுத் தேவையால் இயந்திர மனம் கொண்டோனாய் “மாறி போனாயே, அறிவு இழந்த மானிடா என அறச்சிற்றும் கொள்ளுகிறார். நுகர்வு யுகம் லாப வரி கொண்டு, மனிதர்களை உயிராக பார்க்காமல் ஒரு நுகர்வு பொருளாக மாற்றிவிட்டது. அதன் விளைவு தான் சீரழிந்த இன்றைய நிலை. பல்வேறு புதிய புதிய நோய்களாய், இயற்கை பேரிடர்களாய் மனிதர்களை அலை கழித்து கொண்டிருக்கிறது. இவை குறித்தெல்லாம் மிக அழகாக தன் கவிதையில் பதிவு செய்திருக்கிறார் கவிஞர்.‘மனிதனுக்கு முன்னரே விலங்குகள், விலங்கிற்கு முன்னரே தாவரங்கள், தாவரம் தோன்றும் முன் தரையும் கடலும், மதம் சொல்லும் படைப்பு கதை’உயிரின் தோற்று வாழ் மதங்களுக்கு அப்பாற்பட்டது என்கிற அறிவில் கருத்தை, பகுத்தறிவுசிந்தனையோடு நூலாசிரியர் பதிவு செய்திருக்கிறார். நடைபழகிய பொழுதுகள் நூலை அனைவரும் வாங்கி படிக்க வேண்டுகிறோம்.

–சமரன்

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | ஐயறின் ரெஜி |
| பக்கம் | : | 140 விலை :190 |
| வெளியீடு | : | பாவை பப்ளிகேஷன்ஸ், 16, ஜானி ஜான் கான் சாலை, ராயப்பேட்டை, சென்னை – 14 |

சுழலும் உலகம்

# பிரேசில்: ஆட்சிக்கவிழ்ப்புக்கு எதிரான வெகுமக்கள் போராட்டம் வெடிக்கட்டும்! பிரேசில் கம்யூனிஸ்ட் கட்சி அறைகூவல்!



தென்னமெரிக்க நாடான பிரேசிலில் கடந்த அக்டோபர் மாதம் நடைபெற்ற தேர்தலில் போல்சோனாரோவை 2% வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்று அந்நாட்டின் அதிபராகப் பதவி ஏற்றார் இடதுசாரி தலைவரான லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வா. இதன்மூலம் பிரேசிலில் பெரிதும் விமர்சிக்கப்பட்டு வந்த வலதுசாரி தலைவர் போல்சோனாரோவின் ஆட்சி முடிவுக்கு வந்தது.

இடதுசாரி தலைவரான லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வா, தொழிற்சங்கத் தலைவராக இருந்தவர். பிரேசிலின் அதிபராக 2003 மற்றும் 2010ஆம் ஆண்டுகளில் பதவி வகித்தவர் சில்வா. 2022ஆம் ஆண்டு அதிபர் தேர்தலில் போல்சோனாரோவை வெற்றிகொண்டு மூன்றாவது முறையாக அதிபராகப் பொறுப்பேற்றார். தேர்தல் முடிவுகளை ஏற்றுக் கொள்ளாமல், போல்சோனாரோ ஆதரவுடன் வலதுசாரி சக்திகள் வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபட ஆரம்பித்தன.

இந்த நிலையில், இரண்டு மாதங்களுக்குப் பிறகு லுலா டா சில்வாவின் வெற்றியை எதிர்த்து போல்சோனாரோவின் வலதுசாரி வன்முறையாளர்கள் கடந்த 08.01.2023 அன்று பிரேசில் நாடளுமன்றம், உயர்நீதிமன்றம் உள்ளிட்ட அரசாங்க அலுவலக கட்டிடங்கள் மீது தாக்குதல் நடத்தியிருப்பது பெரிய அளவில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இந்த வன்முறை நடவடிக்கைகள் அனைத்தும் இணையதளங்களில் காணொலிகளாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து, இந்த வன்முறை நடவடிக்கைகளை உலகம் முழுவதிலுமுள்ள இடதுசாரி மற்றும் ஜனநாயக சக்திகள் வன்மையாகக் கண்டித்து வருகின்றன. இந்த அசாதாரண சூழல் குறித்து பிரேசில் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய குழு வெளியிட்டுள்ள செய்தி அறிக்கை பின்வருமாறு:

08.01.2023 அன்று முன்னாள் அதிபர் ஜெயர் போல்சோனாரோவின் ஆதரவாளர்கள் நாடாளுமன்றம் உள்ளிட்ட அரசாங்க கட்டிடங்களை முற்றுகையிட்டு, கைப்பற்ற முனைந்தனர். வன்முறை சம்பவங்களைத் தூண்டிவிட்டு ஆட்சிக்கவிழ்ப்பு நடவடிக்கையில் ஈடுபட முயன்றனர்.

பிரேசிலில் உள்ள தீவிர வலதுசாரி சக்திகளின் இந்த ஆட்சிக்கவிழ்ப்பு நடவடிக்கைக்கு வணிகத்துறையில் உள்ள பெரும் நிறுவனங்களின் நிதி ஆதரவு உள்ளது; இராணுவம் மற்றும் காவல்துறையின் சில பிரிவுகளும் ஆட்சிக்கவிழ்ப்பு நடவடிக்கைக்கு ஆதரவாக இயங்கி வருகின்றன.

தீவிர வலதுசாரி சக்திகள் தேர்தல் முடிவுகளை அங்கீகரிக்க மறுத்து, ஜனநாயகத்தின் மீதான தாக்குதலை மிகவும் வெளிப்படையாக சமூக ஊடகங்களில் மேற்கொண்டு வருகின்றன.

தலைநகர் பிரேசிலியாவில் உள்ள காவல்துறையினரின் சில பகுதியினரும், வலதுசாரி வன்முறையாளர்களுக்கு ஆதரவாக இருந்ததைத் தொலைக்காட்சி மற்றும் சமூக ஊடகங்களில் உள்ள காணொலிகள் புலப்படுத்துகின்றன. எதிர்பார்க்கப்பட்ட இந்த வன்முறை நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவதற்குப் போதுமான பாதுகாப்பு படையினர் நிறுத்தப்படவில்லை. குறைவான அளவில் இருந்த காவல்துறையினரும் வன்முறையாளர்களைக் கண்டுகொள்ளாமல் இருந்துவிட்டனர். சுமார் 100 பேருந்துகளில் வலதுசாரி வன்முறையாளர்கள் தலைநகரம் நோக்கி வருகிறார்கள் என்ற தகவலும் அங்குள்ள அதிகாரிகளுக்கு தெரிந்திருந்தது.

தேர்தலில் லுலா டா சில்வா வெற்றிபெற்றுவிட்டதாக அறிவிக்கப்பட்ட பிறகு, ஆட்சிக்கவிழ்ப்பு நடவடிக்கைகள் வெளிப்படையாகவே பிரேசிலியா நகரில் டிசம்பர் 24 அன்று திட்டமிடப்பட்டன. போல்சோனாரோ அரசாங்கத்தின் இறுதி நாளன்று கூட, பிரேசிலியா விமான நிலையத்திற்கு அருகில் ஒரு பீரங்கி வாகனத்தை வெடிக்கச் செய்வதற்கான முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது. இராணுவ தலையீட்டுக்குச் சாதகமான ஒரு சூழலை உருவாக்குவதற்காகவே இது போன்ற குழப்பங்கள், வெறுப்புணர்வு, அரசாங்க அமைப்புகளுக்கு இடையே மோதல் ஆகியன திட்டமிடப்பட்டன.

ஜனநாயக அமைப்புகள் மீது திட்டமிட்டு தாக்குதல் நடத்தப்படுவதாகப் பிரேசில் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. இந்தத் தாக்குதல் சம்பவத்திற்கு உடந்தையாக இருக்கும் அதிகாரிகள் மீது உடனடியாக விசாரணை மேற்கொண்டு, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாங்கள் கோருகிறோம். இத்தகைய வன்முறை நடவடிக்கைகளுக்கு ஆதரவாக உள்ள தலைவர்கள் மற்றும் நிதி உதவி செய்பவர்களையும் கண்டறிந்து கைது செய்திட வேண்டும்.

நவீன பாசிச மற்றும் தீவிரவாத குழுக்களுக்கு எதிராக இடதுசாரி கட்சிகளும், ஜனநாயக சக்திகளும், வெகுமக்கள் இயக்கங்களும் ஒன்றிணைந்து, உரிய பதிலடி கொடுக்க வேண்டும் என்று இன்றைய சூழல் வலியுறுத்துகிறது. எனவே,

ஆட்சிக்கவிழ்ப்பு நடவடிக்கைகளுக்கு எதிரான பிரச்சாரம், பொதுமக்களை அணிதிரட்டுவது ஆகியவை குறித்து விவாதிக்க இடதுசாரி மற்றும் இதர முற்போக்கு அரசியல் கட்சித் தலைவர்களின் அவசரக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும்.

ஆட்சிக்கவிழ்ப்பு நடவடிக்கைகளை அம்பலப்படுத்தும் வெகுமக்கள் போராட்ட இயக்கங்களை அனைத்து மாநிலங்களிலும் நடத்திட வேண்டும்.

ஜனநாயகத்தைப் பாதுகாத்திட, ஆட்சிக்கவிழ்ப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகப், பரந்துபட்ட, மாநில அளவிலான சிறப்பு கூட்டங்களை நடத்திட வேண்டும்.

இவ்வாறு பிரேசில் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# 2023 ல் உலகப் பொருளாதாரம் மோசமடையும்: சர்வதேச நிதியம் தகவல்

கடந்த ஆண்டைக் காட்டிலும், 2023 ல் உலகப் பொருளாதாரம் மேலும் மோசமடையும் என்று சர்வதேச நிதியம் கணித்துள்ளது. சிஙிஷி ழிமீஷ்வ செய்தி நிறுவனத்திற்கு சர்வதேச நிதியத்தின் தலைவர் க்ரிஸ்டலீனா ஜார்ஜீவா அளித்த பேட்டியில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

2023 ஆம் ஆண்டு சர்வதேச பொருளாதாரத்துக்கு சற்று கடினமான காலம் தான். அமெரிக்கா, சீனா, மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பொருளாதார செயல்பாடுகள் ஒரே நேரத்தில் நலிவடைந்து வருவதே இதற்குக் காரணம் என்று அவர் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது ஆகும்.

கொரோனா தொற்று பரவல் மீண்டும் அதிகரித்து வருவதால் சீனப் பொருளாதார வளர்ச்சியில் எதிர்மறை தாக்கங்கள் ஏற்படலாம். அந்த எதிர்மறை விளைவுகள் சர்வதேச பொருளாதாரத்திலும் எதிரொலிக்கலாம் என்று அவர் எச்சரித்துள்ளார்.

முன்னதாக, கடந்த அக்டோபர் மாதத்தில் சர்வதேச நிதியம் 2023ல் உலகப் பொருளாதார வளர்ச்சி பற்றிய கணிப்பில் உக்ரைன் போர், உலகம் முழுவதும் நிலவும் பணவீக்க அழுத்தங்கள், அமெரிக்க மத்திய வங்கி வட்டி விகிதங்களை அதிகரிப்பதால் சர்வதேச அளவில் மந்தநிலை ஏற்படும் என்றே கூறியிருந்தது.

முதலாளித்துவ பொருளாதார அமைப்பு நெருக்கடியில் இருக்கிறது என்ற உண்மையை நடைமுறை அனுபவத்தில் உலக நாடுகளின் பொருளாதார நிலை அம்பலப்படுத்துகிறது. சோஷலிசமே மாற்று; பிரச்சனைகளுக்குத் தீர்வுகளைத் தரவல்லது.

# பகுதி அல்லது ஆண்டு குத்தகை கட்டணம் வசூலிப்பதில் பழைய முறைக்கு திரும்ப வேண்டும்

## நில உரிமை பாதுகாப்பு மாநாடு தீர்மானம்




மயிலாடுதுறையில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் மற்றும் கோவில் மனைகளில் குடியிருப்போர் சங்கத்தின் சார்பில் நில உரிமை பாதுகாப்பு மாநாடு எஸ்.குணசேகரன் மு.எம்.எல்.ஏ. அ.பாலசுப்ரமணியன் தலைமையில் நடைபெற்றது. வை.சிவபுண்ணியம் மு.எம்.எல்.ஏ., பி.எஸ்.மாசிலாமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், கோ.பழனிச்சாமி எக்ஸ்.எம்.எல்.ஏ, மாநில துணை செயலாளர் நா.பெரியசாமி எக்ஸ்.எம்.எல்.ஏ., நாகை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராசு மாநில நிர்வாக குழு உறுப்பினர் க.மாரிமுத்து எம்.எல்.ஏ., கே.உலகநாதன் எக்ஸ்.எம்.எல்.ஏ, வை.செல்வராஜ் திருவாரூர் மாவட்ட செயலாளர், எஸ்.ஏழுமலை, அ.சீனிவாசன் மயிலாடுதுறை மாவட்ட செயலாளர், மு.அ.பாரதி தஞ்சை வடக்கு மாவட்ட செயலாளர், முத்து உத்திராபதி தஞ்சை தெற்கு மாவட்ட செயலாளர், சிவகுருபாண்டியன் நாகை மாவட்ட செயலாளர், ஆர். இடும்பையன் வி.தொ.ச.மாவட்ட செயலாளர் மயிலாடுதுறை மாவட்டம் மற்றும் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். பி.வீரராஜ் நன்றி கூறினார்.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

கடந்த 2003 ஆம் ஆண்டில் இந்து சமய அறநிலைகள் சட்டத்தில் 34 ஏ பி சி டி என பிரிவுகள் புகுத்தப்பட்டன இச்சட்டம் பிரிவுகளின் படி பகுதி அல்லது குத்தகை வசூலிக்கும் முறைக்கும் பதிலாக அடிமனையில் சந்தை விலை மதிப்பில் சதுர அடி கணக்கில் வாடகை நிர்ணயிக்கப்பட்டதால் குடியிருப்போர் செலுத்த முடியாத பெரும் தொகை நிலுவையாக குவிந்துள்ளது புகுத்தப்பட்ட புதியசட்ட பிரிவுகளை கோவில் மனைகளில் குடியிருந்து வருவோரின் வாழ்வுரிமையை வேரோடு பறிக்கும் ஆயுதங்களாக இந்து சமய அறநிலைத்துறை பயன்படுத்தி வருவதை மாநாடு அரசின் கவனத்திற்கு சுட்டிக்காட்டுகிறது.

2003 ஆம் ஆண்டில் புகுத்தப்பட்ட 34 ஏ.பி. சி.டி. என்ற நான்கு சட்டப்பிரிவுகளையும் முழுமையாக நீக்கம் செய்ய வேண்டும் என்று கூறுவதுடன் கோயில் மனையில் குடியிருந்து வருவோர்களிடம் 1998 முன்னர் பகுதி அல்லது ஆண்டு குத்தகை என்ற முறையில் கட்டணம் வசூலிக்கும் பழைய முறைக்கு திரும்ப வேண்டும் என்றும் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அரசாணைகள் 456 மற்றும் 298 நடைமுறைப்படுத்த வேண்டியும் மாநாடு தமிழ்நாடு அரசை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

வாழ்விட உரிமை வழங்கப்பட வேண்டும்

கோயில் மனைகளில் வசித்து வர ஒப்பந்தம் பெற்றவர்கள் தங்களது அயராத உழைப்பாலும் சொந்தமாக செலவழித்தும் வீடுகளை கட்டி வாழ்ந்து வருகின்றனர். அடி மனைக்கான கட்டணத்தை கோவில் நிர்வாகத்திற்கு முறையாக செலுத்தி வந்ததுடன் வீடுகள் உட்பட அனைத்து கட்டுமானங்களையும் தங்கள் வாரிசுதாரர்களுக்கு மாற்றி தரவும் மூன்றாவது நபருக்கு உரிமை மாற்றம் செய்யவும் உரிமை பெற்றிருந்தனர். இந்த வசிப்பிட உரிமையை பறித்துக் கொண்ட இந்து சமய அறநிலைத்துறை, குடியிருந்து வருபவரின் நில மேம்பாட்டு கட்டுமான செலவுகளை கருத்தில் கொள்ளாமல் தற்போதுள்ள வசிப்பிடங்களை கோயில்களுக்கு தானமாக எழுதித் தருமாறு நிர்ப்பந்தித்து வருவதை கைவிட வேண்டும். எவ்வித அச்சுறுத்தலும் இல்லாமல் அனுபவித்து வருவதற்கான முறையில் உரிமையை உறுதி செய்யவும், குடிநீர் இணைப்பு, கழிவுநீர் இணைப்பு, மின் இணைப்பு உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளை பெறுவதற்கு இந்து சமய அறநிலைத்துறையிடம் தடையின்மை சான்று பெற வேண்டும் என்ற நிபந்தனையை நீக்க வேண்டும்.

ஆக்கிரமிப்பு நிலங்களை விடுவித்து பட்டா வழங்குக...

இனாம் ஒழிப்பு, நில உச்சவரம்பு சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்த சட்டங்கள் நடைமுறைக்கு வந்த காலங்களில் கிராம நத்தம், பட்டின நத்தம், குடிக்காணி, சர்க்கார் புறம்போக்கு போன்ற இனங்களில் உள்ள நிலங்களில் வாழ்ந்து வருவோர் படிப்பறிவில்லாத காரணத்தினாலும், அறியாமையினாலும் அரசிடம் முறையிட்டு நிலப்பட்டா பெறவில்லை. இந்த வகையில் உள்ள நிலங்களை எந்தவித ஆவணங்களும் இல்லாமல் இந்து சமய அறநிலைத்துறை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது. அறநிலைத்துறையால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களில் வசித்து வருவோர்களிடம் கட்டணமும் வசூலித்து வருகிறது. இந்த நியாயமற்ற நடைமுறையை உடனடியாக கைவிட வேண்டும். அவைகளில் வாழ்ந்து வருவோருக்கு மனைநிலத்தை சொந்தமாக்கும் வகையில் மனை பட்டா வழங்க வேண்டும். மேலும் 1971 ஆம் ஆண்டு கலைஞர் அவர்களால் வழங்கப்பட்ட இணை பட்டாக்களை அங்கீகரிக்க வேண்டும் என மாநாடு தமிழ்நாடு அரசை கேட்டுக் கொள்கிறது.

நீதி பெறும் உரிமை வழங்க வேண்டும்

கோவில் மனைகளில் குடியிருப்போர்களுக்கும், கோயில் நிர்வாகம் மற்றும் அறநிலைத்துறைக்கும் இடையில் முரண்பாடுகள், தாவாக்கள் எழும்போது அது தொடர்பாக உரிமையியல் நீதிமன்றங்களுக்கு செல்லும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது. தவறு செய்பவர்களிடமே நீதி வழங்கும் பொறுப்பை ஒப்படைத்திருப்பது இயற்கை நியதிக்கு மாறானது. இந்து சமய அறநிலையத்துறை நடவடிக்கை தொடர்பாக உரிமையியல் நீதிமன்றங்களில் முறையிட்டு நியாயம் பெறும் உரிமை வழங்க வேண்டும் என மாநாடு தமிழ்நாடு அரசை கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



# அத்திப்பட்டு இரா.விஜயகுமார் குடும்பத்தின் சார்பில் 500 பெண்களுக்கு புடவை, ரூ.50,000 கட்சி நிதி

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய சென்னை மாவட்டம் அம்பத்தூர் பகுதி குழு செயலாளர் இரா.விஜயகுமார் மற்றும் அத்திப்பட்டு மறைந்த ஆர்.கண்ணன் குடும்பத்தாரும் வருடந்தோறும் தாய்மார்களுக்கு விலையில்லா புடவைகளை வழங்கி வருகின்றனர்.

அதுபோல் இந்த வருடம் தாய்மார்களுக்கு விலை இல்லா புடவை வழங்கும் விழா செல்லியம்மன் கோயில் சமீபம் வெங்கடேஸ்வரா பள்ளி அருகில் நடைபெற்றது. புடவை வழங்கும் நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு கட்டிட தொழிலாளர் சங்க மாநில செயலாளர் இரா.துரைசாமி தலைமை தாங்கினார்.

அம்பத்தூர் பகுதி குழு செயலாளர் இரா.விஜயகுமார் வரவேற்புரை ஆற்றி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மையத்திற்கு ரூ.50,000 நிதியை, மாநில துணைச் செயலாளர் நா. பெரியசாமியிடம் வழங்கினார்.

நா.பெரியசாமி சிறப்புரையாற்றும்போது, இந்த ஆண்டு தாய்மார்களுக்கு 500 புடவைகள் வழங்குவது போல், அடுத்த ஆண்டு ஆயிரம் புடவைகளுக்கு மேல் வழங்கி தாய்மார்களிடம் வாழ்த்தை பெறுங்கள். கட்சிக்கு தன்னிடம் கொடுக்கப்பட்ட ரூ.50 ஆயிரம் என்ற பெரிய தொகையை இங்கு தருவார்கள் என்று நான் எதிர்பார்த்து வரவில்லை. புடவை வழங்கும் நிகழ்ச்சி என்பதால் சந்தோஷமாக வந்தேன். இப்போது நன்கொடை அளித்தது மகிழ்ச்சியாக உள்ளது என்றார்.

சென்னை பெருநகர மாநகராட்சியின் அம்பத்தூர் மண்டல குழு தலைவர் பி.கே.மூர்த்தி, சிபிஐ மத்திய சென்னை மாவட்ட செயலாளர் பா.கருணாநிதி, ஏஐடியூசி மாநில துணைத்தலைவர் ஏ.எஸ்.கண்ணன் எக்ஸ்.எம்.எல்.ஏ., சிபிஐ மாவட்ட துணை செயலாளர் ப.மாரியப்பன், மாமன்ற உறுப்பினர்கள் எம்.இ.சேகர், ரமேஷ் என்ற நீலகண்டன், எம்.கமல் ஆகியோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். கல்வியாளர் திருமதி உமா கண்ணன், தொழிலதிபர்கள் யோகநாதன் மணவாளன், சங்கர், ஆர்.விஜயகுமார், கிருபாகரன், ராஜேஷ், ஆறுமுகம் திருதயாளன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மேலும் தோழமை கட்சி சார்பாக திமுக, விசிக, மதிமுக, சிபிஎம் தோழர்கள் திரளாக வந்திருந்தனர்.

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சிந்தாதேவி கயா மாநகராட்சி துணை மேயராக தேர்வு



பீகார் மாநிலம், கயா மாநகராட்சியின் துணை மேயரானார் சிந்தாதேவி. இவர் சுகாதார பணியாளராக பணியாற்றி அத்துறை சார்ந்த தொழிலாளர்களை தொழிற்சங்கத்தில் அணி திரட்டிய ஒரு சிறந்த கம்யூனிஸ்ட் ஆவார். இவர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளர் டி.ராஜாவை சந்தித்து வாழ்த்துக்களைப் பெற்றார்.

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 14.01.2023 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

# பாசிச சக்திகளிடமிருந்து இந்தியாவை விடுவிப்பதற்காக நாம் உறுதி ஏற்போம்

## கோவை சின்னியம்பாளையத்தில் டி.எம்.மூர்த்தி முழக்கம்



சின்னியம்பாளையம் தியாகிகளின் 77 ஆம் ஆண்டு நினைவு தின புகழஞ்சலி கூட்டம் கடந்த 8 தேதி கோவையை அடுத்த சின்னியம்பாளையம் தியாகிகள் மேடை வளாகத்தில் நடைபெற்றது.

முன்னதாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் இணைந்து சின்னியம்பாளையம் டீச்சர்ஸ் காலனி பகுதியில் இருந்து ஊர்வலமாக வந்து, தியாகிகள் மேடையில் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தினர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கொடியை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் பி. சண்முகம் ஏற்றி வைத்தார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கொடியை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் டி.எம். மூர்த்தி ஏற்றி வைத்தார்.

கட்சி தோழர்கள் மற்றும் தொழிற்சங்க, வெகுஜன அரங்க நிர்வாகிகள் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தினர்.

பின்னர் நடைபெற்ற புகழஞ்சலி கூட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர் டி. எம். மூர்த்தி பேசும்போது, இந்தியாவை விடுவிக்க நாம் உறுதி ஏற்க வேண்டும். வரும் 2024ல் நமக்கு ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அந்த வாய்ப்பை இந்திய தொழிலாளி வர்க்கம் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

“ ராமையன், ரங்கண்ணன், சின்னையன், வெங்கடாசலம் என்ற அந்த நான்கு தியாகிகளும் 77 ஆண்டுகளுக்கு முன்னர் தூக்கிலிடப்படுவதற்கு முதல் நாள் வரை உயிரோடு இருந்தார்கள்.

அவர்கள் தூக்கு மேடையிலே துடிக்க துடிக்க கொல்லப்பட்ட போது, தன்னுடைய உயிரை நினைத்து, குடும்பத்தை நினைத்து எல்லாம் அவர்கள் அழவில்லை. மாறாக கரம் உயர்த்தி இன்குலாப் ஜிந்தாபாத் என்று கோஷமிட்டு தங்களுடைய மரணத்தை தழுவினார்கள்.

உங்களுடைய விருப்பம் என்னவென்று கேட்டபோது, அவர்கள் சொன்னார்கள், ‘நாங்கள் தொழிலாளர்களுக்காக போராடினோம், தொழிலாளர்களுக்காக தண்டனை அனுபவிக்கிறோம், தொழிலாளர்கள் ஒற்றுமை தான் முக்கியமானது, ஆகவே, நாங்கள் செத்துப்போன பின்னர் எங்களை தனித்தனியாக புதைக்க வேண்டாம், ஒரே குழியில் புதைக்க வேண்டும்,’ என்று கோரிக்கை வைத்தார்கள். அவர்கள் புதைக்கப்பட்ட அந்த நினைவு மேடைக்கு பக்கத்திலே நின்று பேசுவதில் நான் பெருமை கொள்கிறேன்.

எதற்காக அவர்களுக்கு தூக்கு தண்டனை பரிசளிக்கப்பட்டது. 1946ல் ரங்கவிலாஸ் மில்லில் தொழிலாளர்கள் 12 மணி நேரத்தில் இருந்து 15 மணி நேரம் வரை வேலை செய்ய வேண்டும். ஒரு மாதம் முழுமைக்கும் சேர்ந்து 15 ரூபாய் சம்பளம். பொழுது விடிவதற்கு முன்னால் போய், பொழுது அடைந்த பிறகு வீட்டுக்கு வர வேண்டும்.

பெண்களுக்கு அங்கே பாலியல் தொந்தரவு, வல்லுறவு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பெண்களின் பாதுகாப்பு குறித்து கவலை கொண்டது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி என்பது அன்றைக்கு ஒரே கட்சி தான். ஒரே தொழிற்சங்க இயக்கம்.

பணியாற்றும் பெண் தோழர்களுக்கு பாலியல் சீண்டல்கள் வரும்போது என் சங்கம், என் சக தோழர், அவர் வன்புணர்வு செய்யப்பட்டு கொல்லப்பட்டார் என்ற பிறகு, அதை எதிர்த்து நடந்த நிகழ்வில் யார் அந்த பெண்ணை வன்புணர்வு செய்து கொன்ற கொடியவனோ, எவன் அந்த கேடுகெட்ட செயலை செய்தானோ, கூட்டு பலாத்காரம் செய்வதற்கு காரணமான கயவனோ அவன் கொல்லப்பட்டது மிகப்பெரிய குற்றமாக கருதி நம்முடைய நான்கு தோழர்களும் தூக்கிலிடப்பட்டார்கள்.

தற்காப்புக்காகவோ அல்லது தவிற்க முடியாமலோ அல்லது திட்டமிடாமலோ ஒரு மரணம் நிறைந்து விட்டால் அது கொலை மரணம் அல்ல, மாறாக அது மரணம் சம்பவித்த செயல் என்று சொல்லவேண்டும் என்று சட்டத்தில் இருக்கிறது.

ஆனால் அதை அன்றைக்கு இருந்த பிரிட்டிஷ் அரசு ஏற்கவில்லை. ஏன் அதை ஏற்கவில்லை. ஏனென்றால் நாடு முழுவதும் கம்யூனிஸ்டுகள் சங்கம் வைத்தார்கள், கோரிக்கை வைத்தார்கள், செங்கொடியை உயர்த்திப் பிடித்தார்கள், சுரண்டலில் இருந்து தங்களுடைய சக தோழர்களை விடுவிக்க வேண்டும் என்று போராடினார்கள். எங்கேயாவது எவனாவது சிக்குவானா என்று அரசாங்கத்தார் எதிர்பார்த்தார்கள். இங்கு ரங்கவிலாஸ் தொழிலாளர்கள் சிக்கினார்கள்.

நாம் இங்கும் வழக்கு நடத்தினோம், உயர்நீதிமன்றத்திலும் வழக்கு நடத்தினோம், அந்த காலத்தில் சுப்ரீம் கோர்ட் இல்லை. லண்டனில் பிரிவியூ கவுன்சில் தான் இருந்தது அங்கும் வழக்கு நடத்தினோம். பிரிட்டனில் மிகச்சிறந்த வழக்கறிஞரை வைத்து நாம் வழக்கை நடத்தினோம்.

ஆனால், இந்த வழக்கு 1946 ஆம் ஆண்டு, ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும் 1945 ஆம் ஆண்டில் இரண்டாம் உலகப்போர் முடிவடைகிறது. 1946 ஆண்டு இந்தியா முழுமையும் விடுதலை இயக்கம் பொங்கி எழுகிறது.

பம்பாயில் கடற்படை புரட்சி நடைபெறுகிறது. கப்பல் படை வீரர்கள் யூனியன் ஜாக் கொடியை இறக்கிவிட்டு நம்முடைய செங்கொடியையும், மூவர்ணக் கொடியையும், பச்சைக் கொடியையும் ஏற்றிவிட்டு, “நாங்கள் சுதந்திர இந்தியாவினுடைய கப்பல் படை வீரர்கள், ஆகவே, எங்களை காப்பாற்றுங்கள்,” என்று சொல்லி காந்தி மகானிடம் போய் மனு கொடுத்தார்கள்.

முகமது அலி ஜின்னாவிம் மனு கொடுத்தார்கள். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி யிடமும் மனு கொடுத்தார்கள். ஏனென்றால் அப்போது மூன்று கட்சிகள் மட்டும் தான் இருந்தது.

காந்தியும், முஹமது அலி ஜின்னாவும் சொன்னார்கள், விடுதலைப் போராட்டத்தை நடத்த வேண்டியது எங்களுடைய வேலை, நீ போய் யாரு காசு கொடுத்து உனக்கு வேலை வழங்குகிறாரோ அவர் சொல்லுகிற வேலையை பார் என்று சொன்னார்கள்.

எல்லோரும் போக முடியாவிட்டால் பரவா யில்லை, முஸ்லிம்களாவது வேலைக்கு போங்கள் என்று ஜின்னா சொன்னார்.

ஆனால், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தான் சொன்னது இந்திய தொழிலாளி வர்க்கம் உங்களோடு துணை நிற்கும், உங்கள் துணையோடு இந்தியாவை நாங்கள் விடுவிப்போம் என்று.

இதே கோவை நகரத்திலிருந்து தொழிற்சங்க இயக்கத்தை கட்டி வளர்த்த பேராசான் என். கே. கிருஷ்ணன். கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை அலுவலகம் மும்பையில் இருந்தது. அங்கிருந்து பணியாற்றினார்.

அதிலிருந்த மொத்தம் ஒன்பது பேரில் அவர் ஒருவர் மட்டும்தான் வெளியில் இருந்தார். மற்றவர்கள் தலைமறைவாகவும், சிறையிலும் இருந்தார்கள்.

என். கே. கிருஷ்ணன் தான் பொறுப்பாகவும் இருந்தார். அன்றைக்கு கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக போராட்டத்தை வழிநடத்தியவர் இந்த கோவை மண்ணில் இருந்து தொழிற்சங்க பணியாற்றிய என்.கே. கிருஷ்ணன் அவர்கள். இந்தியா முழுமையும் மிக பிரம்மாண்டமான வேலை நிறுத்தம் நடைபெற்றது.

தங்களுடைய இன்னுயிரை தத்தம் செய்து நூற்றுக்கணக்கான போராளிகள் இந்திய நாடு முழுமையும் தூக்கு கயிற்றிலே ஏறி, துப்பாக்கி குண்டை நெஞ்சிலே ஏந்தி, லத்தியால் அடிபட்டு செத்து இந்திய சுதந்திரத்தை வாங்கினார்கள்.

ஆனால் துரதிஷ்டம் என்னவென்றால், இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஒருபோதும் பங்கேற்காத, இன்னும் சொல்லப்போனால் அந்தப் போராட்டத்தை காட்டிக் கொடுத்த, எந்த பிரிட்டிஷ்காரனை விரட்டுவதற்காக இந்தியாவினுடைய தொழிலாளர்களும் விவசாயிகளும், சிவப்பு இயக்கமும், காங்கிரசும் சேர்ந்து போராடிக் கொண்டிருந்தோமோ அந்த அந்த பிரிட்டிஷ்காரனுடைய காலடியில் நின்று, அவரது பூட்சை நக்கி கொண்டு இருந்த கும்பல் நம்முடைய தியாகத்தினால் விடுதலை அடைந்த இந்த இந்தியாவில் ஆட்சி பொறுப்பிலே அமர்ந்திருக்கிறார்கள்.

விடுதலை அடைந்தபோது விலாசமே இல்லாமல் இருந்த முதலாளிகள் இப்போது எங்கே இருக்கிறார்கள்? அன்றைக்கு முதலாளியே இல்லாமல் இருந்த ஒரு நாடு, இன்றைக்கு இந்தியாவில் மட்டுமல்ல ஆசியாவிலேயே ஒன்னாம் நம்பர் முதலாளி, உலகத்தினுடைய மூன்றாவது பெரிய முதலாளி எங்கிருந்து வந்திருக்கிறான், இந்தியாவில் இருந்து வந்திருக்கிறான், எங்கிருந்து அவருக்கு சொத்து வந்தது. நமது தொழிலாளர்கள் உழைப்பு.

உலகத்திலேயே பட்டினி கிடக்கிற 116 நாடுகளை பட்டியலிட்டு இருக்கிறார்கள். அதிலே 101 வது இடத்திலே நாம் இருக்கிறோம்.

நமக்கு கீழே 15 நாடுகள் மட்டும் தான் இருக்கிறது. இலங்கை நம்மை விட நல்ல இடத்திலே இருக்கிறது.

பாகிஸ்தான், பங்களாதேஷ் நமக்கு மேலே இருக்கிறது. இவர்களை எல்லாம் விட நாம் மோசமான பட்டினி நாடாக இருக்கிறோமே.

பல கோடி பேர் பட்டினி கிடக்க சில நூறு பேர் பெருமுதலாளி ஆவான் என்றால் அது என்ன வளர்ச்சி?

தொடர்ச்சி 10ம் பக்கம்




Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.